தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

இறத்தல் நன்று!

வில்லெடுத்துப் போரிட்ட விறலெங்கே?
வெற்றிபெறும் மணிமார் பெங்கே?
கொல்லவரும் வெம்புலிமேற் குறிதவறா
எய்கின்ற கூர்வேல் எங்கே?
சொல்லெடுத்துப் பேசிடவும் அஞ்சுகின்றாய்!
சோற்றுக்கு மானம் விற்றாய்!
மல்லெடுத்த இந்திக்கு மருள்கின்றாய்!
தமிழா, நீ இறத்தல் நன்றே!

தி. பி. 1995.
(சிலை) மார்கழி

ருo | காசு

தென்மொழி

தனித் தமிழ்
இலக்கியத் திங்களிதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 2 | மார்கழி தி. பி. 1995 (1964 திசம்பர்) | ஓலை 11.

அரசியல் கோமாளிகள்!

பழங்காலக் கூத்து மேடைகளில் கோமாளி (நகைச்சுவை நடிகர்) ஒருவர் அடிக்கடி வருவார். அவரிடம் மக்களுக்கு மிகுந்த ஈடுபாடும், அன்பும் நிறைந்திருக்கும். அதனால் நன்கு கப் பேசிச் சிரித்து ஆடி நடிக்கின்ற கோமாளியே கூத்தின் தலைவன் தலைவியரைவிட மிகுந்த பாராட்டைப் பெறுவர். அவ ரில்லாத கூத்து பூசாற்றியில்லாத கோயில் போலத்தான் வெறுமையுற்றுக் கிடக்கும். நடிப்பைப் பொறுத்தமட்டில் அக் கோமாளிக்கு மட்டும் ஒரு நடை முறை விலக்கு உண்டு. அவர் கூத்தில் வரும் எல்லா நடிக, நடிகையருடனும் தாராளமாகக் கலந்து கொள்வர். சில காட்சிகளில் தலைவனுக்குத் தலைத் தோழனாக இருப்பார். அடுத்த காட்சியில் தலைவிக்கு முதல் தோழியாக இருப்பார். போர்க் காட்சிகளில் நடைபெறும் வாயுரை வழக்குகளில் சில பொழுது தலைவன் பாங்கிருந்து எதிரிக்கு மாறுகட்டிப் பேசுவார். தேவைப்படும்பொழுது பகை வனின் பாங்கிருந்து தலைவனைப் பகடி செய்து பேசுவார் ஒரே காட்சியிலும் கூட, தலைவன் தலைவியரிடை வரும் ஊடல் உரை யாடல்களில் தலைவன் பக்கம் நின்று அவனுக்குத் துணையாகப்

சிறப்பாசிரியர்: புலவ, பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்.
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்.
உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.
அச்சகம்: மித்திரா, கடலூர்-2.

பேசிவிட்டுப், பிறகு தலைவியிடம் நெருங்கித் தலைவிக்குத் துணையாகத் தாம் முன்னர் பேசிய கருத்தையே எதிர்த்துப் பேசி மக்களைக் கைகொட்டி நகைத்து மகிழச் செய்வார்.

இன்றைய அரசியல் மேடைகளில் ஆடும் சிலரின் நடத்தைகள் அக்கோமாளித் தனத்தையே நினைவூட்டுகின்றன. ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னர், தாம் எழுதும் தூவலில் (பேனுவில்) சிவப்பு மையை ஊற்றிக்கொண்டு ஆளுங் கட்சியினரின் அரசியல் பித்தலாட்டங்களைச்சுடச்சுடக் குத்திக்காட்டிய சிலர், இன்று பச்சை மையை ஊற்றிக்கொண்டு அவர்தம் மனங் குளிரவும், செவி குளிரவும் வழ வழ கொழ கொழ வென்று எழுதி அரசினரின் பாராட்டைப் பெற்றுக் கொண்டு வருகின்றனர். சில கோமாளிகள் இடைத்துணியை இறுக்கிக் கட்டிக்கொண்டு 'எந்தமிழா' செந்தமிழா, புலியே, சிறுத்தையே! எழுந்திடு என்று புலியாட்டங் கட்டிக் கொண்டு போர்ப்பாட்டுப் பாடியவர்கள் இன்று பேராயக்கட்சி முதலைகளின் மகிழ்ச்சிக் கண்ணீருக்காகவும், பணப்பைக்காகவும் 'மொழி வெறி கொள்ள வேண்டா! மாணவர்களே! தாய்மொழி என்று தமிழ் ஒன்றையே கற்று மூளியாகப் போய் மூலையில் உட்கார்ந்து விடாதீர்கள்' என்று திரைப்பட மெட்டில் முழங்குகின்றனர். இன்னுஞ்சிலர் பகுத்தறிவுப் பாசறைகளில் இருந்துகொண்டு பறைசாற்றியவர்கள், இன்று அரசினர் கூட்டிவைத்த குப்பை கூளங்களைத் தூற்றிப் புடைத்து அவற்றில் கிடக்கும் ஓரிரண்டு கூளமணிகளை மக்களுக்கு எடுத்துக் காட்டி 'இதோ பார் அரசினர் விளைவித்த வேளாண்மை' என்று பேசித்திரிகின்றனர். முடிவாகச் சொன்ஞல் மூன்று நான்காண்டுகளுக்கு முன் எவரெவர் எங்கெங்கு நின்றனரோ அவரவரை அங்கங்கே இன்று காண முடியாது. கோள்களைப் போல் நாளுக்கு நாள் இடம் பெயர்ந்து திரிந்து வாய் கொன்னிப் பேசுகின்ற அவர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை இன்னும் இரண்டு மூன்றுண்டுகள் கழித்து அவர்தம் இயக்கங்களைப் பார்ப்போம். ஆஞல் அத்தகையார் எல்லாரும் இன்று ஒருமுகமாகப் பேசிவருகின்ற ஒருமைப்பாடு குறித்துச் சில கூற விரும்புகின்றேம்.

சீனன் இந்தியாவின் வடஎல்லையில் தலைகாட்டியதால் நாம் இழந்த இழப்பு பெரிதென்றுலும் அதஞல் விளைந்த விளைவு குழம்பிய அரசியல் குட்டையில் பதவி மீன் பிடிக்கும் தில்லுமல்லுக்காரர் சிலரைக் கீழ்மேலாக ஒரு புரட்டுப் புரட்டிவிட்டது. அதஞல் பூனைகளெல்லாம் புலிப் புனைவு கட்டிக் கொண்டன. நரிமாக்களெல்லாம் அரிமாக்களாகி உலா வருகின்றன. எங்கும் ஒற்றுமை ஒருமைப்பாடு என்று தம்பட்டம் அடிக்கப் படுகின்றது. பொன்னகைகள் (வேட்டெஃகம் (துப்பாக்கி) ஆகவும், தகரி (பீரங்கி) களாகவும் உருமாறி வெடிக்கத் தொடங்கின. கையிலிருந்த திருட்டுப் பொருள்களெல்லாம் அரசினர் விரித்த

மடிகளில் நன்கொடைகளாகப் போய் விழுந்தன. குப்பைத் தொட்டிகள் கூரைமேல் ஏறின! கூரைகள் மாளிகைகளோடு குலவுகின்றன! இத்தனை ஆள்மாருட்டங்களாலும் அரவங்களாலும், தலை நீட்டிய சீனன் தலையை வெடுக்கென எடுத்துக் கொண்டானு? இல்லை; இப்பொழுதுதான் வெடிக்கத் தொடங்கியுள்ளான். ஆக, சீனனைக் காட்டி ஒருமைப்பாடு பேசப்படுகின்றது; வளர்க்கப்படுகின்றது! இக் குழந்தைப் பூச்சாண்டி எத்தனை நாளைக்குப் பயன்படும் என்பது அரசினர்க்கே நன்கு தெரியுமாதலால்தான், சீனன் நீட்டிய தலையை இழுத்துக் கொள்வதற்குள் சுறுசுறுப்பாக இங்கு ஒருமைப்பாடு (!) வளர்க்கப் பெறுகின்றது. அதன் தலையாய முயற்சிகளில் ஒன்றுதான் இந்தி நுழைப்பு என்ற போலி இணைப்பு!

இப்படி நாம் பேசுவதால் நம் நாட்டில் கால்வைத்த சீனனைக் கைகுலுக்கி வரவேற்கின்றோம் என்று நினைத்துக் கொள்ள வேண்டா. அந்த இரண்டக நிலைக்கு நம் உடல், உள்ளம், உணர்வு இவற்றில் ஒருபொழுதும் எவ்வகையான மாறுபாடும் ஏற்பட்டு விடாது. ஆனுல் பூச்சாண்டி வருகின்றது; சோற்றை விழுங்கு! "என்று குழந்தைக்குச் சொல்லும் அச்சுறுத்தல் போலாகிலும் அமையாமல், அதோ பார் கொலைகாரன்! நீ என்னை மணந்து கொள்வதாகச் சொல்!" என்று சூழ்நிலையைக் காட்டிக் கற்பை விலைகேட்கும் கயவரைப் போல், சீனனைக் காட்டி ஒருமைப்பாடு மிக இன்றியமையாதது, நீ இந்திபடி; கட்டாயம் படி; என்பார்களானுல் அந்நிலை, முன்நிலையைவிடக் கொடிய தென்றே நாம் பல்லாற்ருனும் வலிந்து கூறி வருகின்ருேம். அரசியல் கோமாளிகள் கூறும் பகடிப்பேச்சுப் போலன்றி, உண்மையாக இந்திய நாட்டுக்கு ஊறு வருமானுல் நாமெல்லாரும் ஒருங்கிணைந்து எதிர்ப்போம் என்ற உண்மையுணர்வோடு பேசுகின்ற மெய்க்கூற்ருகும் அது. மொழி ஒன்ருல் தான் ஒருமைப்பாடு கிட்டுமென்ருல் அதற்கு ஆங்கிலமே போதாதா? இந்திய நாட்டில் பிற நாட்டான் மொழியாகிய ஆங்கிலமா ஒற்றுமை வளர்த்துச் சீனனை விரட்டியடிப்பது என்ருல், பிறநாட்டானின் வேட்டெஃகங்களையும், தகரிகளையும், குண்டுகளையும், வான்படைகளையும், கப்பற்படைகளையும் நம்பியே நம் இந்தியப் பட்டாளங்கள் நம் மண்ணைக் காக்க வேண்டியுள்ள பொழுது, அவன் மொழி மட்டும் நா் ஒற்றுமைக்குத் துணை நிற்பதில் என்ன தவறு என்று புரியவில்லை அவனிடம் போய்ப் பல்லைக் காட்டிப் பல்லாயிரக் கணக்கில் கடனுகவும் இலவசமாகவும் பணமும் படைகளும் பெற்று வரலாம்; ஆனுல் இலக்கிய வளமும் அறிவியல் வளமும் பொதிந்து உலகெங்கணும் பரந்து வழங்கி வரும் ஆங்கில மொழி மட்டும் வேண்டாவா? இத்தகைய நாட்டுப் பற்றுக்கும் மொழி மானத்துக்கும் என்னபெயர் வைப்பதென்றே நமக்குப் புரியவில்லை.

நாம் தமிழைக் காப்பதற்கும், இந்தியை எதிர்ப்பதற்கும் ஆங்கிலத்தை வரவேற்பதற்கும் காரணங்கள் வெவ்வேறு. மொழிப்பற்றுக்கும், அடிமை வாழ்விற்கும், இன, குல வெறிகளுக்கும் வேற்றுமை தெரியாத மொழிக் குருடர்களுக்கு உண்மைத் தமிழ்ப் பற்றுளர்களின் நடுநிலையான போக்குக் கூட 'வெறி' யாகப் படலாம். அவ் வரசியல் குருட்டுக் கோமாளிகளை நம்பி இந்திய நாட்டு அரசினர் இந்தியை வலிந்து புகுத்துவார்களானால் இன்னும் பத்தே ஆண்டுகளில் இந்திய ஆட்சித்தலைமை கட்டாயம் மாற்றப் பெறும் என்பதை, இப்பொழுது நிறுத்தப் பெற்று வருகின்ற அரசியல் தலைவர்களின் கற்படிமங்களுக்குக் கீழே பொறித்து வைத்துக் கொள்வார்களாக. மொழிப்பற்று வெறியாகாது. அதேபோல் மொழிவெறியும் நாட்டுப் பற்றாகாது. எதையும் வெறித்தனத்தோடு பார்க்கின்ற கண்ணர்க்கு எல்லாம் வெறிச் செயலாகவும், எல்லாரும் வெறியர்களாகவுமே தெரியும். ஒருமைப்பாட்டுப் போர்வைக்குள் உடலை மறைத்துக் கொண்டு குடலைக் கழுவித் திரியும் இரண்டக உள்ளம் கொண்ட தந்நலக் காரர்களே, இப்பொழுது அரசியல் மேடைகளில் ஏறி ஆட்டங் காட்டி வருகின்றனர். அவர் தம்மின் கை வலிவால் நடுவண் அமைச்சர்கள் ஏமாறும் நாள் மிகத் தொலைவில் இல்லை.

ஒருமைப்பாடு உண்மையாகவே வளர்க்கப் பெற வேண்டுமானால் இந்திமொழியின் பேரழுத்த வல்லாட்சி உடனே தடுக்கப் பெறல் வேண்டும். அரசியல் சட்டமுறையில் தேசிய மொழிகள் என்று கருதப்பெறும் பதினான்கு மொழிகளுக்கும் ஒரே அளவான ஆக்கம் தருதல் வேண்டும். தங்கள் தங்கள் மொழிக்கு வரும் கேடுகளைத் தங்கள் தங்கள் இனத்துக்கே வந்த கேடாகக் கருதிக் கொள்ளும் அச்சம் தவிர்க்கப் பெறல் வேண்டும். அச்சந் தெளிந்த நிலையில்தான் மக்களுக்கு ஆட்சியாளர் மேல் நம்பிக்கை பிறக்கும். அந்த நம்பிக்கை மேல் கட்டப் பெறும். ஒருமைப்பாடுதான் எத்தகைய பகையையும் மாய்க்கும் உறுதி பெறும். அதன் பின்தான் நாட்டின் ஆக்கமும் வளம் பெறும் இம்முறைகளாலன்றி வெறும் பட்டாளத்தையும் அதன் கையிலுள்ள கட்டாரிகளையும் வெடிகுண்டுகளையுமே நம்பி மக்களை ஒருமைப்பாட்டுக் கயிற்றால் கட்டமுனையும் செய்கை குதிரைக்காரன் வேட்டை நாய்களை ஏவி, ஆட்டு மந்தையை வளைப்பது போன்றது. இத்தகைய அரசியல் வேட்டைகளில் நம்பிக்கை வைப்பார் உருசிய, பாக்கித்தானிய, இலங்கை அரசுகளையும் அவற்றின் ஆட்ட நிலைகளையும் ஒரு முறை நினைவு பார்த்துக்கொள்ள வேண்டுகின்றோம்.

மறந்துவிட வேண்டா; சனவரி 26- தமிழர்க்கு வாய்ப்பூட்டுப் போடப்படும் நாள்!

பக்தவத்சலமும், சமற்கிருதமும்!

சென்னை முதலமைச்சர் திரு. பக்தவத்சலத்தை எதிர்-
காலத் தமிழக மக்கள் மறவாதிருக்குமாறு அவர் செய்த,
செய்கின்ற, செய்யவிருக்கின்ற நரித்தனங்கள் சில உண்டு.
அவற்றுள் தமிழ்நாட்டில் இப்பொழுது இருந்துவரும் இந்தித்
திணிப்பும், கோயில் பெருக்கமும், அரிசி முட்டுப்பாடும்
முதன்மையாகும். இந்தித் திணிப்பு இவர்க்கு முந்தைய
தலைகளின் காலத்திலேயே இருந்ததென்றாலும் சட்டப்படி
இந்தி பிற மாநிலங்களைக் காலில் போட்டு மிதிப்பது இவர்
காலத்திலேயே! கோயிற்பணிகளைப் பொறுத்தமட்டில்,
தமிழ்நாட்டில் உள்ள முத்தமிழ்க்காவலர், செந்தமிழ்க்காவலர்
முதலிய காவலர்களைப் போன்றே அறநெறிக் காவலர் என்ற
பட்டத்தை, திரு. பக்தவத்சலமே தாங்கத் தகுதி (!) உள்ளவர்.
இறைப்பற்று மிகுந்தவர் என்று அவரைப்பற்றிச் சொல்லப்
பெறுகின்றது. உண்மையோ பொய்யோ நாமறியோம்.
ஆனால் கோயில்களையும், அங்குள்ள கற்படிமங்களையும்,
அவற்றைக் காக்கும் திருப்பணி (!) யார்களையும் பற்றி அவர்க்
கிருக்கும் அக்கறை அரசியலில்கூட இருக்குமா என்பது
ஐயமே! கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு
உடைப்பதில் இவருக்கு நிகர் இவரே! திருப்போற்றிகளின்
இடையில் தாமும் அத் திருக்கோலத்தோடு நின்று படம்
பிடித்துக்கொள்வதில் இவர்க்கு அத்துணை விருப்பம். ஒவ்
வொரு கோயிலிலும் பக்தவத்சலனார் படம் தொங்குவதைக்
கண்டு நாம் பெருமை (!)ப் படுகின்றோம். சென்னை
வானொலியில் முழங்கும் போற்றிப் பாடல்கள் ஒவ்வொன்
றிலும் இவரின் முத்திரையைக் காணலாம்.

இத்தனைப் பெருமைகளுக்கும் காரணமாக விளங்கும்
திரு. பக்தவத்சலனாரின் செயல்களுக்கு மணிமுடியாகத்
திகழும் ஒரு செயலை அண்மையில் அவர் செய்துள்ளார்.
அதுதான் சமற்கிருதத்தின்பாற் காட்டும் பரிவு: அக்கறை!
அண்மையில் உச்சயினியில் நடந்த காளிதாசர் விழாவில்
கலந்துகொண்டு 'சென்னைப் பள்ளிகளில் இனி சமற்கிருதம்
விருப்பப் பாடம் ஆகும்' என்று கூறியதும், சென்னை
மாநிலக் கல்லூரியின் சமற்கிருதக் கல்வியின் மேற்படிப்புத்
துறையின் பொன்விழாவில் கலந்துகொண்டு திரு. சி. பி.
இராமசாமியின் முன்னிலையில் அவர் உச்சி குளிருமாறு
சமற்கிருதத்தின்மேல் காட்டப்பெறும் வெறுப்புக்குக்
கண்டனம் தெரிவித்துப் பேசியதும் அவர்தம் சமற்கிருதச்
சீர்திருத்தத்தைக் காட்டும். 'இவரின் துணிவையும் அற
நிலையப் பணிகளையும் சமற்கிருத வளர்ச்சியில் காட்டும்

அக்கறையையும் திரு. சி. பி. மிகுவாகப் பாராட்டி, 'பக்தவத்சலத்தின் பதவிக் காலத்திலேயே சமற்கிருதம் போதிய கவனத்தைப் பெறவில்லையானால் பின்னர் அம்மொழிக்கு முன்னேறும் வாய்ப்பே இராது' என்று குறிப்பிட்டதே இவரின் திருப்போற்றித் தனத்திற்குப் போதுமான சான்றாகும். பார்ப்பனர்தம் ஒருமுகமான ஒப்போலைகள் (Vote) முழுவதும் அடுத்த தேர்தலில் இராசாசி காட்டிய பெட்டியில் விழாமல், இவர் பெட்டியில் விழப்போவது உறுதி. பொதுமக்களின் வரிப்பணத்தை இவர் அறநெறி என்ற பெயரால் கோயில் திருடர்களுக்குத் தருவது கண்டிக்கப்பெற வேண்டியதாகும். இத்துடன் இவர் இக்கால் புதைக்கப்பெற்ற சமற்கிருதப் பிணத்தைத் தோண்டி மருத்துவ ஆய்வு செய்வதும் தடுக்கப்படவேண்டியதொன்றாகும். தமிழகத்தில் சமற்கிருதம் செய்த கேடுகள் பல. தமிழர்களைத் தாழ்த்தியதும், அவர்களுள் பகைமூளச் செய்ததும், ஒன்று பலவாகிய மொழிப்பிரிவுகளையும் குலப்பிரிவுகளையும் ஏற்படுத்தியமையும் அவற்றுள் சில. தமிழர்களின் மான உணர்வுக்கும், விடுதலை எழுச்சிக்கும், உறவாண்மைக்கும் அவர்தம் மொழியே காரணம் என்று கண்டுகொண்ட வடவர், தம் ஆட்சிக்கயிற்றால் பக்தவத்சலம் போன்ற பாவைகளைக் கட்டி ஆட்டப்பெறும் பாவைக் கூத்து முடிவுறும் நாள் நெருங்கிவிட்டது என்றே கருதுகின்றோம். தமிழினத்தையே அழிக்கத் திட்டமிட்டுள்ள தில்லியரசின் நெஞ்சமுழுத்தமான இந்தித் திணிப்பே அதன் திருப்போற்றியான பக்தவத்சலத்திற்கு இத்துணை வலக்காரத்தைக் கொடுத்தது என்றால் அதில் வியப்பில்லை. திருவாட்டி பண்டாரநாயகாவின் முடிவைத் திரு. பக்தவத்சலனார் நினைத்துப்பார்க்க வேண்டுகின்றோம்.

முகவர்கள் கவனிக்க

தொடர் நிலையம் (Railway Station) இல்லாத ஊர்களுக்கு அஞ்சல் வழியேதான் சிப்பங்கள் விடுக்கப் பெறுகின்றன ஒவ்வோர் ஆங்கில மாதமும் 16-ஆம் நாளில் மட்டுமே சலுகைக் கட்டணத்தில் சிப்பங்களை அனுப்ப அரசினர் இசைவு உண்டு. எனவே ஆங்கில மாதம் 16-ஆம் நாளுக்குள் பட்டியல் பணத்தை விடுத்துவிடும் முகவர்கள் மட்டுமே உரிய நாளில் இதழ்களைப் பெறுவர். 16-ஆம் நாளுக்குமேல் பணம் விடுக்கும் முகவர்களுக்கு, அடுத்த மாத இதழுடன் சேர்த்தே இதழ்கள் விடுக்கப்பெறும். அல்லாமல் 16-ஆம் நாளுக்குமேல் பணம் அனுப்பி இதழ்களைப் பெற விரும்புவோர் முழு அஞ்சற் கட்டணத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அமைச்சர், தென்மொழி.

நூல் நிறை

*

மலர் (பாடல்கள்)
எழுதியவர் "வெள்ளல்". விலை 50 காசுகள்
வானம்பாடி வெளியீடு. 58, சுப்பிரமணியபுரம்,
ஆரணிச்சாலை, வேலூர். வ. ஆ.

பெரும்பாலும் இயற்கைப் பொருட்களை விளித்துக் கூறுவதாக அமைந்துள்ளன இப்பாடல்கள். அவ்வப் பொருள்களை நிலைக்களனாகக் கொண்டு தொடர்புடைய பல கருத்துகள் கூறப்பெறுகின்றனவேயல்லாமல், கற்பார் உள்ளம் தோய்ந்து மகிழும் வகையில் இயற்கையின் உள்ளுயிர்ப்பை நமக்களிப்பனவாக இல்லை இப்பாடல்கள். நயமற்ற பல அடிகட்கிடையே ஆங்காங்கு ஒரு சில கற்பனைகள் சற்றே பளிச்சிடுகின்றன. ஆயினும் பாடல்களில் உயிர்ப்பில்லை. இலக்கணப் பிழைகளும், சொற்பொருள் நோக்காமையும், யாப்புக்காக வேண்டாத வெற்றுச் சொற்களைப் புகுத்தியும் சொற்றொடர்களை நீட்டியும் பொருள், சொல்நயத்தைக் குறைத்துக்கொள்ளுதலும் பாடல்களின் எடுப்பின்மைக்குக் காரணங்களாம்.

மருத்துவ ஞாயிறு (பாடல் நூல்)
ஆக்கியோன் புலவர்: ம. இராமசாமி,
திருச்சுழி, முகவை மாவட்டம்.

ஆசிரியர் தம் சிறுவனை வேலூர் அமெரிக்க மருத்துவ மனைக்கழைத்துச் சென்று நோய் நீக்குவித்த கதையைக் கூறுகின்றார். மருத்துவ மனையினையும், ஆங்குப் பணியாற்றும் இருமூன்று மருத்துவர்களையும் புகழ்தற்கெனவே இந்நூல் யாக்கப்பெற்றுள்ளது. மருத்துவர் ஒருவரைப் புகழுகையில் அவரையன்றி நன்மருத்துவமே உலகில் இல்லை எனவும், மறுநொடி அவரினும் மிகுதியாக மற்றொரு மருத்துவரைப் புகழ்தலும் உண்மைப் பாராட்டுக்கு அடையாளமாகத் தெரியவில்லை. பாடல்களும் உள்ளத்திற் படியவில்லை. தமிழக மக்கட்கு, எழுச்சியும் விடுதலை மறமும் தேவையான இக்காலத்தில், தனியுணர்வால் தனிவாழ்க்கையின் நிகழ்ச்சியில் தம் நன்றியுணர்வைக் காட்டவேண்டி எழுதப்பெற்ற இத்தகைய நூற்கள் பிறர்படித்துப் பயனடையத் தக்கன அல்ல என்றே கூறல் வேண்டும்.

"கல்லாடன்"

உளம்புகுந்த தமிழச்சி!

துரை. மாணிக்கம்

திருமிகுந்த உருவுடையாள்; சீரமைந்த சொல்லாள்!
தேன்கசியும் மொழிநிறைந்தாள்! திட்பநுட்ப முள்ளாள்!
பருமிகுந்த உட்பொருளும், பயன்மிகுந்த உரையும்,
பல்சுவையும் நிறைந்தொளிரும் திறமிகுந்த பேச்சும்,
கருமிகுந்த மெய்யுணர்வும், கனிவுநிறை அன்பும்
களிப்பெழுந்து பொங்குகின்ற காதலினை நோக்கும்
தருமிகுந்த மகிபடைத்தாள்! தமிழெனும்இன் பெயராள்
தமியனெனை இளமையிலே கண்டுளத்தை வென்றாள்!

தொல்குடிமைப் பிறப்புடையாள்; ஓங்குசிறப் புடையாள்;
தோல்வியிலாப் பாண்டியர்தம் குலக்கொடியின் வித்து!
பல்புலவர் தமிழ்மடியில் பயின்றுவினை யாடிப்
பாடலிலே உளந்திளைத்துக் கண்வளர்ந்த செல்வி!
வெல்மறவர் தோள்களிலே மறம்வளர்த்த வல்லி;
வேற்றுவரும் சீர்மடுத்தே ஏற்கவரும் நங்கை;
மல்குபெரும் பேறுடையாள்! மன்னுதமிழ்ப் பெயராள்!
மயலறியாப் போதிலந்த மங்கையெனை வென்றாள்!

இலக்கணத்துப் புலமையினள்! இலக்கியங்கள் கண்டோள்!
எவ்வெவரும் வியந்துரைக்கும் பொருள்விளக்கம் பெற்றாள்!
துலக்கமிலாப் பிறமொழிகள் தோன்றுமுனந் தோன்றித்
துலங்கியசீர்த் தன்மையினள்! இளமைவளங் குன்றாள்;
கலக்கமறு நல்லறநூல் விளக்கமுறக் கற்றாள்!
காதலுக்குத் தாய்மையினள்! சாதலிலா நல்லாள்!
குலக்கொழுந்து நிறைவுடையாள்! கொழுந்தமிழென் பெயராள்!
கொஞ்சுமொழி கூறியிள வஞ்சியெனை வென்றாள்!

செங்கனிவாய்க் கிள்ளையினைச் சிறுமைசெயு மியலாள்;
சீருயர்ந்த குயின்மொழியைக் கொடுமைசெயு மிசையாள்;
பொங் ணர்வால் துடிப்புறுநற் கூத்தியக்கும் வல்லாள்;
புதுக்கலைக்குஞ் சலிப்படையாப் புத்திளமைக் காரி!
தங்குயர்தொல் காப்பியமும், தொகையெட்டும் பத்துத்
தனித்தமிழ்சேர் பாட்டுகளும் பதினெண்கீழ்க் கணக்கும்
மங்கையறி வாளவற்றை விழைந்தவர்க்குஞ் சொல்வாள்;
மனந்துலங்கா இளமையிலே எனைவளைத்துக் கொண்டாள்!

உளமறிந்து வந்தவளை உவந்துவர வேற்றேன்;
உணர்வளித்து நான்வளர இலக்கியப்பால் ஊட்டி
வளமையுற உயிருவக்கும் மெய்யுணர்வைக் கீண்டு
வயங்குதமிழ்த் தேன்பிழிந்தே எனைச்சுவைக்க வைத்தாள்!
அளவகன்ற அவள்பெருமை அத்துணைக்கும் வேட்கை;
ஆயினும்என் செய்குவன்யான்? வளர்ச்சியுறுப் பிள்ளை!
பிளவுபடாத் தொடர்புகொள வேண்டுகின்றேன் யாண்டும்;
பிணி,உறக்கம், சாவு,ஒடுக்கம் இவற்றினுக்கென் செய்வேன்?

உயிர்களிடையே கூட்டு வாழ்க்கை

பேராசிரியர் சா. மு. ஆபிரகாம்,
விலங்கியல் துறை, அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

இன்றைய உலகில் ஒரு சிறிய செயலின் பொருட்டும் மக்களிடையேயும் குழுகங்களினிடையேயும் மன வருத்தம் ஏற்படுகின்றது; பூசல்கள் வளர்கின்றன. நாடுகளுக்கிடையே போர்களும் நிகழ்கின்றன. சிலபொழுது பெரிய நாடு அண்மையில் உள்ள சிறுநாடுகளை விழுங்கிவிடுகின்றது. இஃது இயற்கையின் முறைமை என்று அறிஞரும் அரசியல் வாணரும் இயம்புகின்றனர். இதற்குச் சான்ருக, சார்லசு டார்வினின் 'இயற்கைத் தேர்வு' (Natural Selection) 'வாழ்க்கைப் போராட்டம்' (Struggle for existense) 'தகுதியுள்ளவை தப்பிப் பிழைத்தல்' (Survival of the fittest) எனும் கொள்கைகளை எடுத்துரைக்கின்றனர். ஆனால் சண்டையிடுவதுதான் இயற்கை யன்னையின் முறைமையாயிருக்குமானுல் இதற்குள் உயிர்கள் யாவும் மாண்டு ஒழிந்து போயிருக்கும். வாழ்க்கைப் போரே இயற்கைச் சட்டம் என்பது தவறு. ஏறக்குறைய அறுபத்திரண்டு ஆண்டுகட்கு முன்னர் உருசிய நாட்டு அறிஞர் பிரின்சு கிரபாட்கின் (Kropotkin) என்பவர் உயிர்கள் ஒத்து வாழ்கின்றன. ஒன்றுக்கொன்று உதவுகின்றன என்ற உண்மையை உலகுக்கு முதலாவதாக எடுத்துரைத்தார். அவருக்குப் பின், செருமனி நாட்டவரான 'டிசீனர்' என்பார் 'உயிர்களிடையே கூட்டு வாழ்க்கை உண்டு; அக்கூட்டு வாழ்க்கையால் நல்ல விளைவும் உண்டு" என்று கண்டுரைத்தார். இயற்கையில் பெரிய மீன் சிறிய மீனைப் பசியின் கொடுமையால் உண்ணுதல் உண்டு. ஆனுல் அம்மீன்களும் ஒன்றுக்கொன்று பல்லாற்ருனும் உதவுகின்றனவென்பதை மறக்கலாகாது. சார்லசு டார்வின் 'வாழ்க்கைப் போராட்டம்' என்ற கொள்கையை உருவாக்கியபொழுது, எவ்வாறு பல்லுயிர்களும் மாந்த இனத்திலும் காணப்படாத பண்பாட்டுடன் வாழ்கின்றன என்பதை உலகு அறியவில்லை. அத்துறையில் ஆராய்ச்சியும் அக்காலத்தில் இல்லை. ஆனுல் இப்பொழுதோ அலி (Allee) முதலிய உயிர்நூல் வல்லுநரின் அரும்பெரும் உழைப்பினுல் இவ்வாராய்ச்சியில் முன்னேற்றம் காணப்பெற்றுள்ளது. கூட்டு வாழ்க்கை, உயிர்கள் நன்கு வளர்வதற்கும், இனப்பெருக்கம் செய்வதற்கும் இன்றியமையாதது என்று உயிர்நூலறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். இதற்குச் சில சான்றுகள் தருதும் :

பொன்மீன் (Gold Fish) என்பது அழகிய, பொன்னிறமுள்ள மின்னும் மீன். வீடுகளில் கண்ணாடித் தொட்டிகளில் பொழுதுபோக்காக வளர்க்கப்படுவது. ஓர் ஆய்வாளர் பத்துப் பொன்மீன்களைக் கூட்டாக, கொல்லாய்டல் சில்வர் (Colloidal Silver) என்ற நச்சுப் பொருள் கரைசல் உள்ள ஓர் ஏனத்தில் இட்டார். அதே பொழுதில் அதே அளவு காரம் வாய்ந்த நச்சுப் பொருட் கரைசல் கொண்ட பத்து ஏனங்களில் மற்றும் பத்து மீன்களை ஏனத்திற்கொன்றாகத் தனித்தனியே இட்டார். தனித்தனியாக இடப்பட்ட மீன்கள் 182 நிமயங்களில் இறந்தன. கூட்டாக இருந்த மீன்கள் இறக்கவோ 507 நிமயங்கள் ஆயின. காரணம் என்ன ? தொகுதியாக இருந்த மீன்கள் தத்தம் உடம்பிலிருந்து சளிப் பொருளைச் சுரந்தன. அப்பொருள் நச்சுப் பொருளோடு கலந்து அதன் நச்சுத் தன்மையை மட்டுப்படுத்திவிட்டது. தனித்தனி இருந்த மீன் ஒவ்வொன்றும் தனித்தனி சிறிதே சளிப்பொருளை உண்டு பண்ணியது. சிறிதளவான அச் சளிப் பொருள்கள் நச்சுப் பொருளின் நீர்மையைக் குறைத்தல் முடியவில்லை. ஆதலால் ஒவ்வொன்றும் உயிர் நீத்தது. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பது இதனால் அறியப் படும். இவ்வகை ஆய்வு பிளனேரியா (Planaria) என்ற புழு இனத்திலும் நடத்தப்பெற்றுள்ளது. ஆய்வாளர் பத்துப் புழுக்களை 5 பரும மில்லி மீட்டர் நீருள்ள கண்ணாடித் தொட்டியில் இட்டார். வேறு பத்துப் புழுக்களை அதே அளவு நீருள்ள பத்துத் தொட்டிகளில் தொட்டிக்கொன்றாக இட்டார். எல்லாப் புழுக்களின் மேலும் புறஊதாக் (Ultra Violet) கதிர்களைப் பாய்ச்சினர். ஒரே தொட்டியிலிருந்த பத்துப் புழுக்கள், ஒன்றின் நிழல் பிறவற்றின் மேற் பட்டமையால் சாகவில்லை. தனித்தனியாக வைக்கப் பெற்ற புழுக்கள் அக் கொல்கதிர்களால் விரைந்து தாக்கப் பட்டுச் செத்தன.

உயிர்கள் வளர்வதற்கும் கூட்டு வாழ்க்கை இன்றியமையாதது. கண்ணாடித் தொட்டிகளில் வளர்க்கப்படும் மீன்களோடு நத்தை போன்ற பிற உயிர்களையும் விட்டு வைத்தல் நன்று என்று மீன் வளர்ப்பார் நவில்வர். ஈண்டு அலி (Allee) என்னும் உயிரியல் வல்லுநர் நடத்திய ஓர் ஆய்வைப்பற்றி வரைவோம். அவர் நீருள்ள ஒரு கண்ணாடித் தொட்டியில் சில மீன்களை இட்டார். அம்மீன்கள் வாழ்ந் தமையால் அந்நீர் கலங்கிய தோற்றமளித்தது. அந்நீருக்குப் "பதன் செய்த நீர்" (Conditioned Water) எனப் பெயர் கொடுத்தார் அலி. அதே சமயம், மற்றொரு தொட்டியில் மீன்களில்லாமல் நீர் மட்டுமே நிரப்பிவைத்துக்கொண்டார். பின்னர் இரண்டு தொட்டிகளிலும் வேறு சில மீன்களை

இட்டார். பதன் செய்யப்பட்ட நீரிலிருந்த மீன்கள் நன்கு வளர்ந்தன. மற்றொரு தொட்டி நீரிலிருந்த மீன்கள் நன்கு வளரவில்லை. காரணமென்னவெனில் – பதன் செய்யப்பட்ட நீரில் முந்தி இருந்த மீன்கள் தேவைக்கு மிகுதியாக உண்ட உணவைக் கக்கினமையால் நுண்ணுணவுத் துகள்கள் நீரிலே கலந்திருந்தன. (நீருக்குக் கலங்கிய தோற்றம் உண்டானதும் அதனாலேயே). இவ்வுணவுத் துகள்களைப் பின்னர் இடப்பட்ட மீன்கள் உண்டு நன்கு வளர்ந்தன. அதோடு, நீர் பதன் செய்யப்படுவதற்குக் காரணமாக இருந்த மீன்களின் உடம்பினின்று வெளிப்போந்த வளர்ச்சி யூக்கும் எச்சப்பொருளும் பின்னர் இடப்பட்ட மீன்கள் வளர உதவியது. வால் வெட்டப்பட்ட மீன்கள், பிற மீன்களோடு உறைந்தபொழுது சிறிது காலத்திலேயே அவற்றின் வால்கள் மீண்டும் வளர்ந்தன. அஃதேபோல் வாலிழந்த தவளையின் வேற்றிளவுயிர்கள் (Larva) தம்மினத்தில் கூட்டாக வளர்ந்தபொழுது மிக விரைவில் தத்தம் வால்களை மறுபடியும் பெற்றன.

கடற்கரையோரங்களில் ஆலாப்பறவைகளை (Sea-Gulls)ப் பார்க்கலாம். அவை கூடிவாழும் தன்மையன. ஒரு கூட்டரவில் உள்ள ஆலாப் பறவைகளின் எண்ணிக்கைக்கும், அவற்றின் வாழ்வியக்கங்கட்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்று பிரேசர் டார்லிங் (Frazer Darling) என்ற புள்ளாய்வாளர் கண்டார். சிறிய கூட்டங்களில் வாழ்வதினும் பெரிய கூட்டங்களில் வாழ்க்கையில் இப் பறவைகள் விரைந்து கலவியி லீடுபடுகின்றன. சான்றாக, ஈரிணை ஆலாப் பறவைகள் மட்டும் ஒரு குடியேற்றத்தி லிருந்தபொழுது, கூடுகள் கட்டப்பட்டன. ஆனால் முட்டைகள் இடப்படவில்லை. மூன்றிணைகள் அக்குடியேற்றத்தில் இருந்தபொழுது அவை முட்டைகளிட்டன. குஞ்சுகள் பொரித்தன. ஆனால் குஞ்சுகள் இறகு முளைக்கும் நிலையைக்கூட அடையவில்லை. பெரிய கூட்டங்களிலோ முதற்புள் முட்டையிடுவதற்கும் கடைசிப் பறவை முட்டையிடுவதற்கும் (காலம்) கொஞ்சம்தான் ஆகிறது. குஞ்சுகளின் வாழ்க்கையிலேயே, குஞ்சு பொரித்தலுக்கும் முதலிறகு தோன்றுவதற்கும் இடையேயுள்ள காலம், ஒரு நெருக்கமான காலம் எனலாம். ஏனெனில் அக்காலத்திற்றான் புலாலுண்ணிகள் பறக்கமுடியாப் பச்சிளம் பார்ப்புகளைப் புசித்துவிடுகின்றன. பின்னும் ஒரு சிறு குஞ்சு தன் கூட்டைவிட்டுப் பிறிதொரு கூட்டிற்குச் செல்லுமானால் குடியேற்றத்திலுள்ள மற்றப் பறவைகளாற் கொத்திக் கொல்லப்படும். ஆகையால் குஞ்சுகள் பொரிப்பதற்கும், குடியேற்றத்திலுள்ள கடைசிக் குஞ்சு இறகு முளைத்துச்

சிறகடித்துப் பறப்பதற்கும் உள்ள இடைக்காலம் எவ்வளவு குறைந்துள்ளதோ அவ்வளவு குஞ்சுகள் மடிவதும் குறையும். இது பெருங்கூட்டமாய் வசிக்கும் ஆலாப் பறவைகளிடையேதான் நிகழ முடியும் என டார்லிங் முடிவுக்கு வந்தார். கூட்டுப் பயனுக்கு மற்றோர் எடுத்துக் காட்டுத் தருதும்: கறுப்பு எறும்புகள் தரையின்கீழ் கூடு கட்டி வாழ்வன. அவற்றுள் "வேலைக்கார எறும்புகள்" தனிமையிலும் தத்தம் ஊழியத்தை நன்கு ஆற்றக்கூடியன. சென் எனும் ஓர் ஆய்வாளர் இவ்வெறும்புகளிற் சிலவற்றைக் குறியிட்டு, அவை தனிமையாகவும் கூட்டாகவும் எவ்வளவு மண்ணைத் தம் வளையினின்று வெளியேகொண்டு வருகின்றன வென்று நுனித்தறிந்தார். ஓர் எறும்பு தனியாய்க் கொணர்ந்த மண்ணைவிட, இணையாகவோ அல்லது மூன்றாகவோ உழைக்கும்பொழுது மிகுந்த மண்ணை வெளியே கொண்டு வந்து குவித்தது. ஆகவே ஒத்துழைப்பு உயிர்கள் வாழ்வதற்கு இன்றியமையாதது என்று அறியப்படும். இன்னும் எத்தனையோ எடுத்துக்காட்டுகள் கூறலாம். காடுகளில் புலி, சிறுத்தை முதலிய புலாலுண்ணிகள் மான், மரைகள் போன்ற புல் பூண்டுண்ணிகளை கொல்ல முயலும்பொழுது என்ன நேரிடுகின்றது? மாற்றலரைக் கண்டவுடனே அக் கூட்டத்திலுள்ள ஆண் விலங்குகள் வட்டமாக நிற்கின்றன. வட்டத்தினுள்ளே குட்டிகள் பெண் விலங்குகள் நிற்கின்றன. வந்த புலாலுண்ணி பின்வாங்கிவிடுகின்றது. உயிரியல் வல்லுநர், இவ்வாறு பல உயிர்கள் கூடி வாழும்பொழுது ஒன்றையொன்று பல்லாற்றானும் தூண்டுகின்ற செயலைக் குமுகத் தூண்டுதல் அல்லது கூட்டுப் பயன் (Social Facilitation) என்பர்.

மக்கள் நாகரிகமே வெவ்வேறு நாட்டு மக்களின் ஒத்துழைப்பினாலுண்டானது என்பதை மறத்தல் இயலாது. அறிவியல் முன்னேற்றமும் பன்னாட்டு அறிஞர்களின் அயர்வில்லா முயற்சியின் பயனே என்பதையும் நாம் மறுத்தல் இயலாது. ஆனால் நன்மைக்காக மேற்கொள்ளப்பெறும் அம்முயற்சி சில வேளைகளில் தீமையினையும் விளைவித்து விடுகின்றது. அணுக்குண்டு தோன்றியது இவ்வாறுதான். அணுக்குண்டு எவ்வாறு தோன்றியது? செருமனிநாட்டவரான ஐன்சுடீனின் கணக்கின் அடிப்படையிலும், இத்தாலி நாட்டின் பெர்மி (Permi) தென்மார்க்கு நாட்டின் நீல்சுபார் (Nichls Bohr) என்ற இருவரின் "அணுவாற்றல்" பற்றிய ஆராய்ச்சியாலும் அமெரிக்கநாட்டுப் பொறியியல் வல்லுநரின் ஒத்துழைப்பினாலும்தான் அணுக்குண்டு வெடித்தது. அணுவாற்றலை ஆக்கவேலையிலீடுபடுத்துவோமா, இல்லை அழிவை நாடுவோமா?

கனவு...! (உளவியல்)

வியாசை. சரவண குமரர், பி. எசி.,

முன்னுரை: கனவு! ஆம்; கனவு! தொடக்க கால மாந்தன் முதல் இன்றைய அறிவியலார் வரை அனைவரையும் கவர்ந்தது கனவு. வாழ்வில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கைத் தூக்கத்தில் கழிக்கும் நம்மிடையே, கனவு காணுதார் எவருமிலர். கனவே காண்பதில்லை என்பார், தாம் கண்ட கனவுகளை நினைவுகூர இயலாதாரே என்பது உளவியலாரின் துணிபு.

தமிழிலக்கியத்தில் கனவு: இயற்கையோடியைந்து இன்ப வாழ்வு நடத்திய பழந்தமிழர், கனவினைக் குறித்து அறிந்திருந்த உண்மைகளை, தமிழிலக்கியங்களில் காணலாம். பாண்டியன் அறம் பிறழ்ந்து வீழ்ந்துறு முன்னர், கோப்பெருந்தேவி தீக்கனாக் கண்டதாகச் சிலப்பதிகார வழக்குரை காதை உரைக்கின்றது. மேலும் கண்ணகி தான் உரைத்த கனவுகளைத் தேவந்தியிடம் கூறுவதைக் கனாத்திறம் உரைத்த காதையில் காணலாம். மணிமேகலையிலும் கனவுபற்றிய குறிப்பினைக் காணலாம். இராவணனது வீழ்ச்சி பற்றித் தான் கண்ட கனாக்களைத் திரிசடை என்பாள் சீதையிடம் கூறித் தேறுதல் கூறியதைக் கம்பர் பாடுகின்றார். மற்றும் பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் முதலிய நூல்களில், அடியார்களின் கனவுகளில் இறைவன் தோன்றியதாகக் காணப்படுகின்றது. காலைக் கனா உடன் பலிக்கும் எனச் சீவகசிந்தாமணி (219) பகர்கின்றது. இஃதன்றியும் "கனா நூல்" ஒன்றிருந்ததாக, சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையினால் அறியலாம்.

கனவு காண்பது ஏன்?: நாம் உறங்கும்பொழுது உயிர் பல இடங்களுக்கும் சென்று வருவதாகத் தொடக்கத்தில் மாந்தர் நம்பினர். கனவுகளில் கடவுளர் தோன்றிக் கட்டளையிடுவதாக, கிரேக்க, இந்துப் பழைய நூற்களில் காணலாம். இடைக்காலத்தவர், கனவு வருங்காலம் காட்டும் என நம்பியிருந்தனர். தற்காலத்திலும் கனவுபற்றிய ஆய்வுகளில் பலரும் ஈடுபட்டுள்ளனர். அவர் முடிபுகள் சிலவற்றை ஈண்டுக் காண்போம். நமது வாழ்வில் எண்ணுவதெல்லாம் நிறைவேறுவதில்லை. இங்ஙனம் நிறைவேறாத ஆவல்கள் கனவில் நிறைவேறுகின்றன என்பது பிராய்டு (Freud) என்பாரின் கருத்து. இவற்றுள் காம விருப்பமே மிக்கது என்கின்றார். இவ்வாறு, தனி மாந்தனின் ஒடுக்கப்பட்ட ஏக்கங்களன்றி, முன்னோர் வழி வந்த எண்ணங்களும்

கனவின்மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது யுங் (Jung) என்பாரின் கூற்று. கனவுகள் ஆவல்களை நிறைவு செய்தாலும், வாழ்க்கையின் குறிக்கோள்கட்கு வழிவகுக்கின்றன. மேலும் கனவுகள் தாழ்வு மனப்பான்மையை ஒழிக்கவும் உதவுகின்றன என்று ஆட்லர் (Adler) என்பார் கருதுகின்றார். இவ்வாறன உளச்சார்புக் கொள்கைகளன்றி, உடற்சார்புக் கொள்கைகளும் உள.

உறங்கும்பொழுது உடலின் பொறிகள் தூண்டப்படுவதற்கேற்பக் கனவுகள் உண்டாகின்றன என்பர் ஒரு சாரர். மற்றொரு சாரர் கனவு — தூக்கத்தின் புறக் காவலர்கள் என விளக்கம் தருகின்றனர். தூங்கும்பொழுது ஏற்படும் பற்பல ஓசைகளும் இடையூறுகளும் தூக்கத்தைக் கலைக்காதிருக்க கனவுகளாக மாற்றப்படுகின்றன என்பர். அண்மையில் பர். வில்லியம் இடெமண்டு (Dr. William Dement) எனும் உளவியலறிஞர் ஓர் உடற்சார்புக் கொள்கையை வெளியிட்டுள்ளார். பகலில் நாம் வேலைகளில் ஈடுபட்டிருக்கும்பொழுது நரம்பு மண்டிலத்தில் ஒரு வகை நச்சுப் பொருள் (Toxin) உண்டாகின்றது. அதனை வெளியேற்றவே இரவில் கனவு காண்கிறோம். எனவே கனவு இன்றி வாழ்தல் அரிது என்பதே அவரது விளக்கம். இத்தனைக் கொள்கைகளில் எதனைச் சரியெனக் கொள்வது? இவையெல்லாம் பல்வேறு உளவியல் கொள்கையோர் (Schools of Psychology) தத்தமது கொள்கைப்படி, பல்வேறு கோணங்களிலிருந்து கண்டவை. எனவே இவை அனைத்திலும் ஓரளவு உண்மையுள்ளது என்பதே இன்றைய உளவியலாரின் கருத்து. ஆயினும் 'கனவு' இன்னுமொரு புதிராகவே விளங்குகின்றது.

கனவின் தன்மை : கனவுகளைப்பற்றிய ஆராய்ச்சிகளில் பெரிதும் உதவுவது "மூளை மின்னலை வரை படங்களே" (Electro En-Cephalographs). ஒருவன் உறங்குவதற்கு முன் தலையில் சிறு மாழை (உலோக)த் தகடுகளைக் கட்டுவார்கள். அவற்றின்மூலம், மூளையிலிருந்து வரும் மின்னலைகள் வரைபடமாக்கப்படுகின்றன. கனவு காணும் பொழுது இந்த வரைபடத்தில் வேறுபாடுகளைக் காணலாம். இனிக் கனவுகளின் தன்மைகளைப்பற்றிச் சிறிது காண்போம். நமது உறக்கத்தில் ஏறத்தாழக் கால்பங்கு கனவில் கழிகின்றது. ஒரே கனவை வெகுநேரமாகக் காண்பதாகத் தோன்றினும், அவை உண்மையில் சில நிமயங்களே நீடிக்கின்றன. அன்றியும் முக்காற்பங்குக் கனவுகள் காலை நான்கு மணிக்குப் பின்பே தோன்றுகின்றன. எல்லாக் கனவுகளிலும் கனவு காண்பவர் இடம் பெறுவது உறுதி. மாந்தர் மட்டுமின்றி

இரீசசு (Rhesus) என்னும் இனக் குரங்குகளும் கனவு காண்கின்றன என்பதை வரைபடங்கள் தெரிவிக்கின்றன.

கனவு மெய்யாகுமா?: கனவுகள் பின்னால் நிகழ இருப்பதை அறிவிக்கும் "அறிவிப்புச் சங்குகள்" என்பர் பலர். கோப்பெருந்தேவி, கண்ணகி முதலியோரின் கனாக் களைப் பற்றி முன்பே கண்டோம். அதேபோல் சூலியசு சீசர் (Julius Caeser) எனும் மேனாட்டு மறவன் கொலையுறுதற்கு முன்பு அவன் மனைவி தீக்கனாக்கள் பல கண்டதாகச் செகப்பியர் (Shakespeare) நாடகமெழுதுகின்றார். அமெரிக்கக் குடியரசுத் தலைவராயிருந்து கொலையுண்ட ஆபிரகாம் இலிங்கன், தனக்கு அத்தகு முடிவு நேருமெனக் கனவு கண்டு அதை நாட்குறிப்பில் எழுதிவைத்திருந்தாராம்! மேலும் கனவுபற்றி ஆராயும் உளவியலாரின் பட்டறிவுகளும் பல உள. எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டு காண்போம். ஒரு தாய் தன் மகனைப் பிரிந்து ஏறத்தாழ ஐந்நூறு கல் தொலைவில் இருக்க நேர்ந்தது. ஒருநாள் மகன் உடல்நலம் குன்றியிருப்பதாகக் கனாக்கண்டாள். காலையில் தொலை பேசியின் மூலம் அஃது உண்மையென அறிந்தாள். மற் றொரு முறை மகன் ஓர் இக்கட்டில் சிக்கியதாகக் கனாக் கண்டாள். மறுநாள் அஃது உண்மையே என அறிந்தாள். இவற்றைத் தற்செயல் நிகழ்ச்சியெனத் தள்ளிவிடமுடியாது. ஏனெனில் அந்த இரு முறைகள்தாம் நெடுந்தொலைவிற்குத் தொலைபேசியில் (Trunk-Call) பேசியிருக்கின்றனர். இவற்றிற்கெல்லாம் உளவியலாரின் விளக்கம்யாது? மாந்தருக்கு இயற்கையான உள்ளுணர்வு ஒன்றுண்டு. மேலும் உணர் வுள்ளத்தைவிட (Conscious Mind) உணர்விலி உள்ளம் (Un Conscious Mind) மிக ஆற்றல் வாய்ந்தது. காலம், இடம் இவற்றையும் கடக்கவல்லது. இந்த உணர்விலி உள்ளத்தின் வழியும், உள்ளுணர்வின் (Instinct) வழியும் எதிர்காலத்தைக் கனவாகக் காண்கிறோம் என்பர் உளவியலார்.

கனவு மூலம் கண்டுபிடிப்புகள்: சில அரும்பெரும் அறிவியல் உண்மைகள் கனவின்மூலம் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. கெக்குலே (Gekule) என்னும் செருமானிய ஆராய்ச்சியாளர் பென்சீன் எனும் வேதியற் பொருளின் மூலக் கூறமைப்பினை ஆய்ந்துகொண்டிருந்தார் (Structure of the Benzene Molecule). சரியான முடிவிற்கு வரவியலாமல் ஒருநாள் ஆய்வுக் கூடத்திலேயே கண்ணுறங்கிவிட்டார். அப்பொழுது அவர் கனவொன்று கண்டார். அவர் கண்ட கனவில் பென்சீன் அணுக்கள் நடனமாடின. திடீரென்று அவை பாம்பாக மாறின. ஒன்றை ஒன்று வால்களைப் பற்றிக்கொண்டு சுழன்றன. உடனே விழித்தெழுந்தார்.

கெக்குலே கனவிலே கண்டதைக்கொண்டு மேலும் இறுதியில் பென்சீன் மூலக்கூறில், 'கார்பன்' அணுக்கள் வட்ட வடிவமாக அமைக்கப்பெற்றுள்ளன என்ற உண்மையைக் கண்டார். சில இலக்கியப் படைப்புகளுக்கும் கனவுகள் காரணமாயிருந்ததுண்டு. இசுடீவன்சன் (R. L. Stevenson) என்பவரின் புகழ்சான்ற நூல் ஒன்று (Dr. Jekyl and Mr. Hyde) அவர் கண்ட கனவொன்றைச் சுற்றியே பின்னப்பட்டது. ஆங்கிலப் புலவர் கோலிரிட்சு (Coleridge) என்பாரின் பாடல்களெல்லாம் [(எ-டு) Kublakan, Ancient Mariner] கனவில் கண்ட படைப்புகளே. இவற்றிற்கெல்லாம் விளக்கம் என்ன? உறங்கும் பொழுது உணர்வுள்ளம்தான் உறங்குகின்றது. இடை உள்ளமோ (Sub-Conscious) சிக்கல்களைத் தீர்க்க முயல்கின்றது. இடைமனம் ஆயுந்திறன் மிக்கது. உணர்வுள்ளம் காணாத சிலவற்றைக் காணுமாற்றல் கொண்டது. எனவே கனவுகள் சிக்கல்களிலிருந்து மீளவும் வழிகாட்டுகின்றன; படைப்புகளுக்கும் அடிகோலுகின்றன என்பதாம்.

முடிவுரை: இவ்வாறாகக் கனவுகள் சிக்கல்களுக்குத் தீர்வு காணவும், நிறைவேறாத எண்ணங்களை நிறைவேற்றவும் உதவுகின்றன. சிற்சில பொழுதுகளில் எதிர்காலமும் காட்டுகின்றன. இருப்பினும் கனவுகளைப்பற்றிய உண்மைகள் இன்னும் முழுமையாகக் கண்டுபிடிக்கப் பெறவில்லை என்றே கூறலாம்.

'தேன் கூடு' சிறுவர் இதழ்

தென்மொழி செந்தமிழ்நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கெனத் தொடங்கவிருந்த தேன்கூடு என்ற இதழ்க்குத் தில்லியரசினர் இசைவு தரவில்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் அறிவித்துக்கொள்ளுகின்றோம். எனவே வேறு பெயரில் அவ்விதழ் வெளிவருதற்கு மீண்டும் தில்லியரசை இசைவு கேட்டுள்ளோம். அவர்தம் இசைவு பெற்றவுடன் அதுகுறித்து விரிவான அறிக்கை வெளியிடப்பெறும். அதுவரை தமிழ்நாட்டுச் சிறுவர்களும் அவரைச் சார்ந்த தமிழன்பர்களும் பொறுத்துக்கொள்ள வேண்டுகின்றோம்.

அட்டைப்படம்!

இத்திங்கள் இதழ் அட்டைப்படத்தை வரைந்து உதவிய அன்பர் தனித்தமிழ்ப் பற்றும், மறமும் கொண்ட புலவர் மாணவர் ஒருவர். ஓவியத் திறமுள்ள அச்செந்தமிழ்ப் புலவர் தம் அருளாண்மைக்கு நன்றி சாற்றுகின்றோம். மேன்மேலும் அவர் இத்தகைய படங்களை வரைந்துதவ வேண்டி வாழ்த்துகின்றோம்.

— ஆர்.

வரலாறு.

சைமன் பொலிவர் (1783-1830)

SIMON BOLIVAR

பெ. இராசாராமன் எம். ஏ.
வரலாற்றுத்துறை. அரசினர் கலைக் கல்லூரி,
கடலூர்.

மன்னு உலகத்தில் மன்னுதல் குறித்தோர் தன் புகழ் இருத்தித் தாம் மாய்ந்தனர். நிலவரை நீள்புகழ் ஆற்றிய மக்கள் மன்பதை நிலைத்து நிற்கும் வரை மாந்தர்தம் உள்ளத்தில் நிலைப் பேருன இடத்தைப் பெற்று விளங்குகின்றனர். தன்னலம் மறுத்து, பிறர் நலம் பேணி வாழ்ந்த செம்மல்களை இவ்வையகம் மறப்பதில்லை. மக்களின் நல்வாழ்விற்குத் தங்களை ஒப்படைத்துக் கொண்ட காரணத்தால் அவர்கள் எத்தனை இடர்ப்பாடுகள், இன்னல்கள் ஏற்க நேரிட்டாலும் அவற்றை இன்பம் நல்கும் எழிற் பூங்காக்களாக எண்ணி உளம் பூரிக்கின்றனர். செயற் கரிய பட்டறிவைப் பெறுகின்றனர். அத்தகைய செயல்களைச் செய்து தென் அமெரிக்க வரலாற்றில் ஓர் உயரிய இடத்தைப் பெற்றவன் தான் சைமன் பொலிவர். தன்னுடு அடிமைத் தளை யில் சிக்கித் தவித்த நாளில் அவன் பிறந்தான். தான் பிறந்த பொன்னுட்டை விடுதலை நாடாக்கிப் பார்த்துவிட்டு அவன் இறந்தான். ஆகையினுல்தான் அவன் விடுவித்தோன் [Liberator] என்ற விருதுப் பெயரைப் பெற்றுன். ஆயிரம் யானையை அமரிடை வென்ற மானவனுக்குப் பரணி வகுப்பது தமிழ் மரபு. இருநூறு போர்க்களங்களைக் கண்டு வாகை சூடிய அவ்வாளேர் உழவனேடு சயங்கொண்டார் தென் அமெரிக்க மண்ணில் பிறந் திருந்தால் ஒரு பெரும் பாவியத்தைப் புனைந்து அவ்விடுதலை மறவனைப் பாட்டுடைத் தலைவனுக்கியிருப்பார்.

அவனின் சீரிய வாழ்க்கை, துணிவு, துயரம், வெற்றி, புகழ், தோல்வி அனைத்தும் பின்னிப் பிணைந்த ஒன்ருக விளங்கிற்று. அவன் எழுதிய குறிப்புகள், தீட்டிய மடல்கள், பறைசாற்றிய திருஎழுத்தறிவிப்புகள் [Proclamation] அன்று தென் அமெ ரிக்க மக்கள் இசுபெனியர்களின் [Spaniards] கொடுங்கோலாட் சியில் சிக்கித் தவித்த நிலையைத் தெளிவான எழிலோவியமாகத் தீட்டித் தருகின்றன. எதிர்காலத்தில் குடியரசுக்காக நிகழ விருந்த போரின் போக்கினை அறிந்து தெரிவித்த வருவதுரைப் போன் [Prophet] அவன். அவனின் ஆட்சித் திட்டங்கள் அனைத்தும் அவன் வாழ்ந்த காலத்தை மிஞ்சியவை. பதினெட் டாம் நூற்ருண்டில் உலகில் வாழ்ந்த பேரறிவாளர்களில் ஒருவ ருக சைமன் பொலிவர் இன்றும் வரலாற்று ஆசிரியர்களால் கருதப்படுகிருன். நாட்டுப்பற்று நிரம்பவுடையவன். நல்லாட்சித் திறப்பாடுடையவன். நெஞ்சிலே நேர்மையும், உள்ளத்திலே உறுதியும் கொண்டோன். வாகைபல சூடிய வாளேர் உழவன்.

"தொகையிலாப் படைகளோடும், பிணிவளர் செருக்கிஞேடும் பெரும் பகை எதிர்த்தபொழுது பணிவது" கருதவில்லை. பகைவர் களுக்கு அஞ்சிப் பதுங்குதல் பயனென்றெண்ணுன். தணிவதை நினைக்கமாட்டான். தளர்ச்சியும் கொள்ளமாட்டான். வெஞ்ச மரில் புறங்காட்டி ஓடமாட்டான். அடைக்கலமென்று வந்த வரைத் தாக்கமாட்டான். பொலிவர் வெற்றி பல கண்ட வாளேர் உழவன் மட்டுமல்லன்; வாய்மை நெறியாளன் [Genuine idealist]; தற்கால உலகம் கண்ட மிக்கறிவு படைத்த தக்கோ ரில் தலைகமை சான்ற பேராளன்.

அத்தகைய சிறப்பியல்புகள் பெற்ற சைமன் பொலிவர் 1783-ஆம் ஆண்டு கராகசு (Caracas) என்ற இடத்தில் செல்வ மிகுந்த ஐரோப்பிய பின்மரபினர் (Creole) குடும்பத்தில் சுவான் விசென்ட் (Juan Vicentre) என்ற தந்தைக்கும் மரியடி லாகன் செப்சியன் (Maria de la concepcion) என்ற தாய்க்கும் மகனுய்ப் பிறந்தான். எதிர்காலத்தில் உலக வரலாற்றிலேயே உயரிய சிறப்பிடத்தைப் பெறவிருந்த சைமன் பொலிவர், இளமையிலேயே தன் தந்தையை இழந்தான். பதினிளமைப் (Teenage) பருவத்தில் அவனின் அன்னையைப் பறிகொடுத் தான். தன் அம்மானும்(Uncle)முதுகணுளனுமான (Guardian) கார்லோச் பலேசியோச் (Carlos Palacios) அரவணைப்பில் வளர்ந்த சைமன், இசுபெயினில் (Spain) உள்ள மாட்ரிட் (Madrid)என்ற இடத்திற்கு மேற்படிப்புக்கு அனுப்பப்பட்டான். அங்குச் சட்ட நுணுக்கங்கள் அனைத்தும் கற்றுத் துறைபோகிய அறிஞனுன். இசுபெயினில் வாழ்ந்த காலத்தில் கட்டிளங் காளையாகிய பொலிவர்,"காமுறும் இளமை"யின் ஆட்டங்களுக் கெல்லாம் தன்னை ஆட்படுத்த வேண்டியவனுனுன். இளமையும் வளமையும் நிறைந்த அவன், ஈடு இணையிலாத கட்டழகி மெரியா தெரசா (Maria Terasa) வின் காதல் வயப்பட்டான். மனதிற்கினியாளை கி. பி. 1801-இல் மண முடித்துக்கொண்டு தன் நாடு திரும்பினுன். ஆனுல் ஊழ் (Fate) அவனின் வாழ்க் கையில் ஒளிந்து விளையாடத் தொடங்கிற்று. இன்பமும் துன்ப மும் ஒன்றை மற்ருென்று துரத்தி வந்தன. அவனின் காதற் கிழத்தி 1803-ஆம் ஆண்டு மஞ்சள் காய்ச்சலினுல் (Yellow fever) தாக்குண்டு உயிர் நீத்தாள். மீளாத் துயரத்தில் ஆழ்ந் தான் பொலிவர். துயர் நிறைந்த உள்ளத்திற்கு ஆறுதல் தேடு வதற்காக 1805-ஆம் ஆண்டு ஐரோப்பிய நாட்டிற்குச் சென் ருன். பழம்பெரும் பண்பாட்டிற் கெல்லாம் நாயகமாகவும் இன் றைய ஐரோப்பிய பண்பாட்டிற்குத் தாயகமாகவும் விளங்கிய உரோமாபுரிதான் பொலிவரின் உள்ளத்தில் விடுதலை உணர்வு என்னும் வித்தை இட்டது. அங்குள்ள அவன்டின் (Aventin) என்ற மலைமுகட்டின்மீது தனது பழைய நண்பரும், ஆசிரியரு மான சைமன் ரோட்ரிகுச் (Simon Rodriguez) என்பவரைச்

சந்திக்க நேர்ந்தபொழுது பொலிவர் ஒரு சூளுரை எடுத்துக் கொண்டான்.

[I will not give rest to my arm or my soul till I have broken the chains that bind my father land to spain.] "என்னுடைய தந்தையர் நாட்டை இசுபெயின் நாட்டோடு பிணைந்திருக்கும் சங்கிலியைத் தகர்த்தெறியும் வரை என்னுடைய கைக்கோ அல்லது என் உள்ளுயிருக்கோ ஓய்வு தரமாட்டேன்," இதுதான் சைமன் பொலிவர் எடுத்துக்கொண்ட திண்ணிய உறுதி பின்னர் அந்த எண்ணந்தான் அமெரிக்கக்கண்ட நாடுகளின் ஒற்றுமையாக [Pan-American Unity] விரிந்தது. அவனின் வளம் பொருந்திய கருத்துகள் [Semiual ideas] இருபதாம் நூற்றுண்டில்தான் முதிர்ந்து பழுத்து பலன் தரத் தொடங்கின. பிரான்சு நாட்டின் தலைசிறந்த புரட்சி எழுத்தாளரும், மெய்விளக்க அறிஞருமான உருசோ.வின் [Rousseau] கோட்பாட்டில் பொலிவர் வைத்திருந்த அசைக்க முடியாத பற்றே அவனை ஒரு விடுதலை மறவனாக மாற்றிற்று. அவன் உள்ளத்தில் எரிந்து கொண்டிருந்த விடுதலைத் தீ, அமெரிக்கர்களின் விடுதலைப் போருக்குப் பின் [American war of Independence] கொழுந்து விட்டெரியத் தொடங்கிற்று. மேலும் அன்றைய ஐரோப்பாவின் அரசியல் நிலைமை பொலிவரின் எண்ணம் ஈடேறத் துணையாய் நின்றது. பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஐரோப்பிய நாடுகளை ஆட்டிப் படைத்த நெப்போலியன் [Napoleon] தன்னுடைய பெருநிலப் பகுதி ஏற்பாட்டை [Continental system] செயல் முறைப்படுத்த வேண்டி, தனது அரசியல் சூழ்ச்சித் திறத்தால் இசுபெயின் நாட்டை ஆண்டு வந்த சார்லசை [Charles IV] யும் அவனின் பெர்டினன்ட்டையும் [Ferdinand] அரசிருக்கை துறக்கச் செய்தான். தன் இளவல் சோசப்பை [Joseph] இசுபெயின் நாட்டின் அரசனாக்கினன் பெர்டினன்ட் மீண்டும் ஆட்சி உரிமையைத் திரும்பப் பெறவேண்டும் என்று பொலிவரும், அவன் தொண்டர்களும் கிளர்ச்சி செய்தார்கள். என்றாலும் விடுதலை உணர்வு அவன் உள்ளத்தில் மங்கிவிட்டது என்பது பொருளன்று; மாடப் புருவைக் காட்டிலும் வல்லூறு மிகவும் கொடியது என்பதைப் பொலிவர் உணர்ந்திருந்தான். நெப்போலியனின் வீழ்ச்சி ஐரோப்பிய வரலாற்றில் எத்தனையோ மாறுதல்களை ஏற்படுத்திற்று. பிற்போக்கு ஊழியும் (Reactionery era) பின்தொடர்ந்தது.மீண்டும் இசுபெயின் நாட்டின் அரியணைக்கு வியன்ன உடன்படிக்கை (Vienna Settlement) பெர்டினன்ட் கொண்டு வந்தது.

இதற்குள் நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக மிக விரைவில் உருண்டோடின பொலிவர் தன்னுடு திரும்பியதும் ஒரு புரட்சி இயக்கத்தைத் தொடங்கி 1813-இல் வெனிசுலாவின் தலைநக

ராகிய கராகசுவை(Caracas)90 நாட்கள் தொடர்ந்து முற்றுகை செய்து, கடும் போரிட்டுக் கைப்பற்றினன். ஆனல் பெர்டினன்ட் மீண்டும் அரசனுன செய்தி, மன்னனின் மீது மாருப் பற்றுக்கொண்ட பலரைப் பொலிவரிடமிருந்து பிரித்தது. நாட்டுப் பற்றுக்கொண்ட பொலிவரின் படை வலுக்குன்றிய நிலையில் 1815-ஆம் ஆண்டு போப்லோ மொரில்லா (Pablo Morilla) என்ற இசுபெனிய படைத்தலைவனுல் சிதைக்கப்பட்டது. மறுபடியும் வெனிசுலா இசுபெனியர்களின் கைவயமாயிற்று. பொலிவரின் தோல்விக்குக் காரணம் எந்த மக்களுக்காக அல்லும் பகலும் அயராது விடுதலை வாங்கவேண்டுமென்று நினைத்தானே அவர்களே அவனை எதிர்க்கத் தொடங்கியதுதான். வெறுப்புணர்ச்சியுடனும் ஏமாற்றத்துடனும் தனது படைத்தலைமைப் பதவியைத் துறந்து தாயகத்தை நீத்துச் சமைக்கா (Jamaica) என்ற தீவிற்குச் சென்ருன். அங்கிருந்து தன்னுட்டுப் புரட்சி மறவர்களை ஊக்குவிக்க புகழ் மிக்க சமைக்கா மடலை (Jamaica letter) எழுதினன். கிலி பிடித்த நெஞ்சினனையும், வலு படைத்த வாள் சுழற்றும் மறவனுக்கும் ஆற்றல் அவனின் எழுத்துக்கு இருந்தது.

1816-ஆம் ஆண்டு வெனிசுலாவைக் கைப்பற்ற பொலிவர் எடுத்துக்கொண்ட முயற்சி பேரிழப்பான தோல்வியாகமுடிந்தது. அந்நிலையில் நீக்ரோக்களின் தலைவனுன அலெக்சாண்டர்பேசன் (Alexandre Petion) பொலிவருக்குப் புகலிடமும் பொருளுதவியும்தந்து வெனிசுலாவின் மீது திரும்பவும் படையெடுக்கும்படி செய்தான். பொலிவர் 1819-ஆம் ஆண்டு தன் திறமைமிக்க படைத் தலைவன் அந்தோனியோ சோச் டி சுக்ரே (Antonio Jose de Sucre)வின் உதவியால் ஆயிரம் கல் தொலைவு ஆற்றல் நிறை படையுடன் அணிவகுத்து நடந்து, ஆன்டெச் (Andes) என்ற மலைமுகட்டைத் தாண்டிப் போயகோ (Boyaco) என்ற இடத்தில் இசுபெனியர்களின் பெரும்படையைப் புறமுதுகாட்டச் செய்தான். ஆன்டெச் குளிர் மலையைப் பொலிவர் கடந்த நிகழ்ச்சி படைத்துறை வரலாற்றில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க அருஞ் செயலாகும். அதே ஆண்டில் மிகவும் துணிவான செயலைக் கொஞ்சமும் தயக்கமின்றிச் செய்தான். வெனிசுலா (Venezuela) ஈக்வேடார் (Ecuador) பனமா (Panama) கொலம்பியா (Colombia) ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய பெரியக் கொலம்பியக் குடியரசைப் (The Republic of Greater Columbia) பறை சாற்றினன். புதிதாக உருவெடுத்த அந் நாட்டின் ஒப்பற்றத் தலைவனுனன்.

இதற்குள் மற்றைய அண்டை நாடுகளிலும் விடுதலை உணர்வு கிளர்ந்தெழுந்தது. தென் அமெரிக்க மக்கள் இசுபெயினின் ஆட்சிக்குச் சாவுமணி (Knell) அடிக்கத் துவங்கினர். அர்

சன்டைன் (Argentine) சைலே (Chile) ஆகிய நாடுகளின் விடுதலைத் தலைவனும் பெரு (Peru) என்ற நாட்டின் காப்பாளனுமான (Protector of Peru) சோச் டி சான் மார்டின் (Jose de san Martin) குவாயக்குவில்(Guayaquil) நகரில் பொலிவரைச் சந்தித்தான். அவ்விரு பெருந்தலைவர்களுக்குள் என்ன பேச்சு நிகழ்ந்தது என்பது இன்றளவும் வரலாற்று ஆசிரியர்களால் உய்த்துணரமுடியாத புதிராக உள்ளது. ஆனல் மார்டின் பெரு (Peru) நாட்டின் காப்பாளர் பதவியினின்றும் விலகித் தன்னுடு நோக்கிப் பயணமானுன். அதன் பிறகு அந்த அருளாளன் தென் அமெரிக்க அரசியல் அரங்கத்தில்(Political arena)தோன்றவே இல்லை. சூனின் (Junin) என்ற போர்க்களத்தில் பொலிவர் பெற்ற அரிய வெற்றி பெரு (Peru) நாட்டை இசுபெயினின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்தது. மேலைப்பெரு (Upper Peru) நாட்டுமக்கள் தங்களைப் பிறர் ஆட்சியிலிருந்து விடுவித்த மாத் தலைவனின் நினைவாக தாம் வாழ்ந்த பகுதியைப் பொலிவியா (bholivia) என்று பெயர் சூட்டித் தாங்கள் நன்றியறிவுடையவர்கள் என்று உலகிற்கு அறிவித்துவிட்டனர்.

சின்னுட்கள் பொலிவரின் தனி ஆட்சி சிறப்புற நடைபெற்றது. அவனின் வல்லாட்சி (Dictator ship) முறையைக் குறை காண்பவர் தொகை பல்கியது. பொலிவர் உடல் நலம் குன்றிய நிலையில், பலராலும் வெறுக்கப்பட்டு 1830-ஆம் ஆண்டு குடியரசுத்தலைவர் பதவியினின்றும் விலகினன். அவனைப் பிடித்த எலும்புருக்கி நோய் அவனின் இறுதி வாழ்க்கையில் தீராத தொல்லையைத்தந்தது. தனது குன்றனைய செல்வத்தை விடுதலைப் போருக்காகச் செலவிட்ட அண்ணல்,ஏழ்மையில் வாடி வதங்கினன். நோயின் ஆட்சி மேலோங்கி 1830-ஆம் ஆண்டு சாந்தா மார்ட்டா (Santa Marta) என்ற இடத்தில் உயிர் நீத்தான். சாகும் உடல் துறந்து சாகாப்புகழ் பெற்ற பொலிவர் தென் அமெரிக்க நாடெங்கணும் படிம உருவில் திகழ்கின்றுன். ○

பொங்கல் மலர் இல்லை.

தென்மொழி பொங்கல் மலர் வெளிவருமா என்று பலரும் எழுதிக் கேட்கின்றனர். மலர் வெளியிடுவது குமுகாயத்தில் மக்களிடத்து அவ்வப்பொழுது ஏற்படும் ஆரவார எழுச்சிகளைப் போன்றே, செய்தித் தாள் வாணிகர்களிடத்து ஏற்படும் போலி நிகழ்ச்சி என்பதே நம் கருத்து. மலர்களில் மட்டுமே எழுதுகின்ற பெரிய (!) அறிஞர் சிலர் உள்ளனர். அவர் தம்மைப் பயன்படுத்தி மக்களின் காசுகளை மிகுதியாகப் பறிப்பதும், இதழ் வாணிகத்தைப் பெருக்குவதுமே மலர் வெளியீட்டாளரின் பெரு நோக்கம். அந்நோக்கத்தால் மக்களுக்கும் உண்மையான அறிவு நாட்டம் உடையவர்க்கும் ஏற்படும் பயன் குறைவே! தென்மொழியின் விற்பனையைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணம் நமக்கிருப்பது இவ்விதழைப் பலரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்பதற்காகவே! ஆகலின் தென்மொழி சிறப்பிதழ்களை வெளியிடாது! (—ஆசிரியர்)

அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு. தொடர் 5.

முன்னுரை (தொடர்ச்சி)

இவ்வுலகத்தை மேலது மேலாகவும், கீழது கீழாகவும் பார்க்கும் அறிவு குன்றிய மாந்தரைப் போலல்லாது, மேலது கீழாகவும், கீழது மேலாகவும், உள்நோக்கியும் பார்க்கும் திறம் படைத்த வல்லறிவாளர் தமக்குப் புலப்படுவது ஒன்றுண்டு. அஃது, அறிவும் அன்பும் நிலைப்படுத்தப் பெற்ற சிற்றுயிர்களிடத்தும், இயற்கையிடத்தும் நடைபெறும் காரண கரும வினைப் பாடுகள் யாவற்றினும் ஓர் ஒழுங்கு புலப்படுவதும், அவற்றினும் அறிவும் அன்பும் வளப்படுத்தப் பெற்றுத் தன்னியக்கம் பெருகிய தும், மேனிலை உயிர்களிடத்தும், மாந்தரிடத்தும் அவ்வாறு நடைபெறும் காரண வினைப்பாடுகளுள் அவ்வொழுங்கு ஒரு சிறிது நிலைப்படினும், அவரின் கரும வினைப்பாடுகளுள் அவ் வொழுங்கு பெரும்பாலும் மாறுபட்டு இருப்பதுமே ஆகும். இதனைப் பருப்பொருள் அறிவு மிகுந்து நுண்பொருள் அறிவு மிகக் குன்றிய எளிய அறிவினார்க்கு இன்னுஞ் சிறிது விளக்குவோம்.

அறிவு நிலைப்படுத்தப்பெற்ற சிற்றுயிர்களாகிய கண்ணுக்குப் புலப்படாத பல்லாயிரங் கோடி நுண்ணுயிர்களும், கட்புல னுக்கோ, செவிப் புலனுக்கோ, மெய்ப்புலனுக்கோ புலப்படுவ வாகிய எறும்பு, ஈ, கொசுகு, பறவை, விலங்கு முதலிய உயிர்களும், படைப்புக் காலந்தொட்டு இன்றுகாறும் தாம் உண் பனவற்றையே உண்டு, கண்டனவற்றையே கண்டு, நுகர்வன வற்றையே நுகர்ந்து வருவதையும், அவை அவ்வாறு செய்யும் வாழ்வுப் பாடுகளில் அவையறியாத ஓர் ஒழுங்கு உள்ளாடி நிற் பதையும், அவைபோல் அசைதலன்றி அசையாப் பொருள் களாகிய மரஞ் செடி கொடி, மண் கல், முதலிய பூதவிரி பொருள் களிலும், அனல், புனல், வளி முதலிய பூதப் பொருள்களிலும் முன்னவற்றைவிட அவ்வொழுங்கு மிகச் சிறந்தும் மிகவும் செப்பமுற்று இயங்குவதையும் உற்று நோக்கி உண்மை அறி யுங்கள். என்னை? நாம் அறிவில்லாதன என்று எள்ளத் தகும் இயற்கை, சிற்றுயிர்கள் முதலியவற்றுள் காணப்பெறும் ஒரு நல்லொழுங்கு அவற்றினும் கூர்தலற முறையினால் தன்னறிவும், தன்னுட்சியும் மேம்பட்ட மாக்களிடத்தும் மக்களிடத்தும் நிலை திரிந்து தாறுமாறாகச் சிதைந்து போவானேன்? எறும்புக் கூட் டத்துள் விளங்கும் ஓர் ஒழுங்கு முறை இம் மாந்தக் கூட்டத்துள் இராமைக்குக் காரணம் என்ன? பறவைகளின் ஒழுங்கு படுத்தப் பெற்ற வாழ்வுபோல் அமையாமல் இம் மாந்தரெல்லாரும் ஏறு மாறாக நின்று தம்முள் பொருதிப் புகைந்து நிலைசாம்பிப் போவா

னேன்? இவற்றிற்கு ஏதேனும் பொருட்டு ஒன்று இல்லாமல் இருக்குமா? எனின் அஃது இதுவேயாம். தன்னறிவும், தன்னுட்சியும் குன்றிய அவ்வுயிர்களுக்கு ஒருநிலைப்படுத்தப்பெற்ற அறிவும் ஆட்சியுமே முனைந்து விளங்குகின்றமையால் அவை அவற்றினின்றும் புறம் போகாமல், செக்கில் பிணிக்கப் பெற்ற காளைகள் போலும், கூண்டுள் அடைக்கப்பெற்ற குருவிகள் போலும் ஒரே வகையான இயக்கத்திலேயே வாழ்ந்து மடிந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் அறிவுக்கேற்ற இயக்கம் அது. அவ்வியக்கம் போதாதென்று அவை நினைத்து முனையும் பொழுதில், கூர்தலற முறைப்படியான் அவை தம்முள் ஒரு மாறுபாட்டைத் தாமே உண்டாக்கிக் கொள்ளும் திறமும் அவற்றிற்குக் கைவரும். அத்தகைய மாறுபாட்டை உண்டாக்கிக் கொள்ளாத வழி, அவற்றின் இயக்கம், ஓர் ஒழுங்கு படுத்தப்பட்டதாகவே நமக்குப்படும். ஆனால் அவ்வியக்கத்தின் ஒழுங்கைப் பற்றி அவை தாமும் அறியாவாறு அவற்றின் அறிவும் ஆட்சியும் அளவறுக்கப் பெற்றுள்ளன. அவை கல்போல் கிடந்த இடத்திலேயே கிடக்கின்றன. அவ்வாறு நம்மால் இயங்க முடியாமையினால், நாம் அவ்வியக்கமற்ற வாழ்வை நம்முடையதுபோலன்றி ஒழுங்குபட்ட வாழ்வாக நினைக்கின்றோம். அவைபோல் அமைதியாக இருக்க நாம் விரும்புவது, நம் வாழ்வில் நாம் கண்டு சலிப்புற்ற ஆரவார நிலையினால் ஏற்பட்ட அவாவு நிலையினாலேயே! ஆனால், அவாவு நிலை, அடுப்புள் கனன்றெறியும் தீப்போல் அடக்கலுறும் இறுதி நிலைக்கு முன்நிலையாகும். என்னை? கல்போல் உயிரும், உணர்வுமற்றுக் கிடப்பதைவிட எறும்புபோல் குற்றுயிரும் குற்றுணர்வும் கொண்டு ஒழுங்குபட்டுக் கிடப்பதைவிட அவற்றினும் பேரறிவும் பேருணர்வும்கொண்டு நாம் அவை போல் எல்லா நிலையிலும் ஒழுங்குபட இருப்பதே நம் வாழ்வின் தலைநிலை. ஓர் உயிர், வாழ்வின் தலைநிலைக்கு அந்நிலை வாழ் உயிர்கள் எட்டா வழி, அவ் வாழ்வினும் மேம்பட்ட பிறிதொரு வாழ்வின் தொடக்கம் கிட்டாதாம். என்னை? ஏணியின் உச்சிக்கு ஏறினாலன்றிக் கூரையின் தொடக்கம் கிட்டாதவாறு போல்வதாம் என்க.

இயற்கையில் வரையறுக்கப்பட்ட அறிவும் ஆட்சியும் முங்கிய உயிர்களிடையே காணும் ஒழுங்கு எத்தகையதாம் என்று நூலுள் விளக்கப் பெறும். அவ்வறிவும் ஆட்சியும் அவ்வாறு அளவிடப்பெற்றுக்கிடப்பதால் அவற்றிற்கும், அவற்றினும் மேம்பட்ட உயிர்கட்கும் விளையும் பயன் என்ன என்றும், அப்பயனால் அம் மேம்பட்ட உயிர்கள் எய்துநிலை என்ன என்றும், அவ்வெய்து நிலையின் இறுதி நிலை எதுவென்றும், அவ்விறுதி நிலையின் இன்பம் எத்தகையது என்றும் படிப்படியாகவும் விரிவாகவும் நூலுள் விளக்குவேன். ஆனால் அவற்றின் ஒரு சில கூறுபாடுகளை மட்டும் ஈண்டு இன்னுஞ் சிறிது விளங்கப் பேசுவேன்.

அறிவும் அன்பும் வரையறுக்கப்பட்டு நிலைப்படுத்தப்பட்ட பூதப் பொருள்களையும், பூதத் தோற்றப் பொருள்களையும் இன்னுஞ் சிறிது ஊன்றப் பார்ப்போம். அவற்றின் வரையறுக்கப்பட்ட நிலைக்கேற்றவாறு அவை அழகு நிரம்பியனவாகவும், பிற உயிர்களைத் தம்பால் இழுக்கும் கவர்ச்சியுற்றனவாகவும் இருப்பதை உண்மையறிவினர் கண்டு தெளியலாம் என்னை? அசையாப் பொருள்களாகி நிற்கும் பூதத் தோற்றமாகிய மண்ணும், மணலும், குன்றும், மலையும், செடியும், கொடியும், காவும், பூவும், நீரும், நெருப்பும் எத்தனை அழகு பொதிந்த நிறமும் தோற்றமும் கொண்டனவாகவும், எத்தனைப் பயன்படு நிலையினவாகவும் இருந்த இருப்பிலேயே இருந்துகொண்டு காட்சியளிக்கின்றன. அவை அவ்வாறு அழகும் நிறமுமற்றுக் கவருந் திறனற்றனவாகவும், பயனற்றனவாகவும் இருந்த இருப்பிலேயே கிடப்பின் அவற்றைச் சீண்டுவார் யார்? அவற்றை அணுகி அவற்றின் அழகொடு தோய்வார் யார்? இனி இவற்றினின்றும் பூதவிரிவாகி குற்றுயிர் நிலையில் உயர்ந்து நிற்கும் ஈ, எறும்பு, புழு, பூச்சி, மீன், நண்டு, நத்தை, சிப்பி முதலிய ஒரு படி உயிர்களுக்குள் தாம் எத்தனையாயிரங் கோடி வண்ணங்கள்; கவர்ச்சி நிலைகள்! அவற்றின் தோற்றங்களில் தாம் எத்தனை எத்தனை விரிவு? நம் அறிவே நிலைகுத்திப் போகுமாறும், உணர்வு நிலை கலங்கிப் போகுமாறும் அவற்றிற்கு அத்தனை அழகும் கவர்ச்சியும் என்ன காரணம்பற்றி வைக்கப் பெற்றுள்ளன? பல்வகை வண்ணங்கள் அவற்றிற்கு ஏன்? அவற்றின்று வெகு தொலைவு தன்னறிவாலும் தன்னாட்சியாலும் முன்னேறி வந்துள்ள நமக்கு அவற்றிலுள்ள வண்ணக் கவர்ச்சி ஏற்பட்டிராமற் போனது எதுபற்றி? நம் உடம்புமட்டும் பச்சை, சிவப்பு, நீலம் முதலிய கவர்ச்சியான வண்ணம் பொதிந்ததாக இருந்திருப்பின் சிறப்பாக இராதா? எனின், அஃதவ்வாறன்று! மெய்வண்ணம் சிறந்திருக்கும் அக் குற்றுயிர்களின் வண்ணத் தோற்றங்கள் அவற்றின் கண்களுக்குங்கூட புலப்படாதவை! அத் தோற்றங்களால் அவை எவ்வளவு அழகுறத் தோற்றமளிக்கின்றன என்றுகூட அவை அறியாதவை. அவ்வறியா நிலையில் அவற்றிற்குத் தரப்பெற்ற அவ் வண்ணங்களும் அழகும் அவற்றிற்கே பயன்படாத பொழுது, அவை எவற்றின் பொருட்டு அவ்வாறு அமைக்கப்பட்டனவோ, எனின், வல்லறிவும் வல்லாட்சியும் மிக்கு வளர்ந்துள்ள நாம் அவற்றை அவ்வழகிய வண்ணங்களாலன்றி வேறு வகையான அழகு குன்றிய மேனிகளுடனும் தோற்றங்களுடனும் பார்ப்போமானால், நமக்கு அவை மனநிறைவு தராமற் போகுமாகையால் அவற்றை அழிக்கத் தொடங்கி ஊறு விளைவிப்போமன்றோ? அவ்வாறு நம்மிடை விடப்பெற்ற அக் குற்றுயிர்களாகிய பூதவிரி நிலை பொருள்கள் அழிந்து போகா வண்ணம் காக்கப்பெறும் பொருட்டே, நாம் கண்ட அளவானே அவற்றின் அழகில் ஈடுபட்டு, மனங் கரைந்து, நம்முள் ஓர் இரக்கம் தோன்றி வருமாறு

அழகான அவ் வண்ணங்கள் அவற்றிற்குக் காப்பாகத் தரப் பெற்றவை என்க. என்னே! இவ்வுண்மையை முன்பே நாம் அறிந்துள்ளோம். உயிர்கள் அவ்வவற்றின் சூழ்நிலைக்குத் தக்க வண்ணமும் தோற்றமும் பெற்றுள்ளமை அவ்வவற்றின் உயிர்க் காப்புக்கே ஆம் என்னும் உண்மையை அறிவியல் நூல்கள் நமக்குச் சொல்லவில்லையா? அவ்வுண்மை அந்த அளவோடு நின்று விடுவதன்று. அந்த அளவோடு நின்றுவிடின் அவ் வண்ணமும் தோற்றமும் பொதிந்த உயிர்களால் வளர்ந்து மேம் பட்டு விளங்கும் உயிர்களுக்கு என்ன பயன் விளையும்? அவற்றால் நாம் விளங்கிகொள்ளவிருக்கும் ஓர் உயர்நிலை என்ன? அவ்வுயர்நிலைதான் மேம்பட்ட உயிர்களின் மேம்பட்ட மன அறிவு வளர்ச்சிக்கடிப்படை! அம் மன, அறிவு வளர்ச்சிக்கே அக் குற்றுயிர்களின் தோற்றங்களும் வண்ணங்களும் நம்மை உந்தித் தள்ளுகின்றன.

வளர்ந்து கொண்டே போகும் அறிவு நிலையில் நிலைப்பட்ட நிலை என்பதொன்றில்லை. நாம் இப்பொழுது நம்மினும் கீழ்ப் பட்ட நிலைகளையே இன்னும் உணரக் கற்றேமில்லை. நாம் எங்கிருந்து எங்கு வந்தோம் என்ற நிலையினையே நன்கு உண ராத பொழுது நாம் எங்குப் போகின்றோம் என்ற ஐய வினவுக்கு விடைபெறும் தகுதியுடையோம் அல்லோம். அவ்வாறு எங் கிருந்து எவ்வெவற்றின் படிநிலைகளைத் தாண்டி வந்தோம் என் பதை நாம் காண மறந்து போகாமல் இருக்கும் பொருட்டே நம்மினும் கீழ்நிலையுற்ற பூதப் பொருள்களுக்கும், பூத விரிவுப் பொருள்களுக்கும் அத்துணைக் கவர்ச்சி தரப் பெற்றுள்ளன. வானத்தில் கண் சிமிட்டி மின்னும் விண்மீன்களும், கோள்களும் ஒளி வண்ணங்களால் மாந்தனைக் கவர்ந்து தம்பால் இழுக்க வில்லையாயின் அவன் விண்ணாய்வு செய்திலான்; விண்ணுக்குத் தாவ விழையான். அதேபோல் தம்மினும் கீழ்ப்பட்ட உயிர் களையும், அவ்வுயிர்கள் தோற்றத்திற் கடிப்படையான பூதவியற் கைப் பொருள்களையும் அவன் கண்டு தேற வேண்டுவதே இயற்கை அவனுக்கிட்ட கட்டளை! அவ்வாறு அவன் கண்களி லும் கருத்திலும் அவை படாது புறக்கணிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதன் பொருட்டாகவும், அவை வண்ணத்தாலும் தோற்றத் தாலும் பொதிந்து வைக்கப் பெற்றுள்ளன.

வெறுந் தோற்றத்திலும், வண்ணத்திலும் இவன் உள்ளம் நிறைவுறமற் போகுநிலை வராமலிருக்கும் பொருட்டே, அவற்றுள் பயனுடைய சிலவற்றிற்கு மணமும், விளைகளும் பொதியப்பட்டுக் கிடக்கின்றன. உள்ளம் மயக்கும் மல்லிகையும், மகிழமும், செவி குளிரப் பாடும் குயிலோசையும், கிளிமொழியும், காதற் களிப்பால் துள்ளும் இணை புறவும், சிறு சிட்டும் மாந்தனைப் பல் லாற்றானும் கவரவில்லையாயின் இவன் அவற்றை ஒன்றால் அழிப்

பான்; அன்றால் புறக்கணிப்பான். அவ்விருவகை நேர்வுகளும் நிகழுமாயின், இவன் தன்நிலையினும் தன் அறிவினும் தன் உணர்வினும் மேம்படாவாறு நின்ற நிலையிலேயே நீரிற் கிடந்து நெளியும் நெடும் பாம்புபோல் நெளிந்து கொண்டிருக்க வேண்டி வரும். அவ்வாறு கிடந்து நெளியாமைப் பொருட்டும் அவனினும் தாழ்ந்த குற்றுயிர்களைப்பற்றி அவன் தெளிந்து அவற்றின் நிலை கண்டு தான் அவற்றின் வழி மேனிலைக்குத் தேற வேண்டுமென் பதன் பொருட்டுமே இவனைச் சுற்றிய பொருள்கள் யாவும் இவனைக் கவர்ந்து தம்முட்படுத்தி உய்விக்க வேண்டியவாறு தோற்றமும், அழகும், மணமும், வினைப்பாடுகளும் பொதியப் பெற்றுள்ளன. இவற்றின் விரிவுகளெல்லாம் நூலுள் விளங்கும்.

தன் அறிவையும் உணர்வையும் கவர்ந்திருக்கும் பொருள்களிலன்றி வேறிடத்தே கண்ணெடுத்தும் பார்க்காத அறிவுக் குறுக்கமும் உணர்வுக் குறுக்கமும் பெற்ற இவன், தன் குறுகிய வாழ்விற்குள் உணர வேண்டுவனவும் உணர்த்த வேண்டுவனவும் பலவாயிருக்கவும், இவ் வாழ்க்கையில் தன் முன்னோர் கற்ற நிலையினும் மேம்பட்ட நிலையிற் கல்லாமற் போயினும், அவர் கற்ற அளவாவது இவன் கல்லாமல் ஐயக்குன்றேறி நெறிமயக்குற்றுப் போக்கிடம் புரியாது, நாக்குத் தடுமாறி, வாயினின்று புறப்பட்டதெல்லாம் அறிவெனவும், உளத்தினின்று புறப்பட்டதெல்லாம் உணர்வெனவும் மயங்குவது எத்துணை இரங்கற்பாலதென்றுணர்வார் உணர்க. தம் புறச்சார்பு கவரும் இப் பருப்பொருள் நிலைகளைக்கூட அறிய அவாக் கொள்ளாத இவன், இவனுள் நுண்பொறியென ஒளிகுன்றிக் கிடக்கும் அகச் சார்புற்ற மெய்ம்மை யுணர்வை எங்ஙன் உணரப் போகின்றான்? அறியாமை, சோம்பல், உறக்கம், பிணி, இறப்பு முதலிய இருள் நிலைகளின் வலிவால் அடிக்கடி மழுக்க மேற்பட்டுப் பேழையில் முடக்குண்டுகிடக்கும் ஏழைப் பாம்புபோல், சீண்டி யெழுப்பினாலன்றி விழிப்புறாத இவன், சிறிது காலமே, சில நூற்களில், சில பக்கங்களையே படித்து ஆண்டுக் கூறப்பட்டவையுள்ளும் சிலவற்றையே தெளிந்து, மிகச் சிலவற்றையே தேர்ந்து, அவற்றையும் அடிக்கடி சேற்றில் பிடிக்கும் வழுக்கை மீன்போல் கை நழுவ விட்டுக்கொண்டு தடுமாறும் இவன், இயற்கைப் பொருள்களின் தேற்றத்தையும், அவற்றினின்று வெளிப்போந்த குற்றுயிர்களின் தோற்றத்தையும், அவற்றினின்று படிப்படியாக வளர்ந்து சிறக்கும் உயிர்களின் ஏற்றத்தையும், அவற்றின் இருவாய் முன்றில் நின்று கொண்டிருக்கும் தன்னையும், தன் உள்ளே விளங்கித் தன்னை உயிர்ப்பித்து இயங்கும் ஓர் இயக்க ஆற்றலையும் எங்ஙன் உணரப் போகின்றான்? தான் எண்ணுவதும் சொல்வதும், செய்வதும், உய்வதும் தனக்கே புலப்படாதவழி, பிறநிலைப்பாடுகளை இவன் எங்ஙே அறிய மாட்டுவன்? அவ்வாறு அவன் அறிந்துகொள்ள நினைப்பது

கடலைக் கைகளால் நீந்திக் கடப்பது போன்ற ஓர் அரும்பெரும் முயற்சியே ஆகும். இனி உடல் முயற்சியால் நீந்திக் கடப்பதே அத்துணை அரியதெனின், உணர்வாலும் அறிவாலும் நீந்தி அறியாமைக் கடலைக் கடந்து அறிவுத்திட்டேறுவது எத்துணை அரிதாமென்று அறிவினர் அறிந்திடுக! 'அறியாப் பேதைக்கு அச்சமுமில்லை; தெரியாக் குருட்டுக்கு இலக்குமில்லை' என்பது போல, அறியா நிலையில் அச்சமின்றி வாய்வந்தது பேசும் பேதையர் போலன்றி, உண்மை அறிவு வேண்டி உணர்வு சிலிர்த்துத் திரியும் மெய்ம்மை மாந்தர் பொருட்டே இதனை உரைக்கின்றோம்.

இயற்கைப் பொருள்களைப் பற்றியும், குற்றுயிர்களைப் பற்றியும் சில புறத் தோற்ற உண்மைகளைக் கண்ட நாம், அவற்றுட் பொதிந்து நம் அறிவுக்குப்பட்ட அகத்தோற்றத் தெரிப்பு நிலைகளைப்பற்றி இனிப் பேசுவோம்.

(தொடரும்)

தள்ளை (தாய்)

வாழை குலையீனுதலைக் குலை தள்ளுதல் என்றும் தென்னை, பனை பாளை விடுதலைப் பாளை தள்ளுதல் என்றும் கூறுவர்...... இதனால் தள்ளுதற் கருத்தில் தருதல் கருத்துப் பிறந்தது.

தள்–தரு–தார்–தா–த. தார்–தர்.

உயர்திணையிலும் இயங்கு திணையான அஃறிணையிலும் பிள்ளையை அல்லது குட்டியை ஈனும் தாய், குலை தள்ளும் அல்லது காயீனும் மரத்தைப் போலிருப்பதால் தாய்க்குத் தள்ளை என்று பெயர். பிள்ளை பெறுவதில் தாய் தந்தையர் இருவர் வினையும் கலந்திருத்தலால், அவ்விருவருக்கும் தா என்பது பொதுப் பெயராம். ஆயினும், ஈன்றாளுக்கு ஆய், தாய் (தம் + ஆய்) முதலிய தனிப் பெயர்கள் வழங்குதலாலும், பிள்ளையைத் தோற்றுவிப்பவன் தந்தையேயாதலாலும், தா என்பது பெரும்பாலும் தந்தையையே குறிக்கும்.

தா–தந்தை தாதா–தாத்தா–தாதை–தந்தையின் தந்தை.

– ஞா. தே. (முதல் தாய்மொழி)

இந்தி எதிர்ப்பு:

எத்திக்கும் இந்தி எதிர்ப்பை நிலைநாட்டித்
தித்திக்கும் செந்தமிழைத் தேர்ந்திடுவோம்—கத்திக்கும்
குண்டுக்கும் ஆளாக்கிக் கொன்றிடினும் ஆவிதமிழ்த்
தொண்டுக் களிப்போம் துணிந்து.

கோடரிக்காம் பன்ன குறுகுமனப் பான்மையினர்
நாடிருக்கு மட்டும் நலிவிருக்கும்; -பீடிருக்கும்
செந்தமிழர் எல்லாருஞ் சேர்ந்தரிவாள் ஏந்திடுவீர்,
அந்தவெறிப் புல்லர் அற!

—இரா. இராசேந்திரன், புதுவை.

செந்நிலவு போல்விளங்கும் செந்தமிழை, நம்முயிரை
இந்திமுகில் மூடி இருளாக்க —வந்தால்
புயலாக நீ எழுக! புன் மொழியை ஓட்ட
வயப்புலியே, வா, பாய்ந்து வா!

சோறே பெரிதென்று சொல்லுகின்றோர்; தொப்பையன்றி
வேறேதும் வேண்டாத வீணரைச் —சேறோடி
நாறுகின்ற சாய்க்கடையே நாளும் பெரிதென்று
கூறிடும் பன்றிஎனக் கொள்.

—பல்லவன், திருக்கழுக்குன்றம்.

எழுக, எழுக, தமிழினம் எழுக!
இன்றே எழுக; நன்றே செய்க.
அயலவர் இந்தி ஆட்சி செலுத்த
அன்னை தமிழும் அண்டிப் பிழைக்க
இந்நிலை வந்தும் இன்னுமா உறக்கம்?
இருந்தால் இன்தமி ழோடே இருப்போம்;
இறந்தால் இன்தமி ழோடிறப் போமே!

—அண்ணாமலை, கரந்தை.

கொல்வேறு விழி எதற்கு? - அஞ்சாக்
கூனிமிர்த்த நடை எதற்கு?
வெல்லுமிரு கையெதற்கு? - நின்
விரிநெஞ்சில் உரமெதற்கு?

வல்லூறுய் வரும் இந்தி! - அதன்
வரியுடல் நணிக்கிழித்துச்
செல்லுக்கே இரையாக்கு! - மின்
செந்தமிழ் தழைப்பதற்கே.

—தமிழ்ப்புனல், கூத்தூர்.

தடியடிக் கஞ்சாதே தாய்மொழி காக்கத்
தடைச்சட்ட மென்றுல்துஞ் சாதே! - அடலேறே!
தோள்தட்டு வாய்! இந்தி வால்வெட்டு வாய்! இனித்
தூள், தூள், அடிமைத் தளை.

—அபிரை. முகமதி — கலைமுகிலன்.

இருக்கின்ற நூற்கெல்லாம் மேலும் மேலும்
இல்லாத உரைகளெலாம் எழுதித் தள்ளிச்
செருக்கோடு தமிழ்ப்பெயரால் வளர்ந்த தெல்லாம்
செல்லாது தமிழ்ப்புலவீர் இனிமேல்! உண்மை!
உருக்கொண்ட இந்தியெனும் செந்தீ தன்னில்
உம்முடைய உரையெல்லாம் வேகும், சாகும்!
பொருக்கெனவே புடைத்தெழுவீர்! பகையைப் போக்கப்
போரணியில் ஒன்றிடுவீர், தமிழைக் காக்க!

—மாது—மகிழ்நன், பொள்ளாச்சி.

குஞ்சுதூக்கும் பருந்தைக்கூட கோழி கொத்தி ஓட்டுமே!
மஞ்சையான இந்திவந்து நம்மைஆள வேண்டுமோ?
நஞ்சுகொண்ட பாம்பழிக்க நெஞ்சுகொண்டே ஓடிவா!
அஞ்சிடாதே! அஞ்சிடாதே!வெற்றிவெற்றி வெற்றியே!

பூமணக்கும் தென்னகத்தில் சாமணக்க வேண்டுமா?
பாமணக்கும் தேன்மொழியில் ஊமைப்பேச்சும் வேண்டுமா?
நாமணக்கும் காப்பியத்தில் தீயைமூட்ட வேண்டுமா?
ஏ! மகனே! போர்க்களத்தே இனிவேட்டை ஆடவா!

—சுரா—உளுந்தூர்ப்பேட்டை.

நூற்றுப்பத் தாயிரமாய் நொய்பார் கூடிடினும்
போற்றுந் தமிழுக்குப் பகையாமோ?—மாற்றலர்
பொன்ற, உலகிற் புகழ்மணக்க எந்தமிழா!
இன்றே முரசம் எடு!

—புலவர். துரை—பிச்சை, கண்ணமங்கலம்.

தமிழுணர்வும் தன்னாட்டுப் பற்றுமின்றி வாழும்
தமிழ்மகனை நம்பேல் தமிழா!—அமிழ்தினும்
இன்றமிழை இத்தரையர் போற்றப் பகையொழிக்க
இன்றே படைகொண்(டு) எழு!

—மு. வில்லவன், திண்டுக்கல்.

கன்னற் றமிழைக் கரைகண்ட நற்புலவீர்,
கன்னித் தமிழாட்சி மாட்சியுடன்–என்றுமே
வேலோச்சி ஓங்கிடச் செய்வீர்; மடஇந்தி
வாலொட்ட வெட்டி எறிந்து!

—க. பூங்குன்றன், அன்பில்.

'ஒருநாட்டு மக்கள்யாம்' என்று கூறி
ஒருவாருய் இதுவரையில் ஏய்த்து விட்டீர்;
கருவான தமிழ்க்குழவி பிறக்கு முன்னர்க்
கற்றிடுக இந்தியெனக் கழறு கின்றீர்!
சருகான இலையைத்தீப் பற்ற லொப்பச்
சடுதியிலே சழக்கர்நீர் முடிவைக் காண்பீர்!
மறுவாகத் தமிழ்மண்ணில் திரிந்த இந்தி
மறைகின்ற காலமினித் தொலைவில் இல்லை!

–பரணித் துறைவன், பாளையங்கோட்டை.

தமிழுணர்வு.

கன்னித் தமிழ்நலத்தைக் காத்து வளர்த்திடவே
எண்ணிச் செயல்படுவோம் இன்று.
பழுதில்லாத் தாய் தமிழில் பல்கலையை நாமே
எழுதிக் குவிப்போம் இனிது.

–குறிஞ்சி இளந்திரையன்.

வல்லூறும். குறுநரியாம் இந்திப் பேயை
வாழ்விக்க வந்ததென்று கொஞ்சு கின்றான்;
வெல்லும்நேர் தமிழ்நாட்டைத் தமிழ்நா டென்றால்
வேப்பங்காய் உண்டவன்போல் துள்ளு கின்றான்;
பல்லாரும் புகழ் இனத்தின் வழியில் வந்த
'பைந்தமிழன் நான்' என்று கூறஅஞ்சி
நல்லுயிராம் மானத்தின், அடிமைச் சோறே
நன்றென்பான் "தமிழ"னம்மா வெட்கம்! வெட்கம்!!

–கே. பூங்காவனம், சென்னை.

பன்னுபிற மொழிப்பித்தால் ஆடுகின்ற
பம்பரம்போல் தமிழ ரின்று
தன்மானம் இல்லாமல் தமிழர்நலம்
காவாமல் உணர்வி ழந்தே
இன்றுமந்தப் பிறநாட்டார் இறக்கி விட்ட
நடைவுடையில் மயக்க முற்றார்.
இன்றமிழர் பண்பை யெல்லாம் இருக்குமிடம்
தெரியாமல் இழந்தே விட்டார்!

தாய்மொழியில் பற்றில்லாத் தமிழரிங்கே
இருப்பதால் வடவர் இன்று
வாய்மையற இந்தியையும் வலிந்திங்குப்
புகுத்திடவும் துணிந்து விட்டார்;
ஆய்ந்துணரா அறிவிலிகள் ஆங்கிலம்போல்
இந்தியையும் ஏற்பார் ஆனால்
மாய்ந்துவிடும் தீந்தமிழும்! வேற்றுமொழி
இந்தியிங்கே ஆட்சி செய்யும்!

—பி. அரங்கநாதன், மஞ்சைநகர்.

என்னைப் பழித்தாலும் என்செய்யும் என்றிருப்பேன்
அன்னை மொழியாம் அருந்தமிழின் சீர்பழித்தால்
கண்ணைக் கழற்றிடுவேன் காலிகள் மாய்ந்தொழியக்
கன்னித் தமிழையே காத்து!

மூவேந்தர் ஆட்சியிலே முத்தமிழே நீயுயர்ந்தாய்!
பாவேந்தர் தம்முயிராய்ப் பாப்புனைந்தார்—நாவேந்தர்
நற்றமிழைக் காத்ததுபோல் நந்தேவ நேயனவர்
கற்றதமிழ் செந்தமிழ்க்குக் காப்பு!

—தே. சனார்த்தனன், முதலியார்ப்பேட்டை.

நல்லுணவைத் தேடியே நாளும் அலைந்தலைந்து
மெல்லுடலம் வாடி மெலிபவனே,—சொல்வேன்
தமிழாம் உணவைச் சுவைத்துண்டு நின்றால்
அமிழ்தும் கசக்கும் அறி!

—ச. முத்துசாமி, திருச்சி-1.

கருமுகிலின் திரள்களிடை முழக்கங் கேட்டேன்.
கல்விரும்புத் துண்டங்கள் ஒன்றோ டொன்றங்(கு)
உருள்பட்டு மோதுகையில் எழும்பும் ஓசை
ஒத்திருக்கக் கண்டுணர்ந்தேன்; உலைவாழ் கொல்லன்
நெருப்பூதத் தோன்றுகின்ற வெண்தீ போல
நெளிவோடே ஒளிகூட்டும் மின்னல் கண்டேன்
கரும்புகையாய் முகில்சூழ்ந்த வானம், கொல்லன்
கலைவிளங்கும் பட்டறையாய் விளங்கக் கண்டேன்!

—கோ. பொன்வேந்தன், சென்னை-1.

மருந்தினைக் கொள்ளுங் காலை
மனக்களிப் பகன்றிட் டாலும்
வருந்துதற் குரிய நம்மின்
வல்பிணி போக்கும்! கள்ளோ

அருந்திடும் போழ்தில் இன்பம்
அளிக்கினு மதற்குப் பின்னால்
பெருந்துயர் விளைத்து நல்ல
பெருமையும் போக்குந் தானே!

—கோவி—தமிழ்ச்செல்வன், மாயவரம்.

கருத்தில் கடமையைக் கொண்டுவிட்டேன்—விடி
காலை உறக்கம் கலைத்துவிட்டேன்.
வருத்தும் பசியில் துடித்துவிட்டேன்-ஊண்
வயிற்றுக் கிலையே! நடந்து விட்டேன்

காலை வருவாய்க்குக் காத்துநின்றேன்—அருள்
காட்டெனச் செல்வரை ஏத்திநின்றேன்
கூலியாள் நானென்று கூவிநின்றேன்—கொஞ்சம்
கூட்டிக் கொடுவெனக் கேவி நின்றேன்.

பண்டை வினையெனப் பாடிவிட்டேன்-கொடும்
பட்டினி என்றாலும் பாடு பட்டேன்
வண்டி இழுத்தும் அயர்ந்துவிட்டேன்—தீய்த்து
வாட்டும் வெயிலில் வெயர்த்து விட்டேன்!

மாடுகட் கோய்வைக் கொடுத்துவிட்டேன்—மாந்த
மாடெனும் மாட்சி அடைந்து விட்டேன்
பாடென்(று) இராப்பகல் பாடுபட்டேன்-உண்டும்
பசியெனக் கண்டுளம் வாடிவிட்டேன்!

—மு. மகிழரசன், சென்னை.

தமிழிலே நல்ல எழில் கொழித்திட
தண்டமிழ்ப் புகழ் சீர்உயர்ந்திட
பழமையாம் கொடும் இருள் களைந்திடப்
பாதருங்கவி யாணசுந்தரப்
பரிதி வந்திங் கெழுந்ததே!

சொற்சுவை தரு 'முருகி'லே யொரு
தூயநல்விறை 'அழகு' கண்டிட
பொற்புறுந் தமிழ் மேடை யெங்கணும்
பொழி-தருங்கவி யாணசுந்தரப்
பூமலர் மணம் விரிந்ததே!

—சொற்கோ, நாகை.

"அண்ணாமலை நகர் வாழ்க்கை"

பாவாணர் அவர்கள் எழுதும் இக்கட்டுரைத் தொடர் அடுத்த இதழில் முடிவுறும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைப் பற்றி அவர்களின் முடிவான கருத்தை அதில் அவர் வெளிப் படுத்தியுள்ளார். அன்பர்கள் ஊன்றிப் படிக்க.

இந்தியக் கூட்டரசின் இந்திக் கொள்கை.

புலவர். வீ. பொ. பழனிவேலன் பி ஓ. எல்.

தில்லி பாராளுமன்றக் கட்டிடத்தில் 14—9—64 ஆம் நாள் நிகழ்ந்த இந்தி விழாவில் இந்தியக் கூட்டாட்சியின் முதலமைச்சர் திரு. இலால்பகதூர் சாத்திரி "தென்னாட்டில் இந்தி பரவியுள்ளது நிறைவளிக்கின்றது; இந்தி கற்பித்தலை ஊக்குவிக்கும் மாநிலங்கட்கு உதவியளிக்கப்படும்." என்று கூறியுள்ளார். இவரது கூற்றில் உள்ள வியப்பு யாது எனின், தமிழ்நாடு என்றோ, சென்னைமாநிலம் என்றோ குறிக்காமல் பொதுவாகத் 'தென்னாட்டில்' என்று புகன்றமையே. தில்லியார், தமிழ்நாடு என்று இயம்ப மறுப்பவர்கள்; ஆகவே, சென்னை மாநிலம் என்ற பொருள்தரு "மெட்ராசு ஃச்டேட்," என்றே கூறுவது மரபு. அங்ஙனமும் அறையவில்லை. தெலுங்கு நாடு, கன்னடநாடு, கேரளநாடு, தமிழ்நாடு ஆகியவற்றை ஒருசேரத் தென்னாடு என்று குறிப்பிட்டுவிட்டார். தென்னாடு என்றால், 'தென்மொழி,' வழங்கும் நாடு என்றும் பொருள் கொள்ளலாம். ஆனால், சாத்திரியார் ஆங்கிலத்தில் அறைந்திருப்பாரா? இல்லை இல்லை; இந்தியில் உரைத்தார். ஏன்? அவர் தாய்மொழிப்பற்று உள்ளவர். ஆங்கிலம் தெரிந்தாலும் இந்தியில்தான் பேசுவார். அவர் பேசாவிட்டாலும் அங்குக் கூடியிருந்தோர் விட்டிருக்க மாட்டார்கள். வடநாட்டார் நூற்றுக்கு நூறுபெயர் தாய்மொழிப் பற்றுள்ளவர்கள். தமிழர்களைப் போன்று தாய்மொழிப் பற்றும் அற்றவரல்லர்.

தில்லியரசின் துணையமைச்சரும் முன்னாள் இருப்புப்பாதைத் துறை அமைச்சருமான திரு. எசு. வி. இராமசாமி என்ற போலித்தமிழர், 'தமிழ் நாடு' என்றால் அயல்நாட்டார்க்குப் புரியாது; "சென்னை ராச்சியம்," என்பதுதான் எல்லார்க்கும் விளங்கக்கூடியது என்று சென்னையில் பேசிய ஒரு கூட்டத்தில் கூறியுள்ளார். இவர் வடநாட்டிற்குச் சென்று, "பாரத நாடு" என்பது வெளிநாட்டார்க்குத் தெரியாது; புரியவும் புரியாது. எனவே, 'இந்தியா' என்பதுதான் உலகமறிந்தது; அதனையே இனிப்பயன்படுத்தல் வேண்டும்," என்று கூறினால் என்ன நடக்கும் தெரியுமா? கல்லடியும், சொல்லடியும் அவரைப்பேச வொட்டாது இறங்கச் செய்திருக்கும். தமிழர்களோ, மொழிப் பற்றும் நாட்டுப் பற்றுமற்ற "சோற்றுப் பிண்டங்கள்," ஆகவே, தமிழைப்பற்றியும் தமிழ் நாட்டைப் பற்றியும் எவர் என்ன பேசினாலும் தட்டிக்கேட்காமல் செம்மறியாடு போலத் தலையாட்டுவர். அதனாலன்றோ, இராமசாமியார் அவ்வாறு செப்பியுள்ளார். தமிழ் நாட்டவரை ஒருபொருட்டாக யாரும் கருதுவதில்லை என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டாகும்.

தி. மு. கழகத்தினர் இந்தி எதிர்ப்புச்செய்து சிறைபுகுகின்றனர்; கட்சிப்பற்றற்றோர் பலர், ''தென்மொழி,'' ''செந்தமிழ்ச்செல்வி,'' ''குறள்நெறி,'' ''தமிழ்ப்பாவை,'' ''தமிழ்ப்பொழில்,'' ''தமிழ் நாடு,'' முதலிய ஏடுகள் வாயிலாக இந்தித் திணிப்பை வன்மையாகக் கண்டித்து வருகின்றனர். தென்மொழியின் முயற்சியால் கட்சிச்சார்பு இல்லாதார் 'ஐம்பதினாயிரம் பெயர், கையொப்பமிட்டு விண்ணப்பங்களைப் பதிவு அஞ்சலில் இந்திய முதல் அமைச்சர்க்கும், தமிழக முதலமைச்சர்க்கும், அனுப்பியுள்ளனர். இவற்றை யெல்லாம் மறைத்துப் பேசியுள்ளார் சாத்திரி. அதனால்தான் தனித்தனியே ஒவ்வொரு நாட்டையும் கூறாமல் 'தென்னாடு' என்று பொதுப்படக் கூறிவிட்டார் போலும்.

தமிழ்நாட்டில் இந்திக்குள்ள எதிர்ப்புகளை யெல்லாம் மறைத்துத் தென்னாட்டில் இந்தி பரவியுள்ளது. தமக்குப் பொந்திகையளிப்பதாகக் கூறியுள்ளது பித்தலாட்டமேயாகும். அது மட்டுமா? இந்திபயிற்றுவதை ஊக்கமாகச் செய்யும் மாநிலங்கட்கு உதவித்தொகை யளிப்பதாகவும் கூறியுள்ளார். 'பணம்' என்றால் தமிழன் வாயைப் பிளப்பான் என்பது அவர்க்குத் தெரியும் போலும். குரைக்கிற நாய்க்குத் தேங்காய்க் கீற்றுப்போட்டுத் தப்புவது போன்றது இச்செயல் இன்னும், முனைப்பாக எதிர்க்கிறவர்கட்கு அரசியலில் அலுவல் கொடுத்தால் 'ஆ' என்கிற வாயில் அவல் போட்டது போலாகிவிடும். தமிழனை ஏமாற்றும் நெறியறிந்தவர்கள் வடநாட்டார் என்பது தேற்றம். இந்தியை எதிர்க்கிறவர்களை, ''பணத்தாலும், பதவியாலும்,'' சரிப்படுத்தி விடலாம் என்பதத்குச் சான்றுகள் பல. அவ்வாறு சரிப்படுத்தப் பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பெரியார் இராமசாமியும், ஈ வே. கி. சம்பத்துமாவர். இவர்கட்கு வால்பிடிக்கிகள் பலரும் உளர். பணம் பத்துவகையும் செய்யும் என்பது இவர்கள்பால் மெய்யாகிவிட்டது. தமிழனுக்குத் தன்மானமில்லை. பணம், பதவி பட்டம் இவற்றுற்காக எதையும் செய்யப் பின்னிடான் என்று வடவர் நன்கறிந்துளர்.

பிறிதோரிடத்தில் பேசுங்கால் திரு இலால்பகதூர், ''தென்னிந்தியாவில் ஏராளமான மாணவர்கள் இந்தி கற்கிறார்கள்'' என்றியம்பியுளார் தெலுங்கு, கன்னட, மலையாள நாடுகளில். அவ்வாறிருக்கலாம்; தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் அக்கூற்றுப்பொருந்தாது இந்தி கற்காத மாணவர்களே ஏராளம். தமிழ் நாட்டுப் பார்ப்பனர் நூற்றுக்கு நூறு விழுக்காடு இந்திபயிலுகின்றனர். அவர்கள் தமிழ்நாட்டு மக்கட்டொகையில் நூற்றுக்கு மூவரேயுளர். ஏனைய தொண்ணூற்றேழு பெயரில் வடநாட்டார்க்கு வால்பிடிக்கும் பேராயக் கட்சியினரின் பிள்ளைகளாகச் சிலர் இருக்கலாம். அன்றித் தாய்மொழிப் பற்றும் தாய்நாட்டுப்

பற்றுமற்ற சோற்றுலடித்த சுவர்களின் பிள்ளைகளாயிருக்கலாம். எங்ஙனமாயினும் இந்தியைப்படிப்பவர் நூற்றுக்குப் பத்துப் பெயருக்குமேல் இரார் என்பது ஒருதலை.

மேலும், ஒன்பதாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு முடிய யாவரும் இந்தி படித்தாக வேண்டும் என்ற சட்டமும் உளது. பள்ளியிறுதிவகுப்பு அரசியல் தேர்வுக்கு இந்தியும் எழுதியாகவேண்டும் என்ற கட்டாயமும் உளது. இதன் காரணமாக வேண்டா வெறுப்புடன் மாணவர்கள் படிக்கிறார்களே யன்றி, முழுமனவிருப்புடன் படிப்பவர் ஒருவர்கூட இலர். மாணவர்களைக் கோட்டாலே உண்மை உணரலாம். இந்தி விருப்பப்பாடம் என்று இன்று அரசு கட்டளை பிறப்பிக்கட்டும்; ஒரு மாணவன் கூட இந்தியை ஏறெடுத்தும் பார்க்கமாட்டான். அரசு, மாணவர் சிலர்க்குப் பணம் கொடுத்துப் படிக்கச் செய்வதும், அலுவல் தருகிறேமென்று ஆவல் உண்டாக்குவதும், 'இப்போழ்து இந்தி படிக்காவிட்டால் பின்னால் வேலைகிடைக்காமல் வருந்துவீர்கள்,' என்று காமராசர் முதல் பிற பேராயக் கட்சியினரும், இந்திபடியுங்கள் என்து பெரியாரும், இந்தியை நாம் வெறுத்தாலும் பின்னால், பார்ப்பனர் படித்து அலுவல்களையெல்லாம் கைப்பற்றிவிட்டால் நாம் பின்தங்கிவிடுவோமாதலின் யாவரும் இந்தியைக் கற்றுக்கொள்ளுங்கள் என்று இந்தியத் தமிழர்(!)திரு சா. குருசாமி (குத்தூசி, அறிவுப்பாதை ஆசிரியர்) அவர்களும் அடிக்கடி பறைசாற்றி வருவதும் இல்லாமலிருந்தால் தமிழ்மாணவர் ஒருவர்கூட இந்தி படிக்கமாட்டார். சாத்திரியார், தென்னிந்தியாவில் ஏராள மாணவர் இந்தி கற்கிறார்கள் என்று துணிந்துகூற வாய்ப்பு இருந்திருக்காது. என்னே! தமிழர்களின் தனிப்போக்கு.

இந்தியக் கூட்டரசின் கல்வியமைச்சர் திரு. சக்ளா "தென் மாநிலத்தில் உள்ள மக்கள் விரும்பிப் படிக்கிறவரை இந்தி கட்டாயமாக்கப்படாது," என்று எச்சரித்துள்ளார். இப்பொழுது தென்மாநிலத்தில் இந்தி கட்டாயமில்லையென்று எந்த அடிப்படையில் கல்வியமைச்சர் கழறுகிறார் என்பது எமக்கு விளங்கிற்றிலது. பள்ளிகளில் ஒன்பதாம்வகுப்பு முதல் பதினோராம்வகுப்பு முடிய யாவரும் இந்தி படித்தல்வேண்டும் என்று இருக்கிறதே யன்றி, 'கட்டாயமாக' என்ற சொல் இல்லை. அவ்வளவில் கல்வியமைச்சர் கூற்று சரியே ஆனால், பகுத்துணரும் திறனமைந்த எவரும் 'எல்லாரும் இந்தி படித்தல் வேண்டும்,' என்பதைக் கட்டாயம் என்றே சொல்வர். விருப்பமில்லாத மாணவர்களை விடவில்லையே. வகுப்பிலுள்ள யாவரும் இந்தி படித்தாகவேண்டும் என்று தானே கூறப்படுகிறது. கல்வியமைச்சர் நேர்மையானவராயின் இன்று ஆணை பிறப்பிக்கட்டும். எத்தனைப் பெயர் (பார்ப்பனரைத்தவிர) இந்தி படிக்க முன்வருகின்றார்கள்

என்று பார்க்கலாம். கல்வியமைச்சரின் பொருளற்ற, பொருத்தமற்ற, முரணான பேச்சு அறிவுள்ளவர்களால் ஆயத் தக்கது.மற்றேர்பால், கல்வியமைச்சர் கூறியுள்ள செய்தியே நம்மை நலியும் நடுக்குறச் செய்கிறது. ''எல்லா மாநிலத்தாரும் ஏற்கும் வகையில், ''பொது லிபி'', எல்லா மொழிகட்கும் அறி விக்கப் பெறும், என்பதே அச் செய்தி. இப் பொது எழுத்துக் கொள்கை தமிழைத் தவருது அழித்துவிடும் என்பதில் ஐயமே யில்லை. தமிழ் மொழி ''உயர்தனிச் செம்மொழி''. பிற மொழிக் கலப்பே இதற்கு வேப்பங்காய்; அத்துடன் எழுத்தையும் மாற்றி விட்டால் எரிகிற வீட்டின்மீது இன்னும் மண்ணெய்யை ஊற்றி யது போன்றதே.

தமிழ் அழியும்; தமிழ் இனம் ஒழியும்; தமிழ் நாகரிகம், பண்பாடு யாவும் அழிந்துபோம். தமிழின் இயல்பறியாத கல்வி யமைச்சர் உரையை யாம் வன்மையாகக் கண்டிக்கின்றேம். என்றுமே தமிழ் எழுத்துகளை வேற்று எழுத்துகளால் எழுதத் தமிழர் ஒப்பமாட்டார்கள். ஆணைச் செருக்கால் வலிந்து புகுத்தி ஞல் தமிழர் அனைவரும் உயிரீடு செய்தேனும் அதைத் தடுப்பர் என்பதைத் தில்லியரசினர் உள்ளிட்ட அனைவரும் உணர்வார் களாக. தங்களிடம் ஆட்சி இருக்கிறதென்ற செருக்கால் எதையும் செய்துவிடக்கூடாது. நன்கு ஆராய்ந்தே செயல் படுத்தல் வேண்டும். மக்களாட்சி என்றும், நிகரமை மக்களாட்சி யென்றும் கூறிக் கொண்டு இவ்வாறு ஓர் இனத்தாரது தாய் மொழியையே அழிக்க முற்படுவது முறையன்று. 'தனிப்பட்ட ஓர் ஆள் எதிர்த்தாலும் அதற்கு எதிராக அரசு எதுவும் செய் யாது. ஒருவர்க்கும் தீங்கு பயக்காத வகையில்தான் எதனையும் செய்வோம்,'' என்று இயம்பித்திரிவோர் இத்தகைய அழிவு வேலையில் ஈடுபடலாகாது.

தமிழ் நாட்டில் ஒரு கோடி மக்களுக்குமேல் உளமார இந்தியை எதிர்க்கிறேம். எங்கட்குத் தேவை இல்லை என் கிறேம். இது தில்லிக்கு எட்டவில்லை. ஏனெனில், செய்தித் தாள்களின் இருட்டடிப்பு போலும். என்றுமே இந்தியை வரவேற்கமாட்டோம். எந்த உருவத்தில் அது வந்தாலும் வேண்டவே வேண்டா. எழுத்து மாற்றம் அறவே வேண்டா. தமிழ் நாட்டில் உள்ள கட்சியினர் யாவரும் ஒரு கோடிக்கு மேலிரார்; பார்ப்பனர் ஓர் இலக்கம் பெயர்; இரண்டுங்கெட் டான்கள் ஓர் இலக்கம் பெயர்; ஏனையோர் கட்சிச் சார்பற்ற வர்கள். இவர்களுள் தனித் தமிழ்ப் பற்றுளர் ஒரு கோடிக்குக் குறையார். இவர்களின் விருப்புக்கு மாருக அரசு செயல் புரிந் தால் வெறுப்புக்கும், எதிர்ப்புக்கும் ஆளாக நேரும். மூடிமறைப் போரைத் தில்லியரசினர் நம்பி முட்டுப்பட வேண்டா என எச்சரிக்கின்றேம். ஆய்ந்து ஓர்ந்து செய்க. ●

பல்கலைக் கழகமா? பல்பிழைக் கழகமா?

ஆ. துரைக்கண்ணு,
அரசினர் கலைக்கல்லூரி, கோவை.

பிழைகள் அருகிய தமிழில் வெளிவரும் 'தென்மொழி' போன்ற ஏடுகள் உலாவரும் இந்நாளில், தமிழகத்தின் தலைநகரில் உள்ள பல்கலைக் கழகத்தினர் வெளியிடும் பாடநூல்களில் மலிந்துள்ள பிழைகள் அளப்பரிதாக உள்ளன. பிழைகள் மலிந்துள்ளமை போன்றே பாட வேற்றுமை(பேதங்)களும் மலிந்துள்ளன. பாட வேற்றுமைகள் மலிந் திருப்பினும் ஏற்றுக்கொளல் இயலும்; ஆயின் பிழைகள் மலிந்திருப்பின்..! தமிழிற் பண்டாரகர் பட்டம் பெற்றுரும், பேராசிரியர்களும், ஆராய்ச்சி வல்லுநர்களும், உருவாகும் தமிழறிஞர்க்கு உயர்நிலைப் பட்டங்கள் வழங்குவாரும் செறிந்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையினர் வெளியிடும் பாட நூல்களில் காணப்படும் பிழைகள் எண்ணிலவாதல் நோக்குழிச் சென்னையிலுள்ளது 'பல்கலைக்கழகமா?' அன்றிப் 'பல்பிழைக் கழகமா' என்றே ஐயுறும் நிலைக்கு ஆளாதல் வேண்டும். எடுத்துக் காட்டாக, வரும் ஏப்ரல்'65-இல் தமிழ்த் தேர்வு எழுதவிருக்கும் பி. ஏ., பி. எசி. மாணவர்க்கெனப் பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப் பெற்ற செய்யுட் பாடநூலிலிருந்து, ஒருசில பிழைகளை இங்குக்குறித்துள்ளேன். கீழ்வருவனவற்றுள் முதல் அடி பாடநூற்கண் பதிக்கப்பெற்ற பிழையுள்ள அடியாகும்; அடுத்துள்ள இரண்டாம் அடி பிழையற்ற அடியாகும்.

சிறுபாணாற்றுப்படை:

1) ''வெளிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப''
''வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப'' (வரி-8)

2) ''கான மஞ்ஞைருக்குக் க்லிங்கம் நல்கிய''
''கான மஞ்ஞைருக்குக் கலிங்கம் நல்கிய'' (வரி-85)

3) ''நணிமலை நாட னள்ளியு நளிசினை''
''நளிமலை நாட னள்ளியு நளிசினை'' (வரி-107)

4) ''எழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோ
லெழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்''
''எழுசமங் கடந்த வெழுவுறழ் திண்தோ
ளெழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்'' (112,113)

5) ''பொருபுன றருஉம் போக்கரு மரபிற்''
''பொருபுன றருஉம் போக்கரு மரபிற்'' (118)

6) ''நீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்''
''நீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்'' (201)

7) ''எறிந்துரு மிறந்த வேற்றரு சென்னி''
''எறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னி'' (266)

புறநானூறு:

8) ''துய்த்தலை மந்தியைக் கையிடுஉப் பயிரும்
''துய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்''
(புறம்: 158, வரி-24)

சிலப்பதிகாரம் (நீர்ப்படைக்காதை):

9) ''குடையுங் கோலும் பிழைக்க வோவென''
''குடையுங் கோலும் பிழைத்த வோவென'' (வரி-77)
10) ''நாள்விடுஉ நல்லுயிர் நீத்துமெய் விடவும்''
''நாள்விடூஉ நல்லுயிர் நீத்துமெய் விடவும்'' (102)
11) ''இனமணிப் புரவீ யோரேழ் பூண்ட''
''இனமணிப் புரவி யோரேழ் பூண்ட'' (135)
12) ''பிறையோர் வண்ணம் பெருந்தகை நோக்க''
''பிறையேர் வண்ணம் பெருந்தகை நோக்க'' (147)
13) ''குறுநடைப் புரவி னெடுந்துயர் தீர''
''குறுநடைப் புறவி னெடுந்துயர் தீர'' (166)
14) ''வலம்புரி பீன்ற நலம்புரி முத்தம்''
''வலம்புரி யீன்ற நலம்புரி முத்தம்'' (244)

சீவக சிந்தாமணி (காந்தருவ தத்தையார் இலம்பகம்):

(செய்யுள் வரிக்குத் தரப்பட்டுள்ள முதல் எண், பாட நூலில் செய்யுளுக்குத் தரப்பட்டுள்ள எண்; இரண்டாம் எண் சீவக சிந்தாமணி நூலிலுள்ள வரிசை எண்.)

15) ''ஏதமொன் றில்லை சேறு மென்றலு மிலங்கு வாட்டை''
''ஏதமொன் றில்லை சேறு மென்றலு மிலங்கு வாட்கை''
(1-694)
16) ''கருநெறி பயின்ற குஞ்சிக் காணகில் கமழ வூட்டி''
''கருநெறி பயின்ற குஞ்சிக் காழகில் கமழ வூட்டி''
(3-696)
17) ''விழித்துவெய் துதிர்த்து மெல்ல நடுங்கித்தன்
றேழி கூந்தல்''
''விழித்துவெய் துயிர்த்து மெல்ல நடுங்கித்தன்
றேழி கூந்தல்'' (19-715)
18) ''ஒருமுருமே றிதுவுண்ட தொழிக வொண்பொனுகு
கொடியே''
''ஒருமுருமே றிதுவுண்ட தொழிக வொண்பொ
னுகுகொடியே'' 22-718)

19) ''திருந்துதார்ச் சீவகற்கே சோந்தன வென்றெண்ணி''
''திருந்துதார்ச் சீவகற்கே சேர்ந்தன வென்றெண்ணி''
(28-730)

20) ''ஒள்ளிய வென்று மாந்த ருவர்க்கடன் மெலிய ஆர்ப்ப''
''ஒள்ளிய வென்று மாந்த குவாக்கடன் மெலிய ஆர்ப்ப'' (34-741)

பெரியபுராணம் (திருநாவுக்கரசர் புராணம்):

21) ''பூண்ட மணத்தொடு நீள்தரு வாயிற் புறத்தணைந்தார்''
''பூண்ட மணத்தொடு நீள்திரு வாயிற் புறத்தணைந்தார்''
(10-223)

22) ''நீடுபுகழ்த் திருவாரூர் நிலவுமணிப் புற்றிடங்கொள் நித்தர் தம்மை''
''நீடுபுகழ்த் திருவாரூர் நிலவுமணிப் புற்றிடங்கொள் நிருத்தர் தம்மை (13-226)

23) ''நான்மறைநூற் பெறுவாய்மை நமிநந்தி அடிகள் ...''
''நான்மறைநூற் பெருவாய்மை நமிநந்தி அடிகள்...''
(14-227)

24) ''புன்ஞக மணங்கமழும் பூம்புகலூர் வந்திறைஞ்சிப் பொருளில் சீர்த்தி''
''புன்ஞக மணங்கமழும் பூம்புகலூர் வந்திறைஞ்சிப் பொருவில் சீர்த்தி'' (18-231)

25) ''சித்த நிலாவுந் தெனதிரு ஆரூர் நகராளும்''
''சித்த நிலாவுந் தென்திரு ஆரூர் நகராளும்''
(22-235)

26) ''பூமலர் வாசத் தணேபண் சூழும் புகலூரில்''
''பூமலர் வாசத் தண்பணே சூழும் புகலூரில்''
(24-237)

27) ''தேர்மன்னு மணிவீதித் திருவாங்கூர் சென்றணைந்தார்''
''தேர்மன்னு மணிவீதித் திருவாக்கூர் சென்றணைந்தார்'' (34-248)

28) ''அரிதில் திறக்கத் தாம்பாட அவர்பா டிடஎளிமை''
''அரிதில் திறக்கத் தாம்பாட அவர்பா டியஎளிமை''
(61-275)

29) ''பழிபோம் பொழுது மிகவிளைத்து......''
''வழிபோம் பொழுது மிகவிளைத்து......'' (73-304)

30) ''நாதர் மருவுந் திருவண்ணு மலையை நாடி......''
''நாதர் மருவுந் திருமலைகள் நாடும் பதிகள்...''
(79-311)

31) அறுசீர் பயின்ற விருத்தமான 38-ஆம் செய்யுளின் முதல் வரியில் மட்டும் ஐந்து சீர்களே உள்ளன.

''சென்றுட் புகுந்தி திருவீழி அமர்ந்த செங்கனகத்''
''சென்றுட் புகுந்து திருவீழி மிழலை அமர்ந்த செங்கனகத்'' (38–252)

கம்பராமாயணம் (நகர்நீங்குபடலம்):

32) ''மையிற்கரி யாளெதிர் நின்னையும் மௌலி சூட்டல்''
''மையிற்கரி யாளெதிர் நின்னையம் மௌலி சூட்டல்'' (13)

33) ''உண்டாய துன்பக்கடற் கெல்லை யுணர்த்திலாதாள்''
'' உண்டாய துன்பக்கடற் கெல்லை யுணர்ந்திலா தாள்'' (30)

34) ''நிரைத்திடை யிடைவிழ நடிதுநிற் கின்றான்''
''நிரைத்திடை யிடைவிழ நெடிதுநிற் கின்றான்'' (47)

திருவொற்றி மும்மணிக்கோவை (கழற்றெதிர்மறை):

35) ''தந்தாது வளரும் முந்திரிக் கொடியும்''
''நந்தாது வளரும் முந்திரிக் கொடியும்'' (கழற்றெதிர்மறை 77)

36) ''மீனினம் வளைஇய நாண்பதிப் போல''
''மீனினம் வளைஇய நாண்மதி போல'' (88)

கல்லூரியிற் கற்றுவரும் மாணவனாகிய என் புல்லிய விழிகளுக்கே பல்வேறு பிழைகள் புலப்பட்டுள்ளன வென்றால், இனிக் கற்றுத் துறை போகியோர் எத்தனைப் பிழைகளை இந்நூற்கண் காண்டல் இயலுமோ!

பாட்டெழுதும் அன்பர்கள் கவனிக்க.

1. பாடல்கள் தனித்தமிழிலேயே இருத்தல் வேண்டும்.
2. அன்பர்கள் ஒரே வகைத் தலைப்புகளில் எழுதாமல் இயற்கை, வரலாறு, அறிவியல், குமுகாயச் சீர்திருத்தம்பற்றிய தலைப்புகளிலும் எழுத வேண்டுகின்றோம்.
3. பாடல்கள் தொடர்பாக மடல் எழுத இயலாது.
4. விடுத்த மூன்று திங்கட்குள் பாடல்கள் வெளிவரவில்லையாயின் அவை தள்ளப்பட்டன என்று கொள்க.

திருத்திப் படிக்க.

பக்கம் 67–இல் ஆசிரியர் குறிப்பில் இரண்டாவது வரியில் உள்ள 'பலவாராக' என்றிருப்பதைப் 'பலவாறாக' என்றும் மூன்றாவது வரியில் 'பொத்றுதவை' என்பதைப் 'பொறுத் தவை' என்றும், பக்கம் 68–இல் மேலிருந்துகீழ் 9–ஆம் வரியில் 'பெண்டிற்' என்பதைப் 'பெண்டிர்' என்றும் திருத்திப்படிக்க வேண்டுகின்றோம்.

[–ஆர்.]

தமிழ்ப் பெண்களுக்கு...!

புலவர். தி. நா. அறிவுஒளி.

இக்கால இளம் பெண்கள், மணமான செல்வியர், அன்னையர் ஆகியோரின் பண்புகள், நடையுடை சாயல்கள், வாழ்வுப் போக்குகள் ஆகியவற்றை மிகப்பொறுமையோடும், நடுநிலைமையோடும் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து தெளிந்தபின், என்னகம் பட்ட ஆறு இன்னல் சொல்லில் அடங்காததாகும். வரவரத் தமிழ்ப் பெண்களின் மரபுவழிப் பண்புகள் சீர்குலைந்து அழிகின்றன. அவ்வரும் பண்புகளை அழிக்கும் இழி முயற்சி மிக வெறியோடும் விரைவோடும் செய்யப்பட்டு வருகிறது. படித்தவர்கள் எனப்படுவார் முழுத்தன்னல வெறியராகவும், தற்குறியராகவும் ஆகியுள்ளமையால், பெண்டிரைத் தமக்குரிய பொறியாகவும், வெறிதீர்க்கும் கருவியாகவும் பயன்படுத்திக்கொள்ளத் தொடங்கிவிட்டனர். பெண்டிர்க்கு மிக உரிமைகள் அளித்துவிட்டதாகவும், எல்லாத் துறைகளிலும் நிறை வாய்ப்பு வழங்கிவிட்டதாகவும், இயற்கைப் பண்புகளைத் துறந்து வெறியாட்ட மாடுவதே பெண்டிர் முன்னேற்றம் என்றும் நெறிபிறழ் வெறியுரை முழக்கிப் பேதையரை மருட்டிப் போலி வாழ்விலீடுபடுத்தி மன்பதையை இழிவுசெய்து அழிக்க முற்பட்டுவிட்டனர் தன்னலக்கயவர் பலர்.

பெண்ணுரிமை, பெண்டிர் முன்னேற்றம், மன்பதையில் மகளிர்க்கு விழுமிய மதிப்பு–சிறப்பு–தகுதி அளிப்பதை நான் முழு ஆர்வ உள்ளத்தோடு வரவேற்கிறேன்; போற்றுகிறேன். நான் மடமையுலகில், பிற்போக்குப் பேதைமை பேசுபவனல்லன். மகளிர் தாழ்பிறவியர், வாழ்வில் ஒத்த சிறப்பில்லாதார் எனக்கருதும் இடைக்காலக்கடையர் குழாத்துள் ஒருவனல்லன். ஆயின், பெண்ணுரிமை என்ற பெயரால் கயமை வளர்வதும், மறைமுகமான இழிந்த பெண்ணடிமை வளர்வதையுமே நான் முழு உள்ளத்தோடு வெறுக்கிறேன்; சாடுகிறேன். படித்த மங்கையரிற் பலர் கூறக் கேட்டிருக்கிறேன். ''என்ன? மணம் புரிந்துகொண்டு ஒருவனுக்கு ''அடிமை''யாகி, அவன் சொற்படி ஆடி வாழ்வதா? இழிவு; அவனுடைய உருட்டல் மருட்டலுக்கு அடங்கி நடக்கவேண்டும்! உம்! எவ்வளவு 'தன்மதிப்பற்ற நிலை'? ஏதோ ஒரு பணியை ஏற்று, உரிமையோடு பொருளீட்டித் தன் விருப்பமாக வாழ்வதே சீரியது'' என்று மிழற்றுவதைக் கேட்டுத் துன்புற்று வருந்தி நைந்திருக்கிறேன். இப் பெண்டிர் படித்தோரா? அன்றி–? தலைவன்-தலைவியர் காதல் இல்லறத்தில் உயர்வு-தாழ்வுக்கே இடமில்லை. உயர்வு-தாழ்வு கற்பிக்கும்பொழுது இன்பமோ, ஆறுதலோ, அமைதியோ பிறக்காது. இஃது உண்மை. வாழ்வடைவால் பெரியோர்-அறிஞர் நன்கு அறிந்திருப்பர்.

கணவன் அன்பால் அணைத்தின்புறுத்தும் கடமையை ஏற்றவன். ஏதோ சில நிலையில் அவன் மனைவியைக் கண்டிக்க ஏச-மருட்ட உரிமை பெறக் கூடாதா? அந்த அளவு உரிமையற்றநிலை ஆணுக்கு ஏற்படவேண்டும் என எண்ணும் படித்த -பணிபுரியும்-மகளிர் தம் வாழ்வில் கணவனோ, உறவினனோ அல்லாதவனாகிய, மேலாளர், தலைமைக் கணக்கன், அலுவலர்கள் முன்னிலையில் அடங்கி ஒடுங்கி அடிமைகளாகிறார்களே; இதுவோ பெண்ணுரிமை? ஆணையர் எவ்வளவு ஏசினாலும், மருட்டினாலும் காரணவிளக்கம் கேட்டுவாட்டினாலும் இளிக்கிறதோ? இல்லறக் கணவனின் ஏச்சு பெண்ணுரிமைக்குக்கேடு என்னும் மகளிர் 'கண்டவனிடத்தில்' ஏச்சுக் கேட்பதும், தண்டனை பெறுவதும் தன் மதிப்புக்கு உகந்ததாகுமோ? மாமனாரை வணங்கக் கூசும் படித்த மகளிர், அலுவலகத் தலைவனுக்குக் கண்ட இடமெல்லாம் கை கூப்பிப் பல்லிளித்து குழைந்து வணங்குவதுமட்டும் 'பெண்ணுரிமை'யின் பாற்படுமா? பெண்ணடிமையின் பாற்படுமா? சற்றே ஆராய்ந்து பார்த்தால் அன்புடையோரை விரும்பி வணங்குவது பண்புக்கு ஒத்தது; பகுத்தறிவுக்கிசைந்தது; தன்மதிப்புக்குரியது. ஆனால் பணிமனைத் தொடர்புடைய தலைவர்க்கு வணங்குவது செயற்கையானது; போலியானது; மனச் சான்றுக்கு மாறானது; தன்மானமற்றது என்பது விளங்கும்.

பணிமனை வாழ்வில் ஒழுக்கக்கேடும், கெட்ட பழிப்புகளும், இழுக்கும் பரவலாகநிலவி வருவதைப்பற்றிப் பலவகைப் பேச்சுகளைக் கேட்கிறோம்; வழக்குகள் நிகழ்வதையும் அறிகிறோம். இதனால் படிப்பு, பண்பாட்டையோ, நல்லொழுகலாற்றையோ, இன்ப அற வாழ்வையோ, வளர்த்ததாகத் தெரியவில்லை. அறியமுடியவில்லை. ஆகவே படிப்பும், பணிபுரியும் வாழ்வும், செல்வமும் மட்டும் பெண்களை முன்னேற்றவோ, நல்வாழ்வில் நிலை நிறுத்தவோ போதா என்பதை மகளிரும், பெற்றோர்களும், ஆடவரும் உணர்தல்வேண்டும். பெண்மையை அழித்துக்கொள்ளப் பெண்களே தாமாக விரும்பிவரும் இழிவான மானமற்ற பழிநிலை இந் நூற்றாண்டில் முதற்படியான குற்றமாகும். அரசியல் கூட பெண்மையழிவுக்குப் போதிய ஊக்கமும் ஆக்கமும் அளித்து நாட்டின் குடும்ப வாழ்வமைதியையும், இன்பத்தையும் அழித்துக் கொல்லுகிறது என்பதை நினைக்க நெஞ்சு நடுங்குகிறது. அறத்தையும் பண்பாட்டையும் சால்பையும் காக்க வேண்டியவர்கள் பெண்களே. அவர்களே இவற்றைத் துறக்கவும், கொல்லவும் மறக்கவும் வெறுக்கவும் இழித்துப் பழிக்கவும் முற்பட்டால் உலகம் உய்யுமா? வாழ்வில் அமைதியும் இன்பமும் ஆறுதலும் கற்பும் ஒழுங்கும் நிலைபெறுமா? ஐயோ! உலகமே அழியும்! சாக்காடு ஆகும். பணிபுரியும் பெண்டிர் பண்பழிவில் ஆடவருக்கும் போதுமான பங்குண்டு என்பதை மறுக்க முடி

யாது. ஆனால் பெண்டிரின் இசைவும் விருப்பமுமின்றி எந்த ஆடவரும் அவர்களுக்கு ஊறு சூழமுடியாது என்பதையும் நாம் மறத்தலாகாது. ஆகவே உறுதி, திண்மையின்மை பெண்டிரின் இந் நூற்றுண்டின் இணையற்ற பெருங்குறை என்பதை யாவரும் அறிதல் வேண்டும்.

தற்கால மகளிர் அடக்கம், பொறுமை, துன்பம் பொறுத்தல் தன்னலமறுப்பு ஆகிய உயர் அந்தண்மைப் பண்புகள் இல்லாத வராகவும், உயரிய பண்புகள் குறைந்தோராகவும் காணப்படு கின்றனர். பெற்றோரும், பெரியோரும்கூட இனைய நற்பண்பு குலைய அடிப்படையாக இருக்கின்றனர் என்ற மானக்கேடான உண்மையைச் சொல்லாமல் இருத்தல் உண்மையை மறைத்த லாகும். பண்டைக் காலத் தமிழ் மகளிர் உணர்ச்சிச் செறிவும், திண்ணிய உள்ள உரமும் உடையோராய் விளங்கினர். அத னற்றான் பூதப் பாண்டியன் தேவிபோல் பலரையும், ஆதிமந்தி யார், வெள்ளி வீதியார் போன்றவரையும் நந்தமிழகம் நனி விழுப்பத்தோடு பெற்றுச் சிறந்திருந்தது. இற்றை ஞான்று உணர்வுச் சிதறல் மிகுந்துவிட்டது. மேனாட்டு பழக்க வழக்கங் களைக் கண்டு அவ்வழியிற் செல்லும் அறியாமை வெறிமிகுந்து விட்டது. மணவிலக்கும், குடும்பப் பிரிவினையும், மணமுறிவும், கணவன்–மனைவி வழக்காடலும் நாட்டில் நிகழக் காண்கிறோம். இத் தீவினைகட்கு அடிப்படை மகளிர் பண்பாட்டுக் குறைவும், பிழை வழியில் இன்றைய படித்த மந்தையர் செல்லலும், இத் தீமைகளுக்குச் சட்டமும் செல்வாக்கும் துணைபோதலும் கரணி யங்களாம் கழகத் தமிழிலக்கிய அறிவும். பண்டைத் தமிழ் ஒழுகலாறும், கட்டாயக் கல்விப் பயிற்சியாகத் தமிழ் மகளிர்க்கு அளிக்கப் பெறல் ஒன்றே இக் கொடும் பேரளற்றிலிருந்து தமிழ் மன்பதையைக் காத்தற்குரிய வாயிலாம். இதனைச் செய்யப் பல்கலைக் கழகங்கள் தலைப்படுக! தமிழறிஞர் தமிழ் மகளிராகத் தம் குடும்பப் பெண்களைப் பேணி வளர்ப்பாராக! போலிப் புதுமை வெறியால் அருந் தமிழ் நெறியை அழிப்பது மாபெரும் பழிதரும் தீவினையாம் நாம் நல்லது செய்ய இயலாவிடினும் தீமை பரவாமல் தடுக்கவேனும் முற்படவேண்டாவா? *

நீங்கள் சுவைத்தீர்களா?

துரை. மாணிக்கம் எழுதிய

கொய்யாக்கனி

தென்மொழி உறுப்பினர்கட்டு மட்டும் விலை 1–50.

அஞ்சல் செலவு தனி.

விளங்கியல் (Physics).

அடிப்படை அளவை முறைகள்.

(Fundamental unit of Measures)

புடவியில் [Universe] நிகழும் நிகழ்ச்சிகள் அனைத்தும் காலம், இடம், பொருள் இம்மூன்றும் கொண்டு தோன்றும். அவையாவன: முதல் காலஅளவை, முதல் நீட்டலளவை, முதல் பொருண்மையளவை. நீளம், காலம் பொருண்மை இவற்றைப் பிழையின்றித் திருத்தமாக ஒப்பிடல் முடியும். ஆகையால் இவற்றிற்கு முதல் அளவைகள் ஏற்படுத்திக்கொண்டால், மற்றபடி வேண்டிய தனிஅளவைகளை இந்த அடிப்படை அளவைகளிலிருந்து ஏற்படுத்திக் கொள்ளல் எளிதாகும்.

விளங்கியற் புலவர்கள் "கீ. நூ. சீ. நொ. [வி]" முறையென்ற கீழ்நூறுகோல், சீரெடை, நொடி [விநுடி] இவற்றைக் கொண்ட தனியளவை முறையை எளிதாகப் பயன்படுத்தி வருகின்றனர். [கீ. நூ. சீ. நொ. முறை = C. G. S. System]. கீழ்நூறுகோல் [Centi meter] என்பது கோலில் [Meter] நூற்றில் ஒரு பகுதியான முதல் நீட்டலளவை சீரெடை [Gram] என்பது முதன் பொருண்மையளவை நொடி [விநுடி] என்பது முதற் கால அளவை. இந்த அளவை முறையை உலகத்தில் விளங்கியற் புலவர்கள் [Physicits] அனைவரும் பயன்படுத்துவதால் இதை வைத்துக் கொள்ளுவதில் மிகுந்த பயன் உண்டு

நீட்டலளவை "கீ. நூ. சீ. நொ [வி]" முறையில் அடிப்படை முதல் நீட்டலளவை கீழ்நூறுகோல் [Centimeter] அதாவது கோல் [Meter] என்ற நீட்டலளவில் நூற்றில் ஒரு பகுதி. பாரிசு [Paris] நகரத்தில், நிலைத்த வெப்பநிலையில், அரசாங்கக் காப்பில், "கோல்" நீள அளவுடைய ஒரு பளிதனச் சட்டம் ([Platinum] வைக்கப்பட்டுள்ளது ஆங்கில நீட்டலளவை, ஆங்கில அரசாங்கக் காப்பில் வைத்திருக்கும் வெண்கலச் சட்டம் ஒன்று. அதன் நீட்டல் அளவு இரு முழம் (கெஜம்; [Yard] ஆகும். இதுவே, அடி அங்குலங்களுக்கு அடிப்படையாகும்.

1 · இரு முழம் (Yard; கெஜம்) = 91 · 43835 கீழ்நூறு கோல். (Centimeter)

1 · அடி (Feet) = 30 · 47945 கீழ்நூறுகோல்.

1 அங்குலம் (Inch) = 2 · 54 கீழ் நூறு கோல்

1 கல் (Mile) = 1 · 60935 ஆயிரக்கோல் (Kilo meter)

1 கோல் (Meter) = 39 · 37 அங்குலம்.

பொருண்மையளவை: "கீ. நூ. சீ. நொ" முறையில் முதற் பொருண்மையளவை சீரெடை (Gram) ஆகும். பாரிசு நகரத்தில் அரசாங்கக் காப்பில் வைக்கப்பட்டிருக்கும் பளிதனக் கட்டி யொன்றுண்டு. அதன் பொருண்மையளவில் ஆயிரத்தில் ஒரு பகுதிக்குப் பெயர் சீரெடை (Gram). அந்தப் பளிதனக் கட்டியின் பொருண்மையளவு ஆயிரச் சீரெடை (Kilogram); இதை எங்ஙனம் ஆக்கினர் என்றால், 4° நூ. (Centi grade, நூற்று முறை) வெப்ப நிலையில் ஒரு பரும கீழ்ப்பத்துகோல் வடிநீரின் (Distilled Water) பொருண்மைக்கு நிகரான பளிதனக் கட்டி நிறை எடுத்து அமைக்கப்பெற்றது. ஆகையால் ஒரு சீரெடை ஒரு பரும கீழ்நூறுகோல் வடிநீரின் பொருண்மையளவாகும். 4° நூ. வெப்ப நிலையில் நீர் பேரெல்லைச் செறிவு (Maximum Density) கொள்ளும். அச் செறிவு கொண்ட வடிநீர் 1 பரும கீ–நூ–இன் நிறையும் 1 சீரெடையும் ஒன்றேயாகும். இவ்வாறு பரும கீழ்நூறும், சீரெடையும் தொடர்புற்று இருப்பதில் மிகு பயனுண்டு. (பரும கீழ்நூறு: Cubic Centi meter). ஒழுங்கற்ற வடிவுடைய கலன்களின் கொள்ளளவை, அவை கொள்ளும் நீரின் அளவால் கணக்கிடலாம்.

1 கல் எடை (இராத்தல்) = 453·59 சீரெடை

கால அளவை: காலத்தை அளப்பது பொருள்களின் இயக்கத்தைக் கொண்டே. ஞாயிற்றுத் தொகுதியில் (Solar system) ஞாயிற்றின் இயக்கத்தைக் கொண்டே காலத்தை அளப்பது வழக்கம். அவற்றினின்றுதான் கால அளவைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கணக்கிடப்பட்ட காலத்திற்குப் பரிதி நாள் (Solar day) என்று பெயர். ஓராண்டில் நிகழும் பரிதி நாட்களின் நிரல் கால அளவுக்கு நிரல் அளவைப் பரிதி நாள் (Mean Solar day) என்று பெயர்.

('தமிழில் முடியுமா' என்ற இராசாசி அவர்களின் நூலிலிருந்து திருத்தங்களுடன் வெளியிடப்பெற்றது. திருத்தம்: வை சீனிவாசன், அண்ணாமலைநகர்.) *

நெஞ்சில் நிறுத்துங்கள் ...!

இந்திய ஒற்றுமை என்ற போலிப் பெருமையை நிலைநிறுத்த இந்தி தமிழகத்தில் வலிந்து திணிக்கப்பட்டால்...

* தமிழ் மொழி சீர்குலையும்;
* தமிழ்ப் பண்பாடு கேடுறும்;
* தமிழ் நாடு கொள்ளையடிக்கப்பெறும்;
* தமிழர் அழிவர்...!

அந்நிலை வருவதை நீங்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கப் போகின்றீர்களா? பின், என்ன செய்யப் போகின்றீர்கள்?

பாட்டும் எழுத்தும்

பாவேந்தர் பாரதிதாசன்

(அவர் நினைவாக)

அவர் பாட்டு:

பழந்தமிழ்க் குடிகள் வழிவந்த நாமே
பச்சைத் தமிழர்கள்! நமதிந்த நாடு – நல்
உழுந்தள வேனும் நமைப்பிறர் ஆள
உரிமையே இல்லை என்று நீ பாடு!

எழுந்த நம் எண்ணம், செந்தீ வெள்ளம்!
எதிர்ப்பில்லை என்று பாடொரு பாட்டு–நாம்
இழந்தன பலப்பல! ஆயினும் தமிழ்மறம்
இழக்கிலோம் என்றே இலக்கியம் காட்டு!

குமரியும் இமையமும் குரைகடல் இரண்டும்
உள்ளிட்ட தான தமிழகம் இன்று – சிறு
சிமிழா யிடினும் புலவனே பாடு
செந்தமிழ் மக்கள் சிறுத்தைகள் என்று!

அவர் எழுத்து:

ஓர் இனத்தாரின் இலக்கியத்தில் அமைந்துள்ளது அவ்வினத்தாரின் பழம் புகழ்! ஓர் இனத்தாரின் பழம் புகழில் அமைந்துள்ளது அவ்வினத்தாரின் எதிர்கால எழுச்சி! தூய தமிழிலக்கியத்தில் ஆரியமறைக் கருத்தான ஊசி மருந்தைச் சிறிது சிறிதாக நாளடைவில் ஏற்றி வந்தவர்கள் இன்று அதை அடியோடு ஒழித்துவிடப் பட்டாவை உருவி விட்டார்கள்.

இந்த ஒழிப்பு வேலை நல்லதொரு திட்ட மிட்டே தொடங்கப்பட்டிருக்கிறது. தமிழரின் இன்றைய எழுச்சியில் படுவீழ்ச்சியை அவர்கள் உண்டு பண்ணுகின்றார்கள். தமிழிலக்கியத்தைத் தொலைப்பதுதான் அதற்கு வழி என்பதை அவர்கள் அறிந்து முடிவு கட்டிக் கொண்டார்கள். தமிழ் என்று ஒரு தனிமொழி இல்லையாம். அது வடமொழியினின்று தோன்றியதாம். தமிழ்ப் பெருநூற்கள் அனைத்தும் வடவர் நூற்களின் மொழி பெயர்ப்புகளாம். தமிழர் நாகரிகம் ஆரியர் கழகத்தினின்று தோன்றியதாம்.

தமிழும் தமிழர் வாழ்வும் தொன்மையானவை என்று கூறிக் கொள்வதில் தமிழர்க்கு ஆவலாம்; அது பொய்யாம்! இவ்வகையான கட்டுரைகள் அவர்களின் ஏடுகளில் முன் பக்கத்தை அழகு செய்கின்றன. இதற்கென்றே புதிய இதழ்கள் தோன்றுகின்றன. பழைய ஏடுகள் வாடகைக்குப் பிடிக்கப்படுகின்றன. இதுபற்றிய சொற்பொழிவுகளைக் கேட்க ஆட்கள்

ஒன்றுரைப்பேன்.

புதுவை – சுப்பிரமணியன்.

ஒன்றுரைப்பேன்! நாட்டவரே! பொய்யன்று! முக்காலும்
உண்மை கேளீர்!
மன்றுகண்ட வாழ்வுகண்டு மன்னரெலாம் தலைதாழ்த்தி
மதிக்கக் கண்ட
தொன்றுதொட்டு விளங்கிவரும் தூய்தமிழை எவரேனுந்
தொலைக்க வந்தால்
அன்றுதொட்டுத் தொடங்கியதே அன்னவர்க்குத் தப்பாத
அழிவுக் காலம்!

ஒன்றுரைப்பேன்! அன்பர்களே! உண்மையிது! பொய்யன்றே!
உவந்து கேட்பீர்!
தென்றலொடு பூத்ததுவாய்த் தேன்சுவையைச் சேர்த்ததுவாய்த்
தென்ன கத்தில்
என்றுமுள தென்றமிழின் நன்மணத்துக் கெவரேனும்
இழுக்குச் சூழ்ந்தால்
அன்றுமுதல் அன்னவர்க்குப் போங்காலம் உற்றதென
அறிய லாமே!

ஒன்றுரைப்பேன்! நண்பர்களே! பொய்புகலேன்! உண்மை
உற்றுக் கேட்பீர்! [சொல்வேன்!
வென்றியிருந் துகைக்கின்ற வியன்றமிழின் நலத்துக்கு
வெயர்ப்பார் போல
ஒன்றியிருந் துள்ளுக்குள் அதைத்தீய்க்க எவரேனும்
உழைப்பா ராயின்
குன்றிவிடும் அன்னவர்தம் குலமுழுதும் குடிமுழுதும்
குறைவு பட்டே!

ஒன்றுரைப்பேன்! தோழர்களே! எழுதிவைத்துக் கொள்ளுங்கள்
உண்மை என்றே!
என்றுவந்த தென்றறியா மணிச்சுடரைத் தமிழென்னும்
எழில்வி ளக்கை
இன்றுவந்த நச்சுக்காற் றைச்செலுத்தி எவரேனும்
அணைக்க வந்தால்
அன்றுவந்த தன்னவர்தம் அறிவுக்குத் தனையிட்ட
அழிவுக் காலம்!

சேர்க்கப்படுகின்றனர். பல்கலைக் கழகங்கள் இதில் பெரும் பங்கெடுத்துக் கொள்கின்றன.

தமிழே உயிர் என்று எண்ணுகின்ற தமிழ் மாணவர்களின் அஞ்சாத உள்ளம் அணை கடந்து போகும் நேரம் இது! ஆயினும் அவர்களை இழுத்துக்கட்டி அவர்களிடம் ஓர் ஒழுங்கு முறை ஏற்படுத்தாமல் காலம் வீணாகின்றது.

ஒன்றுரைப்பேன்! உண்மைசொல்வேன்! பொய்யெதற்கு [நான்சொல்வேன்
ஊருள் ளோரே!
கன்றுகண்ட நல்லா போல் கவின்மொழிகள் பலவீன்றும்
கன்னி யாக
அன்றுகண்ட மேனிக்கோர் அழிவில்லாச் செந்தமிழுக்
கழிவு வேட்பார்
குன்றுகண்ட நாயொக்கக் குரைத்துத்தம் அழிவினையே
கூடு வாரே!

ஒன்றுரைப்பேன்! ஐயன்மீர்! சென்றுரைப்பேன் எம்மருங்கும்
உண்மை என்றே!
திறன் பொருள் நஞ்சென்று தெரிந்தென்ன? தெரியாது
போனால் என்ன?
பொன்றுவது தவிராதே! அந்நிலைதான் தமிழுக்குப்
புரைசெய் வார்க்கும்!
புன்றெழிலென் றஃதவர்க்குப் புரிந்தென்ன? புரியாது
போனால் என்ன?

ஒன்றுரைப்பேன்! ஊரவரே! பொன்னெழுத்தாற் பொறித்திடுமின்
உண்மை என்றே!
சென்றுபடு திசையெல்லாம் செம்மையன்றி வேறென்றைச்
செய்தல் ஆற்று
நன்றுபடு தீந்தமிழைத், தீதில்லாச் செந்தமிழை
நலிப்பார் வாழ்வு
நின்றுபடு மோவன்றி இன்றுபடு மோ வதனை
நிறுப்பார் யாரே?

ஒன்றுரைப்பேன்! உண்மை யிது வென்றுரைப்பேன்! செவி [மடுப்பீர்!
உணர்வுள் ளோரே!
இன்றிருப்ப நாளைஇரா எனுமுலகில் தமிழ்மட்டும்
என்றும் போல
நின்றிருப்ப ஒவ்வாதார் எனைத்தானும் அதைக்கெடுக்க
நினைவு கொண்டால்
சென்றிரப்பார் கடைதோறும் சீரழிந்து பெயரழிந்து
சிறுமைப் பட்டே!

ஒன்றுரைப்பேன்! தமிழகத்தீர்! உண்மையெனில் ஈதுண்மை!
உளம்ப டுப்பீர்!
மூன்றிகந்த மொழிகட்கு மூச்சில்லை! தண்டமிழ்க்கோ
மூப்பே இல்லை!
பன்றிகட்கோ உயர்வில்லை! பைந்தமிழைப் பகைப்பார்க்கும்
உயர்வே இல்லை!
நன்றிகொன்றார்க் குய்வில்லை! நற்றமிழைக் கொன்றார்க்கும்
உய்வில் லையே!

தொடர்ச்சி 6.

நாடகம் போர் மறவனும் காதலும்.

சியார்சு பெர்னுர்டு சா.

தமிழில்: 'வழுதி'

அவன்: (உறக்க மயக்கத்தில்) உறக்கம்; உறக்கம்...... உறக்கம். உறக்... (சொற்கள் முணுமுணுப்பாக மாறுகின்றன. தலை தள்ளாடிச் சாய்கின்றது. சடக்கென விழித்துக் கொள்கின்ருன்) நான் இருப்பது எங்கே?... எங்கேயிருக்கிறேன் நான்?... அடடா, விழித்திருக்கவேண்டுமே... இடர் வந்தால்தான் விழித்திருக்க முடிகிறது. நினைவிலிருக்கட்டும். (வலிந்த குரலில்) இடர்... இடர்... இ... (சொல் தவறுகிறது. சற்று உறங்குவதும் மீண்டும் விழிப்பதுமாக) எங்கே இடர்? பார்ப்போம் அதை! (மயக்கத்துடன் அறைக்குள் சுற்றிச் சுற்றி வருகின்ருன்) நான் தேடுவது என்ன? உறக்கமா? இடரா? தெரியாது. (படுக்கை மேல் இடறி விழுகின்ருன்) ஆ...! இப்பொழுது தெரிகிறது! சரி சரி... நான் படுக்கையில் படுக்கவேண்டும். ஆனல் உறங்கக் கூடாது. ஆமாம்... உறங்கவே கூடாது... இடர் வந்துவிடுமல்லவா! படுக்கவும் கூடாது. கொஞ்சம் உட்கார்ந்து கொள்கிறேன் (படுக்கையில் உட்கார்கிருன். இன்ப நிறைவான உணர்வு முகத்தில் தோன்றுகின்றது.) ஆ!... (மகிழ்வுப் பெருமூச்சுடன் கட்டிலில் நீட்டிச் சாய்ந்து விடுகின்ருன். பாதங்களை மிகவும் வருத்தத்துடன் கட்டிலில் தூக்கி வைத்துக் கொள்கின்ருன். உறக்கம் அவனை ஆட்கொள்கின்றது.) (காதரினும் இரெய்னவும் வருகின்றனர்.)

இரெய்ன: (அவன் இருந்த இருக்கையைப் பார்த்துவிட்டு) ஆளைக் காணேமே... இங்குத்தானே விட்டுவிட்டு வந்தேன்!

காதரின்: இங்கேயா! அவன் இறங்கித்தான் போயிருத்தல் வேண்டும் அந்தத்...

இரெய்ன: (அவனைப் பார்த்து விடுகின்ருள்) ஓ! (சுட்டிக் காட்டுகின்ருள்.)

காதரின்: (வெறுப்பதிர்ச்சியுற்று) நல்லது! நல்லது! (படுக்கையருகே விரைகின்ருர். இரெய்ன பின்தொடர்கின்ருள்.

இருவரும் படுக்கையின் இருமருங்கிலும் எதிர் எதிராக நிற்கின்றனர்.) ஆழ்ந்து உறங்கிவிட்டான்... முரட்டுப் பயல்!

இரெய்னு: (அவன்மேல் பரிவுடன், தாயை நோக்கி) ... உசு!......

காதரின்: (அவனைத் தட்டி உலுக்கி) இந்தா அப்பா, (மேலும் உலுக்கி,) உன்னைத்தானே, (மேலும் கடுமையாக உலுக்கி இந்தா அப்பா...

இரெய்னு: (தாயின் கையைப்பற்றி) வேண்டாம் அம்மா...... நல்ல உறக்கம். ஒரேகளைப்பு அவருக்கு..... உறங்கட்டும்.

காதரின்: (அவனை விட்டுவிட்டு, இரெய்னுவைப் பெருவியப்புடன் திருப்பிப்பார்த்து) என்னடி "அவர்"!... இவ்வளவுக்கு வந்துவிட்டதா? (கடுமையாக மகளை உற்று நோக்குகின்ருள்.)

அவனே ஆழ்ந்து துயில் புரிகின்ருன்.

● * ●

இரண்டாம் களம்.

[1886 ஆம் ஆண்டு, மார்ச்சுத்திங்கள் 6-ஆம் நாள் படையாள்நர் (Major) பெட்காஃபின் வீட்டுத் தோட்டம். இளவேனிற் காலம்; இனிய காலை வேளை. தோட்டம் அழகாகவும் கண்ணுக்குக் குளிர்ச்சியாகவும் காட்சியளிக்கின்றது. கம்பி வேலிகட்கு அப்பால் தொலைவில் மங்கலாக இரண்டு உயர்ந்த மாடங்கள் தோன்றுகின்றன. ஒரு பள்ளத்தாக்கும், ஆங்கு ஒரு சிறு நகரமும் இருப்பதை இது காட்டுகின்றது. இன்னும் சில கல் தொலைவில் பால்கன் மலைகள் அடிவானத்தில் சுவர்போல் அமைந்து நிற்கின்றன. மலைகள் இருக்கும் திசையை நோக்கித் தோட்டத்தினுள் உட்காருவோமாளுல் வீட்டின் ஒரு மருங்கு இடதுகைப் புறத்தில் தோன்றுகிறது. படிக்கட்டும், தோட்டக் கதவும் அங்குள்ளன. வலப்புறத்தில் குதிரைக் கொட்டடி தோட்டத்துக்குள் பாதி நீட்டிக் கொண்டிருக்கின்றது. வீட்டுக்கும் கம்பி வேலிக்கும் நடுவில் பழப் புதர்கள். அவற்றின் மேல் துவைத்த துணிகள் சில உலர்த்தப் பெற்றிருக்கின்றன. வீட்டோரம் ஒரு பாதை செல்கின்றது. மூலையில் இரண்டடி உயர்ந்து பின் வளைவில் மறைந்துவிடுகின்றது. தோட்டத்தின் நடுவில் ஒரு சிறிய மிசைப் பலகையும், இரண்டு நாற்காலிகளும் காலை உணவுக்கேற்ற வகையில் போடப்பெற்றுள்ளன. அங்குள்ள உண்கலங்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. உரொட்டி துண்டாக்கப் பெற்றுக் கிடக்கின்றது. வலப்புறச் சுவரில் ஒரு மரக்

கதவுளது. வெண் சுருட்டொன்றைப் புகைத்தபடி உலூக்கா மிசைப்பலகைக்கும் வீட்டுக்கும் நடுவில் நிற்கின்றாள். அவள் எதிரில் வீட்டு வேலையாள் ஒருவன் நின்றுகொண்டு அவளுக்கு அறிவுரை கூறிக்கொண்டிருக்கின்றான். உலூக்கா சினத்துடனும் வெறுப்புடனும் அவனுக்கு எதிர்ப்புறமாகத் திரும்பி நிற்கின்றாள். அவ் வேலையாளுக்கு நடுத்தர அகவையிருக்கும். படபடப்பில்லாத அமைதியான இயல்பு. தாழ்வாயிருந்தாலும் தெளிவான கூர்மையான அறிவு. வேலையாளாக இருப்பதில் தனிப் பெருமையும் மதிப்பும் உடையவனாகத் தோன்றுகின்றது. ஏமாந்து போகாமல் எல்லாவற்றையும் எண்ணித் திட்டமிட்டு நடப்பதில் அசைக்கமுடியாத திறமையுடையவன். பல்கேரிய நாட்டு வெள்ளை ஆடையை அணிந்திருக்கின்றான். தலை நன்றாக மொட்டையடிக்கப் பெற்றிருப்பதால் சப்பானியனைப்போல் தோற்றமளிக்கின்றான். அவன் பெயர் நிகோலா.]

நிகோலா: உலுக்கா, காலங்கடந்து போவதற்குள் சொல்லிவிட்டேன். திருந்திக்கொள். வீட்டு அம்மாவைப் பற்றி எனக்குத்தெரியும். எவராவது வேலைக்காரர் மதிப்பில்லாமல் நடந்துகொள்வார்கள் என்று கனவில்கூட நினைக்கமாட்டார்கள்தாம். ஆனால் நீ ஏறுக்குமாறாய் நடக்கிறாய் என்று கொஞ்சம் ஐயம் ஏற்பட்டு விட்டதோ, – அவ்வளவுதான், நீ மூட்டையைக் கட்ட வேண்டியதுதான்.

உலுக்கா: நான் ஏறுக்குமாறாய்த்தான் நடக்கிறேன்; அப்படித்தான் நடப்பேன்; எனக்கு ஒன்றும் அக்கறையில்லை.

நிகோலா: இவ்வீட்டாரோடு நீ சண்டையிட்டால் அஃது என்னோடு சண்டையிடுவது போலத்தான். இப்படியிருந்தால் நான் உன்னைத் திருமணம் செய்துகொள்ள முடியாமற் போகும், சொல்லிவிட்டேன்.

உலுக்கா: நீ வீட்டம்மாவுக்குப் பரிந்து கொண்டு வருகிறாய், அப்படித்தானே!

நிகோலா: (பதறாமல்) நான் எப்பொழுதும் அம்மா வீட்டாரிடத்தில் நல்ல பெயர் வாங்கத்தான் முயல்வேன். நான் வேலையை விட்டுவிட்டு சோபியாவில் கடை வைக்கப் போகும்பொழுது அவர்களுடைய வாடிக்கைதான் எனக்குப் பாதி முதல் போல! அவர்கள் என்னைப்பற்றி நல்ல கருத்துச் சொல்லாவிட்டால் அதோடு நான் விழுந்தேன். தெரிகிறதா?

உலுக்கா: நீ ஒருத்தன்! உனக்குச் சூடு சுரணையே கிடையாது. என்னைப்பற்றி ஒரு சொல் தப்பாக அவர்கள் சொல்லித்தான் பார்க்கட்டுமே. அப்பொழுது தெரியும்!

நிகோலா: (அவள் நிலைக்கு இரங்கி) நீ கூட இவ்வளவு கருத்தில்லாமல் நடந்துகொள்வாய் என்று நான் நினைக்கவில்லை. ...நீ என்ன செய்வாய்... எல்லாம் இளமைத் துடுக்கு... இளமைத் துடுக்கு.

உலுக்கா: ஆமாம்; அப்படித்தான். நீ என்னை விரும்புவதுகூட அதற்காகத்தானே; இவர்கள் வெளியே விடாமல் மறைத்து வைத்திருக்கும் குடும்பக்கமுக்கங்களெல்லாம் எனக்கு நன்ருகத் தெரியும். என்னை வெளியே போகச்சொல்லி விடுவார்களா இவர்கள்? அவ்வளவு துணிவு இருக்கிறதா இவர்கட்கு?

நிகோலா: (இரக்கம் கலந்த பெருமிதத்தோடு) நீ இப்படிப் பேசுவதை அவர்கள் கேட்டால் என்ன செய்வார்கள் தெரியுமா?

உலூக்கா: என்ன செய்து விடுவார்களாம்?

நிகோலா: உன்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டு, 'உண்மையில்லாதவள்; அதனுல்தான் விட்டுவிட்டோம்'' என்று சொல்லப்போகிருர்கள் பிறகு எவர் நீ சொல்வதை நம்புவார்கள்? யார் உனக்கு வேலை கொடுப்பார்கள்? பிறகு இந்த வீட்டில் எவராவது உன்னேடு பேசிப் பழக வருவார்கள் என்று நினைக்கின்ருயா? எவ்வளவு நாளைக்குத்தான் உன் அப்பா அந்தப் பண்ணையிலே மூச்சைக் கொடுத்துக் கொண்டிருக்க முடியும்? (அவள் பொறுமையிழந்து, வெண்சுருட்டுத் துண்டினைக் கீழே எறிந்து காலால் மிதிக்கின்ருள்.)

நிகோலா: அம்மா குழந்தை, உன்னைப்போலவும் என்னைப் போலவும் உள்ளவர்கள் எதுவும் செய்ய முடியாது. ஏழைகள் நாம். இந்தப் பெரிய இடத்தார்கள் நம்மைப் பிடித்து மாட்டுவதற்கு என்ன என்ன வழியெல்லாம் வைத்திருக்கிருர்கள் என்பது உனக்குத் தெரியாது. (அவளருகில் சென்று தாழ்ந்த குரலில் பேசுகிருன்). என்னைப் பாரம்மா; பத்தாண்டுகளாக இவர்கட்கு உழைத்துப் போட்டிருக்கிறேன். இவர்களுடைய கமுக்கங்களெல்லாம் எனக்குத் தெரியாதவை என்று நினைக்கிருயா! ஆயிரம் போனுலும் ஐயாவுக்குத் தெரியக்கூடாது என்று அம்மா நினைக்கிற செய்திகளும், அம்மாவுக்குத் தெரியக்கூடாது என்று ஐயா மறைத்து வைத்திருக்கிற செய்திகளும் எனக்கு எவ்வளவோ தெரியும். வெளியே தெரிந்தால், இரெய்னுவுக்கும் செருசியசுக்கும் உள்ள மண உறுதியை முறித்துவிடக்கூடிய அளவுக்கு இரெய்னுவைப் பற்றிய எவ்வளவோ செய்தி...

உலூக்கா: (திடுமென அவனை நோக்கித் திரும்பி) உனக்கு எப்படித் தெரியும்? நான் சொல்லவில்லையே!

நிகோலா: (கண்களை அகல விரித்து)... அப்படியா! இது தான் உன்னுடைய கமுக்கமா! சரி,... சரி..., இப்படித்தான் ஏதாவது இருக்கும் என்று நினைத்தேன், போகட்டும். நான் சொல்வதைக் கேள்; பணிவோடு நடந்துகொள்; உனக்குக் குடும்பச்செய்தி ஏதாவது தெரிந்திருக்கிறதோ தெரியவில்லையோ எப்படியிருந்தாலும் உன்னை முழுதும் நம்பலாம்; நீ வாய் பேசாமல், உண்மையாக உழைக்கக் கூடியவள் என்று அம்மா நினைக்கும்படி நடந்துகொள். அதைத்தான் அவர்கள் விரும்புவார்கள்; அப்படி நடந்துகொண்டால்தான் உனக்கும் மிகுதியான பயன் கிடைக்கும்.

உலூக்கா: (ஆழமான வெறுப்புக் கலந்த பகடியோடு) நிகோலா, ஒரு வேலையாளின் அடிமை உள்ளம் உனக்கு இயற்கையாகவே வாய்த்திருக்கின்றது.

நிகோலா: (மன நிறைவுடன்)... ஆமாம், ஆமாம்; அது தான் தொழிலில் வெற்றிபெறும் வழி... தெரியுமா? (குதிரைக் கொட்டடியிலிருந்து, குதிரைச் சவுக்கின் கைப்பிடியால் கதவில் வலுவாக இடிக்கும் ஓசை கேட்கின்றது)

வெளியிலிருந்து ஆண் குரல்: யாரங்கே! யாரங்கே! நிகோலா!

உலூக்கா: ஐயா! போரிலிருந்து திரும்பிவிட்டார்!

நிகோலா: (விரைவாக) உலூக்கா, போர் முடிந்துவிட்டது! உறுதி! ஓடு, போய்ச் சூடாகக் காப்பி கொண்டு வா. (குதிரைக் கொட்டடியை நோக்கி ஓடுகின்றான்.)

உலூக்கா: (தட்டிலுள்ள 'காப்பிக் கலங்களை மெல்லப் பொறுக்கி எடுத்துக்கொண்டு வீட்டை நோக்கி நடந்து செல்கிறாள்) ஒரு வேலையாளின் அடிமை உள்ளத்தை ஒரு பொழுதும் என்னிடத்தில் உண்டாக்க முடியாது.

படையாள் நர் பெட்காஃப், நிகோலா பின்தொடரக் குதிரைக் கொட்டடியினின்று வருகின்றார். 50 அகவையிருக்கும். மகிழ் ஊட்டமும் பரபரப்பும் நிறைந்த, சிறப்பியல்பற்ற, நயமற்ற மாந்தர். தம் வருவாயும், தம் வட்டாரத்தில் தமக்கிருக்கும் சிறப்பு மதிப்பும் அல்லால் பிற வழிகளில் இயல்பாகவே எவ்வித நசையும் இல்லாதவர். ஆனால் தற்பொழுது போரினால் வந்து வாய்த்த உயர் அலுவல் மதிப்பைக் கொண்டு தம் ஊரில் தாம் சிறந்தவராக மதிக்கப் பெறுதலால் ஏற்பட்ட மகிழ்ச்சியும் நிறைவும் முகத்தில் மின்னுகின்றன. செர்பியத் தாக்குதலால் பல் கேரியர்களிடத்தில் ஏற்பட்டிருந்த ஒரு வகை வெறித் தேசியம், (இன்று சீனத் தாக்குதலால் இந்தியாவில் ஏற்பட்டுள்ளது போல!)

அவரைப் போரில் ஊக்கம் கொள்ளச் செய்தது. இப்பொழுது வீடு திரும்பியதில் உண்மையாகவே மகிழ்ச்சிதான்).

பெட்காஃப்: (தம் சவுக்கினுல் மிசைப் பலகையைச் சுட்டிக் காட்டி) காலை உணவு அங்கே நடந்ததா?

நிகோலா: ஆமாம் ஐயா; அம்மாவும், இரெய்னு அம்மாவும் இப்பொழுதுதான் உள்ளே போனுர்கள்.

பெட்காஃப்: (உட்கார்ந்துகொண்டே) உள்ளேபோய் நான் வந்திருக்கின்றேன் என்று சொல்... அப்படியே சூடாகக் காப்பி எடுத்துக்கொண்டு வா.

நிகோலா: காப்பி வருகிறது ஐயா. (வீட்டை நோக்கிச் செல்கிருன், கையில் காப்பி குவளை முதலியவற்றுடன் தட்டில் 'பிராந்தி'யும் எடுத்துக்கொண்டு உலூக்கா எதிரே வருகின்ருள்) அம்மாவுக்குச் சொல்லிவிட்டாயா?

உலூக்கா: ஆமாம், அவர்களும் வருகிருர்கள். (நிகோலா வீட்டுக்குள் செல்கின்ருன். உலூக்கா காப்பியை மிசைப் பலகைக்குக் கொண்டு செல்கின்ருள்.)

பெட்காஃப்: (விளையாட்டாக) என்ன, உலூக்கா, செர்பியர்கள் எவராவது உன்னைத் தூக்கிக்கொண்டு போய்விடவில்லையே!

உலூக்கா: இல்லை ஐயா.

பெட்காஃப்: சரி: ஏதாவது...பிராந்தி கொண்டு வந்திருக்கின்ருயா?

உலூக்கா: (புட்டியை மிசைப் பலகைமேல் வைக்கிருள்) இதோ!

பெட்காஃப்: சரி: (காப்பியில் பிராந்தியை எடுத்து ஊற்றுகிருர்)

[காதரின் அம்மையார் வருகிருர் காலை வேளையில் அரைகுறைப் புனைவோடு பல்கேரிய மேல்தூசு (apron) அணிந்திருக்கின்ருர். அம் மேல்தூசின் உள்ளே முன்பு சிறப்பாயிருந்து, மங்கிப்போன உடைமாற்றுடை. அடர்ந்து இருண்ட குழலைச் சுற்றித் தலைமேல் கட்டப்பெற்ற வண்ணக் குட்டை. துருக்கிய மிதியடியணிந்த கால்கள். - வியப்பூட்டும் அழகும் பெருமிதமும் தோன்ற வருகிருர்.] [உலூக்கா வீட்டுக்குள் செல்கின்ருள்.]

காதரின்: அத்தான்! வியப்பாக இருக்கிறதே! (அவர் அமர்ந்திருக்கும் நாற்காலியின் பின்புறமாகக் குனிந்து அவரை முத்தமிடுகின்ருர்.) சூடாகக் காப்பி கொடுத்தார்களா?

பெட்காஃப்: ஆமாம் உலூக்கா கொண்டுவந்தாள். போர் முடிந்தது. மூன்று நாட்கட்கு முன்பு புகாரஃச்டில் உடன் படிக்கை கையெழுத்தாயிற்று, எங்கள் பட்டாளம் கலைந்துபோக நேற்றுக் கட்டளை கொடுக்கப்பட்டது.

காதரின்: (நேராக நிமிர்ந்து, ஒளியுமிழும் கண்களுடன்) அத்தான், அமைதி உடன்படிக்கை செய்யும்படி ஆத்திரியர்கள் உங்களைக் கட்டாயப்படுத்தும்படி விட்டுவிட்டீர்களா?

பெட்காஃப்: (தணிந்த போக்கில்) அன்பே, என்னை யாரும் கலந்து பேசவில்லை. நான் என்ன செய்யமுடியும்? (காதரின் உட்கார்ந்து அப்பால் திரும்பிக் கொள்கிருர்) ஆனுல், எப்படியும் உடன்படிக்கை எவ்வகையிலும் இழுக்குத் தராதபடி பார்த்துக் கொண்டோம்.–அதன்படி அமைதி நிலைநாட்டப்படு கின்றது.

காதரின்: [புண்படுத்தப் பெற்றவர்போல] அமைதி!

பெட்காஃப்: [தணிவு செய்ய முயன்று] அமைதிதான்; ஆனுல் நட்புறவு எதுவும் இல்லை! அதை நினைவில் வைத்துக் கொள். அதையும் உடன்படிக்கையில் சேர்க்கத்தான்! விரும்பி ஞர்கள். நான்தான் அது கூடாது என்று அடித்துக் கூறிவிட் டேன். இதைவிட நான் வேறென்ன செய்வது?

தென்மொழி கடலூர் - 2

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு
ஆண்டுக் கட்டணம்.	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்.

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனை யாளர்கள் எழுதிக் கேட்க.

ஐப்பசி மாதத் தொடர்ச்சி

வள்ளுவர் வகுத்த மனையறம்

புலவர் வித்துவான்: **ஔண். கி. சந்திரசேகரன்.**
எம். ஏ; பி. டி; பி. ஓ. எல்.

௬ தவிரத் தருவன (அதி. 15-21)

பிறப்புத்தோறும் பெண் விழைச்சு உளதாகி வருவதாகும். செல்வக் களிப்பாலும் பிறவாற்றாலும் அதனைப் பெரிதும் விழையும் என்னமை நிலையுளதாகலாம். முறை விலக்குகளை நன்குணரும் நல்லறிவு, வாய்ந்த மக்கள்தாம் அறிநெறியிகந்த நிலைமைக்கண் இன்பம் நுகரக் கருதார். அறனியலா இல்வாழ்வா னென்பான் பிறனொடு மனையறங்காக்கும் பெட்புடையாளது பெண்மை நலத்தை நயத்தல் பெரும் பேதமைத் தாகும். இதனான் இல்லிறப்ப நயப்பாற்கும் பகை, கரிசு பழி அச்சமெனும் நான்கும் இகவாவாம். அஃது அறன்கடை நின்ற செய்கையாதலின் வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு முடையனுயினும் விளிந்தாரின் வேறல்லனும். அவன் திறத்து ஒழுக்கமும், ஆண்மையுமின்றும். இத் தீயொழுக்கம் அறன் வரையானல்ல செய்யும் அனைத்தினும் மிக்கதாம் குற்றமுடையதாகும். ஆதலான்,

> **''நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்**
> **பிறற்குரியாள் தோள்தோயா தார்,**

என்று தெருட்டினர்.

இத்தகைய தீயொழுக்கங்களைச் செருக்கானும், அறியாமையானும் செய்வார் தம்மையும் பொறுத்தலே தலையாய அறமாகும். இப பொறுமையால் நிறையுடைமை நீங்காது நிலைக்கும். பொன்றுந் துணையும் புகழுண்டாம். துறந்தாரினுந் தூயராந்தன்மை வந்தெய்தும். திறனல்ல தற்பிறர் செய்யினும் அத்தீவினையால் அவரெய்த விருக்கும் துன்பமறிந்து மனம் பரிவுறுதலோடு அவர் தம்மைத் தமது தகுதியான் வென்றுவிளங்குதல் வேண்டும்.

> **''மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்**
> **தகுதியால் வென்று விடல்''**

இத்தன்மையார் உண்ணுதுநோற்கும் பெரியாரினும் பெருமையெய்துவர். பொருளுடையார் விருந்தினரை யோம்பா ராயின் அவரதுடைமையால் பயனின்மைபோல மடவார் தம் இறந்த சொல்லையும் செயலையும் பொறுக்கும் வன்மை பெருதார் பிறவாற்றன் பெற்று நிற்கும் வன்மையால் வருவதோர் பயனின்றும் எனவே,

> **''அகழ்வாரைத்தாங்கும் நிலம்போலத்தம்மை**
> **யிகழ்வார்ப் பொறுத்தல் தலை''**

என்றேதினர்.

இவ்வாறு பலதிறத்த பொது நிலையறங்களைப் பேணுந்திறங் கூறிய பின் மனமொழி மெய்களான் இத்துணைக் குற்றங்கள் நிகழாமற் காத் தோம்புக வென்று எதிர்மறைவாய்பாட்டானவற்றை யெடுத்துரைத்தார். மனத்துக்கணிகழற்காகாத குற்றங்களுள் **அழுக்காறும்** ஒன்ருகும். பிறனுக்கம் பேணுதலே சிறந்த பண்பாம். அஃதின்றி யொருவன் அழுக்கறுத்தலைச் செய்யின் அறனும் ஆக்கமும் அழியும். ஒன்னாரின்றி யுங் கேடுண்டாம். அவனது சுற்றமும் உடுப்பதூஉமுண்பதூஉமின்றிப் பொன்றும். அழுக்கற்றுப் பொருளான கன்ருருமில்லை; அஃதில்லார் பெருக்கத்தின் தீர்ந்தாருமில்லை. அழுக்காறென வொருபாவி திருச் செற்றுத் தீயுழியுய்த்து விடுமாதலின், அழுக்காருமையின் விழுப்பத் தினையுணர்ந்து

"ஒழுக்காருகக் கொள்க வொருவன்ற னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு"

என்றியம்பினர். அழுக்கறுத்தல்போல **வெஃகுதலும்** பெருங் குற்ற மாம். நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றும் குற்றமுந்தரும்; விளைவயின் மாண்டற்கரிதாம் பயனுண்டாம். அவ்வெஃகுதல் இறவின லானும், பழியுட்புகுத்தலானும், சிற்றின்பமே விளைத்தலானும், நடுவு நிலைமையைக் கெடுத்தலானும், பொல்லாத சூழச் செலுத்தலானும் பொருளிலமென்று புலம்வென்ற புன்மையில் காட்சியார் அதனைச் செய்யார். ஆதலின், அருள் வெஃகியறத்தாற்றினிற்பார் வெஃகியாம் ஆக்கத்தை வேண்டார். அவ்வாறின்றி யார்மாட்டும் வெஃகி வெறிய செயின், அவர்தம் அஃகியகன்ற வறிவான் பயனென்னும் என்று வினவுவார்.

"அஃகியகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகிவெறிய செயின்"

என்றறிவுறுத்தினர்.

மனக்குற்றம் அடியாக **சொற்குற்றமு**ண்டாம். சொல்லின் கண் நிகழும் தீமைகளுள் புறங்கூறுதல் மிகக் கொடியதாகும். இப்புறங் கூற்று அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதாகும். இதனைச் செய்வார் தம் நெஞ்சத்து அறனின்மை நன்கு புலப்படும்.

"அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்"

இத்தன்மையோர் நகச்சொல்லி நட்பாடலைத் தேருர். பகச்சொல்லிக் கேளிரையும் பிரிப்பர். துன்னியார் குற்றமுந் தூற்றும் மரபினராவர். முன் னின்று பின்னோக்காச் சொல்லையே மொழிவர். இவர் தமதுடற் பொறையை அறனோக்கியே வையகம் ஆற்றுவதாகும். பிறரைப் பழித்துத் திரியும் இவர்களுக்குள்ள குற்றங்களுள் இவர்தம் நெஞ் சுளையுந் தன்மையவற்றை யுலகந்தப்பா தெடுத்துத் தூற்றிப்பழிவாங்கும்.

"பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன் றெரிந்து கூறப்படும்"

ஆகலின், இவர் காம் புறங்கூறிப் பொய்த்துயிர் வாழுதலை யொழித்து, தம்முயிர்க்குத் தீமை யுண்டாகாமை யோம்புதலை நன்கு நாடி "ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காணும் தகைமையைத் தாழ்க்காது பெற வேண்டுமென்று விளம்பினர்:

"ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங்காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு"

பயனில சொல்லுதலும் உரைத்தற்கண் நிகழும் பிறிதொரு பெருங் குற்றமாம். இஃதுடையாரை யெல்லாரு முனிவர். நெறியிலரென்றிகழ் வர். அவரிடத்து நற்பண்புகள் பொருந்தா. விழுப்பமும் நன்கு மதிக்கற் பாடும் நீங்கும். அறிவுடைமை புலப்படாமையின் மக்கட் பதடியென விலக்குவர். இவைபற்றி மருடீர்ந்த மாசறு காட்சியராய் அரும்பயனு யும் சான்றோர்கள் பொச்சாந்தும் பொருள் தீர்ந்தவற்றை மொழியார். ஆதலின்,

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்" எனப் பகர்ந்தார்.

கடுஞ்சொல், குறளை, புறங்கூறல், பயனில சொல்லலாகியவற்றை யில்லறத்தார் கடிந்தொழுக வேண்டுமென்று கூறியவாறே கரிசுகளா யினவற்றைச் செய்தற்கும் அஞ்சுதல் வேண்டுமென்றார். தனக்கு இன்பம் பயத்தலைக் கருதிச்செய்யுந் தீவினைகள் பின் துன்பமே பயக்குந் தன்மையவாதலை யறிந்து, அவற்றைத் தீயினுங்கொடிய வாகக்கொண்டு அஞ்சித் தம்மைச் செறுவார்மாட்டும் தீயவற்றை மறந்தும் எண்ணுமல் விழுமியார் விளங்குவர். வினைப்பகையானது வீயாது பின் சென்றடுதலை யறிந்து, பிறர்க்கு எனைத்தொரு தீவினையுந் துன்னுதார் அறக்கடவுளால் தெறலுருமையின் கெடுதலின்றி நெடிதின்புற்று வாழும் பெற்றியுடையவ ராவர்:

"மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு"

நிழறன்னை வீயாதடியுறைந்த தன்மைபோலத் தீவினையுந் தன் காலம் வருந்துணையும் புலனுகாது உயிரைப்பற்றிநின்று அது வந்துழித் தப்பாது வருந்துதலைச் செய்யுந் தன்மைத்தாகும். தான் பொருளிலனுகிய காலத் தும் அவ்வின்மை தீர்த்தற்பொருட்டுப் பிறர்க்குத் தீவினை செய்யின் மேலும் இலனுகும் நிலையே வந்தடுத்தலை நன்கறிந்து இல்வாழ் நெறியினன் பிறரால் செறல் நேர்ந்துழியும் வறுமையான் நலிந்துழியும் மறவி காரணமாகவும் பிறர்க்குத் தீமை செய்தல் தகாதென்பார்:

"தீப்பால தான்பிறர்கட் செயற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்"

என்று விளம்பினர்.

உலகநடையறிந்து செய்யத்தகுவன:

இதுகாறும் மறைநூல் நடையாய் அறநூல்களுட் கூறப்படுவன வற்றைக் கைக்கொள்ளுமாறு பலவாற்றானுங் கழறிபவர் மேல் உலக நடையினைத் தாமேயறிந்து செய்யத்தகுவனவற்றுள் எஞ்சி நின்றவற்றை யும் தொகுத்தியம்பினார். இவ்வுலகத்தும் உம்பருலகத்தும் ஒப்புரவைப் போல நல்லனவாய பிறசெயல்களைப் பெறலரிதாம். ஆதலால், தக்கா ராயினார் தாம் தாளாற்றித் தந்த பொருளெல்லாம் ஒப்புரவு செய்தற்கே யுய்ப்பர். அவரிடத்துளதாகுஞ் செல்வம் ஊருணி நீரானிறைந்தாற் போலவும் பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாகவும், மருந்தாகித் தப்பா மரமொப்பவும் பிறர்க்குப் பயன்பட்டு நிற்கும். ஒப்புரவுடையான் தான் தவிராது செய்யும் தன்மையவாகிய வொப்புரவுகளைச் செய்யப் பெறாது வருந்துகின்ற இயல்புடையனாதலன்றி தானுகர்வன நுகராமையாகிய இயல்பினனாகான்:

> **"நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர**
> **செய்யா தமைகலா வாறு"**

அன்றியும் நன்னை விற்றுக் கொள்வதொரு பொருளில்லை. அவ்வாறு கொள்ளப்படுவதும் கேடாயின், அதுவும் ஒப்புரவாற்றலால் விளைவதா யின் தப்பாது கொள்ளற்பாற்றாகு மென்பார்:

> **"ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்**
> **விற்றுக்கோட் டக்க துடைத்து"**

என்றறிவுறுத்தினார்.

மறுமையின்ப நோக்கி மேற்கொளத் தகுவன:

இனி யிம்மைநோக்கிய வொப்புரவினைக் கூறிய பின் மறுமை நோக்கிய ஈதலினியல்பை யுரைக்கின்றார். நற்குடியிற் பிறந்தான் யானில னென்று இரப்போன் சொல்லுமுன் குறிப்பறிந்து வந்தீதலே யன்றித் தான் பிறர்கட் சென்றிரக்க நினையான். நல்லாறெனினும் பிறர்பால் இரந்து வருவதனைக் கொள்ளான். மேலுலக மில்லெனினுமீதலைத் தவிரான். அவ்வாறீதலையும் வறியார்க்கு மறாஅன். எஞ்ஞான்றும் மருவுவான். அற்றார்தம் அழிபசி தவிர்ப்பான். தானே தமியனுய் வைத் துண்ணான். ஈதல் இயையாக் கடை சாதலையே யினிதாகத் துணிவன்.

> **"சாதலி னின்னாத தில்லை யினிததூஉம்**
> **ஈத லியையாக் கடை"**

மேலும், உடைய பொருளை வறியார்க்கு வழங்காது கொன்னே வைத்து இழந்துபோம் வன்கண்ணனாகான். அவன் தானும் பசியாது பிறரையும் அது தீர்க்க வல்லானாதலின், அவ்வாறு செய்யமாட்டாத தவத்தாரினும் வலியனாவன். இவனதாற்றலை

> **"ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை**
> **மாற்றுவா ராற்றலின் பின்"**

என்றுணர்த்தினார்.

இல்வாழ்க்கைப் பயன்.

இல்வாழ்க்கை முதல் **ஈகை** யீருகச் சொல்லப்பட்ட நெறியின் வழுவாதார்க்கு இம்மைப் பயனுகி யிவ்வுலகின்கண் நிகழ்ந்து இறவாது நிற்கும் புகழைக் கிளக்கின்றுர். உலகத்தில் தனக்கு இணையின்ருக வுயர்ந்து என்றும் இறவாது நிற்பது புகழன்றி பிறிதொன்றில்லையாதலின், அதனை நிலவரைக்கண்ணே நீங்காதாற்ற வேண்டும். அதனைப் பெரு விடின் வையத்தார்க்கெல்லாம் வசையாமென்று நல்லோர் நவில்வர். இசையில்லாதான் யாக்கையைப் பொறுத்த நிலம் வன்பயன் குன்றும். புகழைப் பெறமாட்டாத குற்றம்பற்றிப் பிறரிகழ்வாராயின் அது நோக்கி யவரை நோதலாற் பயனின்றும்.

''புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்''

புகழுடம்பு செல்வமெய்தப் பூதவுடம்பு நல்கூர்தலும், புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பிறத்தலும் ஆகிய வியத்தகு நிலையை சான்றேரே எய்துபவ ராவர். நிலையில்லாததனைக் கொண்டு என்றும் நிலையுள்ளதனை யுண்டாக்கிக்கொள்ளும் திறம் பிறர்க்கமையுமரோ! இவ்வாறு தம்மாட்டு வசையுண்டாகாமல் வாழ்வாரே யுயிர்வாழ்பவராகக் கருதப்படுமெனக் கூறினர்:

''வசையொழிய வாழ்வாரே வாழ்வார்; இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்''

இவ்வாறு இல்லறத்தின் வழுவாதொழுகி, யறிவுடையராய்ப் பிறப் பினை யஞ்சி, வீடு பேற்றின் பொருட்டுத் துறந்து அந்தக் கரணங்கள் தூயவாதற்பொருட்டுக் காக்கப்படும் கொள்கைகளைக் கடைப்பிடித்து, அவற்ருன் கரணங்கள் தூயவாயவழி மெய்யறிவு முதிரப் பெற்று வினைமாசு தீர்ந்து பிறவாப் பெருநிலை யெய்துதலே பிறப்பானெய்தும் பெறலரும் பேருகக் காட்டினர். இல்லொழுக்கின் வழித்தாக வீட்டுலகை யெய்தும் பொய்தீரொழுக்க நெறியை யுள்ளது சிறந்த னென்னும் இயல்பொடுபட்டு வள்ளுவர் போலும் புகரறப் புகன்றுரை யாமறியேம்!

O

கட்டுரையாளர்கள் கவனிக்க.

1. தனித்தமிழில், உயர்ந்த குறிக்கோள் கொண்டு தெளிவாக எழுதப் பெற்ற கட்டுரைகளே வெளியீட்டுக்கு எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

2. கட்டுரை எவரால் எழுதப்பட்டது என்பதை விட, கட்டுரை என்ன கருத்துப் பற்றி எழுதப்பெற்றது என்பதையே 'தென் மொழி' நோக்குகின்றது.

3. தமிழுக்குப் புதிதான துறைகளைப் பற்றியும், தனித்தமிழில் எழுத முடியாது என்ற கருத்தினை முறியடிக்குமாறும் எழுதப் பெறும் கட்டுரைகள் முதலிடம்பெறுகின்றன. – ஆசிரியர்.

ஈட்டியம்மையின் எழுச்சி...!

துரை. மாலிறையன்.

(வடவர் சார்பான அற மன்றத்தால் தமிழ் மொழி விடுதலைக்குப் போராடிய வேல்மார்பன் தூக்கிலிடப்பட்டதும், மாயாத் தமிழுணர்வால் வேல்மார்பனின் நண்பன் வாள்மாறன் கோளரியெனத் தோன்றிப் போராடத் தொடங்கினான். அதே பொய்க் குற்றம் சாட்டி வாள்மாறனையும் அற மன்றம் தூக்கிலிட்டது. இது கண்டும் தளராத வாள்மாறனின் மனைவி ஈட்டியம்மை தானும் செந்தமிழ் விடுதலைக்கு மக்களைக் கூட்டத் தொடங்கினாள்.)

“அறமிலையோ நாட்டில் அறவோர் இலரோ!
திறமறு செந்தமிழர் தேங்குதுயர் தீர்க்க
அறமிலையோ நாட்டில் அறவோர் இலரோ!

மறமெங்கே கிற்றோ மறவோர் இலரோ!
அறமில் வடவர் மறமவித்த மாந்தர்
மறமெங்கே கிற்றோ மறவோர் இலரோ!

தமிழகமண் இஃதோ தமிழகமண் இஃதோ?
இமையாகிச் செந்தமிழை ஏந்தி வளர்த்த
தமிழகமண் இஃதோ தமிழக மண்இஃதோ?

மான மிழந்தனரோ மான மிழந்தனரோ!
கானப் புலிமருளும் கைவலிகொள் செந்தமிழர்
மான மிழந்தனரோ மான மிழந்தனரோ!

பொன்னார் உலகத்துப் பொறுப்புடையீர் கேளீரோ!
தன்னலம் மிக்குத் தரங்கெட்டீர் கேளீரோ!
ஒற்றுமையைக் காட்டி உயர்தமிழின் மாண்பொடுக்கி
வெற்றுமொழி இந்தியினை வேண்டுவீர் கேளீரோ!
நாட்டுநலம் எண்ணி உலகொருமைப் பேரவையைக்
கூட்டும் நலஞ்சிறந்த கொள்கையரே கேளீரோ!
மாற்றார் அடியிருந்தும் மாண்புமிகு நும்மொழியைப்
போற்றி வளர்த்த புகழுடையோர் கேளீரோ!
சோறே பெரிதென்று சூழ்ந்துவரும் பேரிருட்டைத்
தேரு தலையும் தெளிவற்றீர் கேளீரோ!
உள்ளந் திறமினோ! உண்மை நிலையறிவீர்;
கள்ள உளத்தவரார்? என்றே கருதிடுவீர்;
செந்தமிழே மூச்சென்று சீர்காத்துத் தெவ்வழிக்கும்
வெந்திறல் மிக்கார் விழிதுயிலாச் செந்தமிழர்,
மாற்றார் அடிபணிய வாழ்ந்தனரே அல்லாமல்
தோற்றுப் பொலிவழியும் துன்பம் உறுதலிலர்;

மாற்றார்க்கொன் றீந்து மகிழ்ந்தனரே அல்லால் ஒன்(று)
ஏற்றார் பிறர்பால் எனுஞ்செய்தி கேட்டிலமே;
யாதும் தமதூரே யாவரும் தம் கேளிரென
ஓதும் பொதுநோக்கத் தோங்கினரே யல்லாமல்
சீரும் சிறப்புமுற்றுச் செந்தமிழர் மட்டுமே
சேரும் புகழ்க்காக வாழவெண்ணும் நோக்கிலரே;
முற்றிய செல்வத்து மூவேந்தர் ஆனாலும்
குற்றிய ஈந்தக்கால் கொள்ளாத பீடுடையார்;
இந்நாளில் வந்தார்க் கிடமளித்துப் பல்லிளித்(து)
அன்னார்முன் கையேந்தி ஆளானார் கீழ்மைக்கே;
தங்கள் உயிராம் தமிழைப் பிறர்மாய்க்கப்
பொங்காதே அச்செயலைப் போற்றும் இழிநிலையர்;
ஆட்சித் திமிர்பிடித்தார் அந்தமிழ்க்குத் தீங்கிழைக்க
மாட்சி எனப்பகர்ந்தார் மானம் அழிகின்றார்;
செங்கட் புலிஎதிரே சீறிவரும் பூனையைப்போல்
எங்கள் தமிழ்கெடுக்க இந்தி மொழிகாட்டி
வந்தார் வடக்கர்; தமிழர் சிலர்கூடி
அந்தோ அவருடனே ஆர்த்து முழக்கமிட்டார்;
பொங்கும் தமிழுணர்வைப் போக்க வழிவகுத்தார்;
எங்கும் எழுதினார் இந்திப் புலைமொழியை!
இந்த நிலைஎதிர்க்க இந்நாட்டில் செந்தமிழர்
மந்த நிலையடைந்தார் மாண்பெல்லாம் தாம்மறந்தார்;
தட்டி உரைக்கத் தமிழர் சிலர்முயன்றால்
கட்டுக் கதையைக் கழறிடுவார்; என்னென்றால்,
ஒற்றுமை இந்தியால் ஓங்கி வளருமாம்;
கற்றலே வேண்டுமாம் கட்டாயம் என்றிடுவார்;
ஒற்றுமையாம் ஒற்றுமை ஊருலகு காணாத
ஒற்றுமையைக் கண்டே உரைத்தார் முழுமடயர்!
ஒற்றுமையா எண்ணம்? உலுத்தர்; நரியியலார்;
ஒற்றுமை பற்றி உரைக்கஇவர் யாதறிவார்?
எங்கள் தமிழ்மலையாம் ஈண்டுபுகழ். வேங்கடம்
பொங்குவளப் பீர்மேடு தேவிகுளம் என்றிவற்றை
ஆந்திரரும் கேரளரும் ஆளுதலே வேண்டுமென்றார்;
ஏந்துபுகழ்ச் செந்தமிழர்க் கில்லையெனக் கூறிவிட்டார்;
காரணமோ அங்குக் கழறுமொழி அஃதென்றார்;
பாரதத்தின் ஒற்றுமையைப் பாங்காய் உரைத்திடுவார்;
இந்திமொழி கட்டாயம் இங்கிருக்க வேண்டுமென்பார்;
இந்திமொழி கற்றால்தான் எந்தத் தொழிலுமென்பார்;
இந்தி பரவியதும் இந்நா டெமதென்பார்
செந்தமிழர் செத்தொழிவார் இந்தியவர் சீர்பெறுவார்;
இந்த விரகை இனியும் விடலாமோ?
சேரர்தம் நன்னாடு கேரளமாய் ஆனதுவும்
ஆரியம் சேர்ந்தமையால் ஆன முடிவன்றோ?

அன்னை தமிழ்மொழி ஆந்திரமாய் மாறியதும்
பின்னை வரலாறு கண்ட பிளவன்றோ?
பின்பும் தமிழைப் பிறமொழி ஆட்கொண்டால்
அன்புத் தமிழடையும் அல்லல் சொலுந்தரமோ?
தாய்மொழியாம் எங்கள் தமிழ்காப்போம்; புன்மைமிகு
சேய்மொழியாம் இந்தியைச் சேரவிடோம் என்றறைந்தால்
குன்றும் அறிவுடையர் கூவல் தவளையென்பார்
பன்மொழியும் கற்றால் பயனன்றித் தீதுளதோ?
நோக்கம் சிறமின் நுவலிந்தி கன்மினென
ஊக்கம் புகட்டி உருவழியச் சொற்றிடுவார்;
நோக்கம் உயர்ந்தவர் செய்கை எனில்கேட்பீர்
ஒன்றுபட்ட நாட்டின் உயர்மன்றம் தானமைத்து
நன்று விரைகின்ற நானிலத்தில் இந்நாள்
உலக ஒருமையதே உள்மகிழ் முன்னேற்றம்!
நலமேவும் ஒற்றுமை நண்ணுமொழி யாலென்னில்
நன்றன்றோ ஆங்கிலமே நம்மாட்சி ஏற்றிடுதல்
ஒன்றோ படுபயன்தாம் ஓரா யிரம்பெறுவோம்;
நாட்டின் பலவிடத்தும் நாம்சென்று வந்திடலாம்;
கூட்டு முறையில் குறையாவும் நீக்கிடலாம்;
சீர்த்த அறிவியலைச் செப்பமுடன் கற்றிடலாம்;
கூர்த்த அறிவுடையர் கூட்டம் மிகப்பெறலாம்;
நல்ல செகப்பிரியர் நாடகங்கள் கற்றிடலாம்;
எல்லா வகைதனிலும் ஏற்படுமே முன்னேற்றம்;
செந்தமிழும் எற்றுக்குச் சேரும் பகைஎதற்கோ?
இந்திமொழி ஏற்றுக் கிவணுள்ள பன்மொழிகள்
நல்ல இலக்கியங்கள் நந்தம் திருக்குறள்
பல்லோர் புகழும் பகவத்கீ தைகள்
இவைதாம் எதற்கோ? இவைதம்மைப் போக்கி
நவையில்லா ஒற்றுமையை ஞாலத்துத் தோற்றிட்டால்
ஆகும் பரந்த அறிவாம்; அதைவிட்டே
ஆகாகா! இந்தியினை ஆட்சிமொழி ஆக்கிவிட்டால்
ஒற்றுமை காண்போம் உயர்ந்திடுவோம் என்றுரைத்தல்
வெற்றுரையே அன்றி விளைபயனும் உண்டாமோ!
ஆங்கிலத்தை விட்டே அழகில்லா இந்தியினை
ஆட்சிமொழி ஆக்கினால் ஆமோ பரந்தறிவே?
ஆட்சி செலுத்திவரும் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு
மாட்சியிலா இந்தி மதிப்படையச் செய்திடுவார்
இன்னார் நரிச்செயலை ஈங்கிருப்பார் சற்றுணரார்;
என்ன முறையில் எடுத்துரைப்போம் இன்னவர்க்கே!
ஒன்றுரைப்போம் கேளீரோ! உண்மைத் தமிழுணர்விங்(கு)
என்றும் அழியா தெதுவரினும் அஞ்சாது.
கன்னித் தமிழ்மறவன் கற்சிறைபோல் தோளுடையான்
தன்னைத் தமிழ்க்களித்தான் அன்னவனைத் தூக்கிலிட்டீர்;

வேல்மார்பன் மாய்ந்தான்; விளங்குபுகழ் கொண்டுயர்ந்தான்;
பால்போல் தமிழில் படுநஞ்சைப் பெய்தல்போல்
இந்தியினைச் சேர்த்தீர் எதிர்த்திட்டான் என்கொழுநன்
அந்தோ! அவனை அழித்தீர் அழிந்தானோ?
செந்தமிழாய் ஆனான் செழும்புவியில் வாழ்கின்றான்;
எந்தமிழ்க்கு வாழ்ந்தார் எவரும் அழிந்திலர்காண்!
என்னுளன் மெய்யறிவுக் கெட்டுணையும் அஞ்சுகிலேன்,
அன்னான் பிழைஏதும் ஆற்றான் அவன்பிழைத்தீர்;
வந்தேன்யான் அன்பன் வழிச்செல்வேன் ஆனாலும்,
அந்த மகிழ்வை அடைதல்என் நல்வினையே!
யான் போனால் பின்வருதற் கின்னும் பலருளரால்!
மேன்மேலும் உம்மை விரட்டியடித் திடுவார்;
முத்தைத் துகள்மூடின் முத்தொளிதான் சாம்பிடுமோ?
குத்தும்வாள் கோணலுறின் கூர்மை மழுங்கிடுமோ?
செங்கதிர் தன்னைச் சிறுகை மறைத்துவிடின்
பொங்கழல் ஞாயிறும் பொய்யாகிப் போய்விடுமோ?
ஆற்றல் மிகுதமிழர் அஞ்சிமயல் கொண்டாலும்
நேற்றைக் கிருந்தமறம் நீங்கித்தான் போய்விடுமோ?
கூற்றே எதிர்த்தாலும் கூடி எதிர்நிற்கும்
ஆற்றல் மிகுந்தார் அரசாள் திறமிக்கார்;
முன்னாள் அருங்கணவன் மூள்போரில் மாண்டாலும்
பின்னாள் தமதருமைப் பிள்ளைகளைப் போர்க்கனுப்பும்
அஞ்சாத பெண்டிர் அணிதமிழ் நாட்டிலுண்டு;
தஞ்சாதல் நேரினும் தாய்மொழியைக் காப்பதற்குத்
துஞ்சா துழைக்கும் துணிவுடையார் மிக்கவுண்டே;
ஆளன் பழிசுமந்தே ஆளரசால் வெட்டுண்ண,
மாளாத் துயர்கூர்ந்து மல்குபுகழ் வேந்தனையும்
நல்லறத்தால் தண்டித்த நங்கை குலமுமுண்டே;
அல்லறத்தால் எம்மை அழுக்க வருவார்யார்?
ஆதலினால் என்றன் அருமைத் தமிழ்க்குலத்தீர்!
சாதலுறும் உங்கள் தமிழ்காக்கச் செத்திடுவீர்;
அன்புக் குரலால் அகவும் அணிமயிலைத்
தன்போல் மயிலொன்று தாழ்த்தி யகன்றிடுமோ?
குக்கூவெனப் பாடும் குயிலைக் குயிலொன்று
நக்கு வெறுப்பதுதான் ஞாலப் புதுமையன்றோ?
செங்கண் அரிமுழங்கச் செற்றிடுமோ மற்றொன்று?
கங்குற் கதறுந்தை காய்ந்திடுமோ தன்னினத்தை?
மங்காத் தமிழினமும் மானம் உணர்ந்தெழுந்தால்
பொங்கிவரும் தீயோர் பொலிந்தாட்சி செய்வாரோ!
இன்றிவ் விழிவை எதிர்க்கா தொடுங்கிவிடின்
கன்னித் தமிழ்மறையும்; கைவிலங்கு பூண்டிடுவோம்;
நன்றியுள நாயும் நமையொதுக்கும்; அந்நாளில்
நன்றே தவறுணர்வோம் நாம்.

இரா. சுலோசனா,
அரசினர் மருத்துவ நிலையம், கடலூர்.

வடிவமை கருவி மருத்துவம்.

PLASTIC SURGERY.

நமது உடம்பின் சில பகுதிகள் எதிர்பாராத கேடுகளால் உருக்குலைந்து போதல் உண்டு. நெருப்பினாலும் வண்டிகளின் மோதல்களாலும் ஏற்படும் அழிவுகள் இயற்கை அழகைக் கெடுத்து அருவருக்கத்தக்க மாற்றங்களை உடலில் உண்டாக்கி விடுகின்றன. இக்குறைகளை நீக்கி உடலின் சிதைந்த பகுதிகளை மீண்டும் இயற்கையின் எழில்பெற விளங்கச் செய்யும் வழிகள் தற்பொழுது கைதேர்ந்த அறுவை மருத்துவர்தம் நுணுக்கமான ஆராய்ச்சிகளின் முடிவாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. உடலில் சிதறிய பகுதி மீண்டும் அதன் இயற்கையான அமைப்பையும் உருவத்தையும் பெறச் செய்யும் இப் பண்டுவ முறைக்கு வடிவமை கருவி மருத்துவம் (Plastic Surgery) என்று பெயர். இவ் வடிவமை கருவி மருத்துவத்தில் இருவகை உண்டு. 1) நேர் ஒட்டு (Free-graft)முறை (2) முன்னிணை ஒட்டு (Pedicle-graft.) முறை என்பவையே அவை.

நேர் ஒட்டு: தீப் புண் போன்ற புண்கள் பல நாட்கள் ஆறுமல் தோல் மூடப்படாமல் இருக்கும். இது போன்ற புண்களை நம் உடலில் திடமான தோல் பாகத்தை மேலாக அறுத்தெடுத்துப் புண்பட்ட இடங்களின்மேல் ஒட்ட வைப்பார்கள். தோல் ஒட்டப்பட்ட இடம் நாளடைவில் குருதி ஓட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு புண்ணையும் ஆற வைத்துவிடும். இது முழுதும் ஆறிவர ஏழிலிருந்து பத்து நாட்களாகும். இதை மிகக் கவனமுடன் கண்காணித்து வரவேண்டும். அறுத்தெடுக்கப் பட்ட இடத்தைப் 'பெனிசிலின்' (Penicillin) அல்லது 'சல்பர்' (Sulphur) போன்ற மருந்துகளைப் போட்டு ஆறவைத்து விடலாம்.

இரண்டாவது முறை முன்னிணை ஒட்டு: இது முகங்களில் ஏற்படும் குறைகளை நீக்க மிகவும் பயனுள்ளதாகும். நெருப்பில் வழண்டு போதலாலும், போக்கு வரத்துகளினாலும், வெட்டு, குத்து போன்ற காயங்களினாலும் முகத்தில் ஏற்படும் அழிவுகளை நீக்க உதவுகிறது. உதடு, மூக்கு, புருவம், நெற்றி, கன்னம் இவை வடுக்களினால் சிதறி உருச் சிதைந்து விடுகின்றன. இந்தமுறையினால் இவற்றைப்போக்க முடிகிறது. எடுத்துக்காட்டாக ஒருவர்க்கு மூக்கின் தண்டு இல்லாமலிருப்பதாக வைத்துக் கொள்வோம். அதே மாந்தனின் வயிறு, அல்லது தொடை போன்ற பகுதிகளின் தோலின் நிறமும், மூக்கின் நிறமும் ஏறக்குறைய ஒன்றியிருக்க வேண்டும். பின் அந்த

இடத்தைத் தூய்மைசெய்து தேவையான அளவிற்குத் தோலை ஒரு கிள்ளு(Pinch)தூக்கிப்பிடித்து நடுவே கத்தியால் அறுத்துப் பிரித்தெடுத்தல் வேண்டும். பிரித்த பகுதியை அப்படியே உருட்டிக் குழாய்போலத் தைத்துவிடுவர். அடிப் பகுதியையும் தைத்து விடுவர் மேலே எழுப்பப்பட்ட தோலின் மறுநுனியை (தொடுக்கப்படும் பகுதி உடலின் வெகு தொலைவிலிருப்பதால்) ஊறுபட்ட ஆளின்மணிக்கட்டில் சேர்த்து ஒட்ட வைத்துவிடுவர். 14–இலிருந்து 21 நாட்களுக்குப் பிறகு வயிற்றுத் தோலுக்கும் மணிக்கட்டில் ஒட்ட வைத்த தோலுக்கும் போதுமான குருதி ஓட்டம் ஏற்பட்டுத் தோல் வலுவடைந்திருக்கும். பின்னர் வயிற்றுத் தோலை அறுத்தெடுத்துத் தேவையான இடத்தில் அதை ஒட்டவைத்துத் தைத்து விடுவார்கள். மணிக்கட்டிலிருந்து மூக்கிற்கும் தேவையான அளவிற்குக் குருதியோட்டம் ஏற்பட்ட பின்னர் மணிக்கட்டிலுள்ள தொடர்பை அறுத்துப் பிரித்து விடுவார்கள். பின் மூக்கின் வடிவத்தைத் தேவையான அளவு சரி செய்து விடுவார்கள் இஃது ஏறக்குறைய முன்னைய உருவத்தை ஒத்திருக்கும்.

இந்த வடிவமை கருவி மருத்துவம் எவ்வகையான உறுப்புகளையும் திரும்பப்பெற மிக உதவியாக அமைந்துள்ளது. இந்த அறுவை முறையைக் கைதேர்ந்த அடைவு (அநுபவம்) உள்ள மருத்துவர்களே அழகாகவும் தெளிவாகவும் செய்கின்றனர். இந்த அறுவை முறைக்கு வேண்டிய கருவி தனிப்பட்ட கூர்ங் கத்தி ஒன்றிருக்கும். இதைக்கொண்டு தோலை அறுத்தெடுப்பர். அறுத்தெடுக்கும்பொழுது தோலைச் சுருக்கமில்லாமல் அகற்றி மேலாகத் தோலை வழித்தெடுப்பர். தோலை வழித்தெடுக்கும் பொழுதோ அல்லது உருட்டித் தைக்கும் பொழுதோ அஃது ஒரே அளவாக இருத்தல் வேண்டும்.

இப் பண்டுவம் செய்யும்பொழுது கீழ்க்கண்ட முறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

1. தோல் அறுத்தெடுக்கப்படுமுன் தோலின் நிறப் பொருத்தத்தை ஒத்திட்டுப் பார்த்தல் வேண்டும்.
2. கொடுக்கப்படும் தோல் (Donor)நோய் படியாமலும், சொறி சிறங்குகளில்லாமலும் வலுவுள்ளதாகவும் இருக்குமாறு தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.
3. தோற் பாகத்தை அறுவைக்கு முன் மிக நுணுக்கமாகத் தூய்மைப் படுத்த வேண்டும். நோய் செய்யும் நுண்ணுயிர் ஒழிப்பு மருந்துகள் மூலம் கழுவித் துடைத்தெடுத்துத் தூய்மைப் படுத்தவேண்டும்.
4. அறுவைக்குப்பின் அறுவைக்குள்ளான பகுதி மிகக் கவனமுடன் கையாளப்படல் வேண்டும். அப்பகுதி தூய்மையான Gauze (ஒருவகை மெல்லிய துணியி)னால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

இதைப்பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்களோ...

நாங்கள் இப்படித்தான் கருதுகின்றோம்!

(தமிழ் நாட்டில் நடத்திவரும் நாள், கிழமை, திங்கள் தாள்களைப் பற்றி ஒவ்வொருவரும் பலவாராகக் கருதலாம். கருதுகின்ற ஆட்களையும், தாள்களையும் பொத்துதவை அவை. நாங்கள் அவைபற்றி என்ன கருதுகின்றோம் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளல் வேண்டாமா? அதற்காகவே இக்கட்டுரைத் தொடர்...! இதனால் துன்புறுவாரும் இன்புறுவாரும் பலர் இருக்கலாம். அவ்விருதிறத்தாரைப் பற்றியும் எங்கட்குக் கவலை இல்லை. எங்கட்குத் தோன்றிய உண்மை இது மக்களின் நல்லுணர்வைக்கெடுக்கும் இத்தகைய தாளிகைகளை வெளியிட இந் நாட்டில் அத் தாளிகையாளர்க்கு எங்ஙனம் உரிமை உள்ளதோ, அங்ஙனமே எங்கட்கும் அவை பற்றிக் குறை, நிறை கூற உரிமை யுண்டு. இவ் வுரிமைக்கு அறிவு, மனம், பண்பாடு இவற்றின் வளர்ச்சியே அடிப்படைக் காரணமாகும்.

— ஆசிரியர்)

தினத் தந்தி

மக்கள் முற்போக்கிதழ் என்று தன்னை அழைத்துக்கொண்டு மக்களை ஒழுக்கக் கேடெனும் நாற்றக் குழியில் தள்ளிவரும் நாளிதழ் இது பத்துப் பதினைந்து ஆண்டுகளில் தமிழ்ப் பொது மக்களின் உணர்வுகள் ஆழமற்றுப் போய், அவருட் பெரும்பாலோர் ஒழுக்கக்கேட்டிலும், திரைப்பட வேட்கையிலும் வெற்றுக் களியாட்டங்களிலும் விழுந்து தடுமாறி, இழி சுவைகளில் இன்பங் காணும் வறுமொழியாளராக மாறி வந்துள்ள கேட்டினுக்குப் பெரும்பொறுப்பு தினத்தந்தி போன்ற தாளிகைகளையே சாரும். பாவியல் உணர்வு உயிர்த் தோற்றத்துக்கும், பெருக்கத்

இதே முறையில் எலும்பு முறிவுகளினால் ஏற்படும் சிதைவுகளையும் சரிப்படுத்தலாம். முகத்தின் எந்தப் பாகத்திலாவது எலும்புச்சிதைவு ஏற்பட்டால் உடலின் வேறு பெரிய எலும்புகள் பயன்படும். தொடை, கால் எலும்பு போன்றவைகளினின்று சிறிதளவு எலும்பைச் செதுக்கியெடுத்துக் குறைபாடடைந்த இடத்தில் பொருத்தி வடிவம் அமைப்பார்கள்.

தற்பொழுது சென்னை அரசினர் பொது மருத்துவ விடுதியிலும் மற்றும் பல மருத்துவ மனைகளிலும் ஊறுபட்ட மக்கள் அறுவை செய்து வெற்றியோடு திரும்புகின்றனர். அழகையிழந்தவர்கள் திரும்ப அழகைப் பெறவும் உறுப்புக் குறைவுற்றவர்கள் திரும்பவும் தம் நல்லுருவத்தைப் பெற்று மகிழ்வுடன் உலவி வரவும் இவ்வறுவை மருத்துவம் மிகவும் பயனுடையதாக இருக்கின்றது. *

துக்கும் அடிப்படையாக இயற்கைத் தெய்வத்தால் அமைக்கப் பெற்ற தூய நல்லுணர்வு. அஃது ஆக்கத்துக்கும், நல்வாழ்வுக்கும், மாந்தப் பிறவியின் உயர்வுக்கும் பயன்படுத்தப் பெறல் வேண்டுமே யன்றி, மக்களைக் கேட்டினுக்கும் கீழ்மைக்கும் அழைத்துச் செல்லக் கருவியாதல் கூடாது இன்றைய திரைப் படங்களும் செய்தி யிதழ்களும் இதனை உணர்வதில்லை. அவற்றுள் தினத் தந்தி தலை நிற்கின்றது. மகப்பேற்று மருத்துவன் காமவுணர்வு வயப்படல் எங்ஙனம் மக்களால் வெறுத்தற்கும் பழித்தற்கும் உரியதோ, அஃதொப்பதே ஆடவர் பெண்டிற் உறவு பற்றிய நிகழ்ச்சிகளை எடுத்தியம்புவதில் கீழ்மை உணர்வுகட் கிடங் கொடுக்கும் செய்தியாளர், எழுத்தாளர் செயலுமாகும். ஆடவர் பெண்டிற் தம் கீழான உறவுச் செய்திகட்கே முதலிடம் தந்து, அவற்றால் பொதுமக்களைக் கவர்ந்து, இழிவாணிகம் புரிந்து பெரும் பொருள் திரட்டுவதில் கண்ணுங் கருத்துமாயிருக்கும் இவ்விதழ், நல்லுணர்விற் பாய்ந்திருக்கும் நஞ்சு! பாலியல் உணர்வு இயல்பாய் அமர்ந்தது என்றும், மக்கள் பாலியற் கிளர் வூட்டுஞ் செய்திகளையே விரும்பிப் படிக்கின்றனர் என்றும், மக்கள் விருப்பத்தாலேயே தாங்கள் அவ்வாறு செய்வதாகவும் இத்தகைய இதழ்கள் கூறித் தப்பித்துக்கொள்ளப் பார்க்கின்றன. ஆனால், உண்மையில் இவை மக்கள் நலனுக்காக அவ்வாறு செய்யவில்லை. மக்களின் நெகிழ்ந்த உணர்வுகளைப் பயன் படுத்திக் காசு பறித்தலே இவற்றின் நோக்கம். சிலகால் மக்கள் விருப்பம், அவற்றின் தன்னலக் கொள்கைக்கு மாறாக இருக்கும் பொழுது இத்தகைய இதழ்கள், மக்கள்விருப்பத்தை மதிக்காமல் நடந்துகொள்வதையும், அப்பொழுது தம் கொள்கையைப் பெரிதுபடுத்திப் பேசுவதையும் காண்கின்றோமே!

ஒழுக்கங்கெட்ட திரைக் கூத்திகளின் வெட்கங்கெட்ட செயல்களையெல்லாம் படம்பிடித்துப் போட்டும், உடல் வாளிப்பையும் உறுப்புகளையும் காட்டும் புகைப் படங்களை வெளியிட்டும் நல்லுணர்வில் முதிரவேண்டிய இளைஞர்தம் உள்ளங்களை இத்தகைய களி வெறிக்கும், காம வுணர்வுக்கும் இழுத்துச் சென்று கொண்டிருக்கும் இவ்விதழ், என்னதான் தமிழ், தமிழர் நலம் என்று பேசினும், தமிழர் விடுதலைக்கு முதல் தடையாக விருக்கின்றது என்றுதான் கூறல்வேண்டும். திரைப்படங்களால் பரவிவரும் புறப் பண்பாடுகட்கு முதலிடம் அளித்தும், வேண்டுமென்றே பிழையான தமிழில் எழுதியும் அவற்றிலேயே வாணிகம் புரியும் இவ்விதழைத் தமிழர் நலம் காப்பது என்று எப்படிக் கூறமுடியும்? குமுக நலங்காக்கும் சான்றோர், அறிஞர் அறிவியலார் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளை மக்கட்கு எடுத்து விளக்கினால், மக்கள் திருந்தவும், தங்களை உயர்த்திக் கொள்ளவும் வழிபிறக்கும். ''சிரிதருக்கு ஆண்மகவு பிறந்தது!'' 'பத்மினிக்குக் குழந்தை பிறந்தது' பூவராகன் மனைவி தாமே சமையல் செய்

மக்களவை

பார்ப்பனர் புகுந்த பள்ளி......!

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம். நான் சென்னை அடையாற்றிலுள்ள மையத் தொழில் நுணுக்கப் பள்ளிகளில் (Central distributes of Technology) ஒன்றில் படிக்கும் மாணவன். அண்மையில் எங்கள் பள்ளிகளின் புதிய கட்டிடங்களை திரு. இலால்பகதூர் சாத்திரி அவர்கள் திறந்து வைத்தார். அன்றைய விழாவில் ஒரு பொதுக்கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக் கூட்டத்தில் கடவுள் வாழ்த்து பாடப்பெற்றது. பாட்டைப் பாடியவர் இரண்டு மூன்று பெண்கள். பாட்டு தமிழிலேயே இல்லை— தெலுங்கிலோ அல்லது வட மொழியிலோ இருந்திருக்கலாம்; என்றால் அறியக்கூடவில்லை. தமிழிசை இயக்கம் தொடங்கிப் பற்பல எதிர்ப்புகளிடையே வெற்றிபெற்று இன்று பொதுவாகத் தமிழ்ப் பாட்டுகளே பாடப்பெற்று வருகின்ற இந்த நாளிலே, ஒரு சிறப்பான கூட்டத்தில் தமிழிலே கடவுள் வாழ்த்துப் பாடப்பெறுமல், வேற்று மொழியில் பாடப் பட்டது வருந்தத்தக்கது. அதைப்பாடிய பெண்கள் பார்ப்பனப் பெண்கள் என்று அறிந்து குழப்பம் தீர்ந்தேன். இவ் விழாக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவருள் தமிழ்த் திரைப்பட இயக்குநர் திரு. சுப்பிரமணியமும் ஒருவர் ஆவார். அவர் பார்ப்பனர்!

திரு. சுப்பிரமணியத்தின் மகன் ஒருவர் அமெரிக்கா சென்று பொதுமக்கள் தொடர்புக் கலையை கற்றுவந்தவர்; திரு. கிருட்டிணசாமி என்னும் பெயரினர். இவர் அங்குப் படிக்கும் மாணவர்களுக்காக **'இந்தியப் பண்பாடு'** எனும் பாடத்திற்கான வகுப்புகள் எடுப்பதுண்டாம். அப்பொழுது இவர் இந்திய மொழிகளைப்பற்றிக் கூறுமிடத்துத் 'தொடக்கத்தில் இந்தியாவெங்கிலும் வடமொழி (சமற்கிருதம்) மட்டிலும்தான் நிலவி வந்ததாகவும், அதனின்றும், கிளைத்தெழுந்தவைதாம் எல்லா இந்திய மொழிகள் என்றும், அவ்வகையில் முதன் முதலாகப் பிரிந்துவந்தது தமிழ்' எனவும், தமிழ் முழு மொழியாக வளர்ச்சி பெற்றது

கிறார் என்று படங்களுடன் செய்தி வெளியிடுவதால் யாருக்கு என்ன பயன்? இச் செய்திகளால் உண்மையாகவே நற்பயன் விளைகின்றது என ஆசிரியர் மெய்ப்பித்துக் காட்டுவாராயின், உண்மையாகவே நாம் நம் கருத்துக்கு வருந்தித் திருத்திக் கொள்ள அணியமாயிருக்கின்றோம்.

— கல்லாடன்.

கி. மு. அல்லது கி. பி. முதல் நூற்றுண்டுதான் எனவும் கூறினதாகத் தெரியவருகிறது. மேலும் இந்திய மக்கள் அனைவர்க்குமே பொதுவான பண்பாடு இராமாயணம், மகா பாரதம், பகவத் கீதை ஆகியவைகூறும் பண்பாடுதான் எனவும் கூறி வந்தனராம். அந்தத் திரைப்படப் பயிற்சி நிலையத்தில் தென்னிந்திய மாணவர்களோடு பல வடவிந்திய மாணவர்களும் கல்வி பயிலுகின்றனர். அவர்கள் யாவரும் இருக்கும் வகுப்பில் தான் அவர், மொழியாராய்ச்சி அறிஞரெல்லாரும் உரைத்த உண்மைகளைப் பொய்யாக்கித் தம் உண்மைக் கோலத்தைக் காட்டியிருக்கிருர். பெரியார் அவர்கள் குமுகாயத் துறையைச் சிறிது கைவிட்டு விட்டு, அரசியல் துறைக்குச் சென்றுவிட்டதன் காரணமாக எழுந்த தீமைகளே இவை!

இவ்வகையினர் தமிழைக் காட்டிக்கொடுக்கும் செயல்களை முறியடிக்கவும், தமிம், தமிழர், தமிழ்நாடு இவற்றைக் காத்து விடுவிக்கவும் 'தென்மொழி' மேலும் மேலும் முயலும் என நம்புகிரேம்.

தங்களன்புள்ள,

மலரன்பன், சென்னை - 33.

எதை எழுத......?

ஆசிரியர் அவர்கட்கு,

''மக்களவை'' கூட்டிமறம் பேசென் றீர்கள்!
வண்ணமிகு தமிழ்வளர்ச்சி கூறென் றீர்கள்!
சிக்கலுறும் குமுகாயம் விரைவில் உய்யச்
சீர்திருத்தக் கருத்துமடல் எழுதென் றீர்கள்!
தக்கதுவாம் சிறியதொரு மடலுந் தீட்ட
தண்டமிழ்த்தாய் தாள்வணங்கி நிமிர்ந்தேன்;என்முன்
கொக்கரிக்கும் மொழிக்குருடர் கூட்டம் ஒன்றுய்க்
கொஞ்சுமொழி செந்தமிழைக் குறைகூ றிற்றே!

தனித்தமிழில் கதையெழுதல் முடியா தென்றே
''தான்தோன் றிச் செயகாந்தன் மொழிதல் கண்டேன்;
கனித்தமிழைக் கால்வேறு கைவே றுக்கிக்
''கல்கண்டு'' என்றெழுது மிதழுங் கண்டேன்;
பனித்தமிழின் பண்பறியாக் கிழமொன் றிங்குப்
பைந்தமிழைத் ''தந்திநடை'' யாக்கல் கண்டேன்;
இனித்தமிழில் எழுதுமுறை இதுதான் ஏற்பாய்
இனிய''மணிப் பிரவாளம்'' என்ருர்''அ(வ்)வாள்''!

இக்கேடு கூறுவதோ? இல்லை; மக்கள்
இருகவளம் சோறின்றிச் சாகின் றுரே;
அக்கேடு கூறுவதோ? அதனைக் கேட்டும்
''அரிசிக்குப் பஞ்சமென்(று) ஆர் சொன்னுர்''என்றே

வக்கில்லா முதலமைச்சர் உரைக்கும் இந்த
வம்புரையைக் கூறுவதோ? குமுகா யத்தின்
எக்கேடு கூறுவதோ! இயம்பி டுங்கள்;
எழுதுகிறேன் அடுத்துமடல் ஒவ்வொன்றுக.

– பல்லவபுரத்தான், சென்னை-43.

தமிழ் (அறியா) ஆசிரியர்கள்!

அன்புள்ள ஆசிரியரவர்கட்கு.

திருவையாறு அரசர் கல்லூரித் தலைவரின் திருவிளையாடல்களைப் படித்து மனம் பதைத்தேன். வாழ்வது தமிழ் நாட்டில்; பேசுவது 'தமிழ் மொழி; தமிழ் மாணுக்கர்கட்கு அளிக்கப்படும் கெடுதியை நினைத்து வருந்தினேன்.

பொதுவாக எங்கள் (சேலம்) அரசினர் கல்லூரியில் அவ்வளவாகத் தமிழுக்கு மதிப்பளிப்பதில்லை என்றே கூறலாம். எங்களுக்கு வரும் தமிழ் விரிவுரையாளர்கள் ஆங்கிலத்தில் பெயர் எண்களைக் கூப்பிடுவது, மாணவர்களிடம் மிகுதியும் ஆங்கில மொழியினையே பயன்படுத்துவது போன்ற கொடுமைகளை இங்குதான் காண முடியும்.

திருக்குறள் நடத்திய முதல் நாள் அதில் 1330 அதிகாரம் என ஆசிரியர் கூறினர். அதனால் வகுப்பில் எழுந்த நகைப்பைக் கண்டு ஆசிரியர் திருத்திக் கொண்டார். சிலப்பதிகாரம் நடத்தும் பொழுது மாதவியைக் கோவலன் பிரிந்து வந்தபின் கண்ணகி புலம்பினாள் எனக் கூற மறுபடியும் வகுப்பு நகையால் ஆரவாரித்தது. அவர்மேல் குற்றமில்லை; எம். ஏ. படித்தவர்தாம்! என்ன செய்ய? பொதுவாக மாணவர்களும் தமிழில் பேசுவதை–தூய தமிழில் பேசுவதை இழிவாக நினைக்கின்றனர். என்னைச் சிலர் இழித்துக் கூறினாலும் நான் கவலை அடைவதில்லை.

என்னுடைய பெயர் பூ. இரத்தினவேலு. திரு. ஞா. தேவநேயப் பாவாணர் எழுதிய ஒரு நூலிலிருந்து இரத்தினம் என்பது வட சொல் என்றும் அதற்கு நல்ல தமிழ்ச்சொல் மணி என்றும் அறிந்து மணிவேலன் எனச் சூட்டிக்கொண்டேன்.

அமைச்சருக்கு விடுத்த மடலில் ஐம்பதாயிரம் கையொப்பங்கள் போதா. ஐந்து இலக்கமும் போதா; ஐம்பது இலக்கம் தேவை; "தென்மொழி"யை அறியாத தமிழன்பர்கள் நிறைய இருப்பார்போலும்! அந்நிலை போக்கச் சிறந்த விளம்பரம் தேவை.

தங்கள் அன்புள்ள,

பூ. மணிவேலன்,

புகுமுக வகுப்பு, சேலம் அரசினர் கல்லூரி.

அரசினர் தடவும் சுண்ணாம்பும், வெண்ணெயும்...!

பேரன்பு கெழுமிய ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம் பல.

பாக்கித்தான் போக்கிலிகள் (பெரும்பாலும் வடவர்கள்) புகலிடம் தேடிவந்து ஏறத்தாழ மூன்று திங்கள்கட்கு மேலாகியும் நாட்செலவிற்கு உருபா 2-50 அளித்து வரும் அரசு, பர்மாத் தமிழர்களுக்கு வந்த முதல் கிழமையில் உருபா 2-50-உம் இரண்டாவது கிழமை உருபா 1-50-உம், மூன்றாவது கிழமை புகலிடம்விட்டு வெளியேற வேண்டும் என்று ஆணையையும் அளிக்கின்றது. இத்தனைக்கும் தமிழ் மக்கள் வடவர்களைப்போல் பண்ணையில் பணி செய்ய மறுத்து நில உரிமை கேட்கவுமில்லை; ஃ ண் டை யி ல் சென்று கொள்ளையடிக்கவுமில்லை. கல்லெடுத்து அடிக்கின்ற அளவிற்குக் கல் நெஞ்சர்களாகவுமில்லை. என்னதான் நடுநிலைமையோ?

—மா. கோவிந்தராசன், இராவுசாப்பட்டி, தஞ்சை.

தமிழா? – டமிலா?

அன்புள்ள ஆசிரியருக்கு,

வள்ளுவனும், ந க் கீ ர னு ம், இளங்கோவும், கம்பரும், கபிலரும் தங்கள் உயிர்போல் பேணி வளர்த்த செந்தமிழ் இன்று ஒரு புறம் ஆங்கிலத்தாலும் மறுபுறம் இந்தியாலும் அழிக்கப்படும் நிலையில் இருக்கின்றது. நம்மவர்கள் உண்மை நிலை உணராமல் இருப்பது வருந்தத்தக்கது. ஆங்கிலேயன் அவனுடைய சொந்த நலனுக்காக அவனுடைய வாயில் நுழையாத பல செந்தமிழ்ச் சொற்களை அவன் விருப்பம்போல் ஆங்கிலத்தில் எழுதிப்பலுக்கினான் (உச்சரித்தான்). அச் செந்தமிழ்ச் சொற்களில் நமது இ ன் னு யி ர் மொழியின் பெயரும் ஒன்றாகும். அவன் தமிழை ஆங்கிலத்தில் டமில் (Tamil) என்று எழுதி வழங்கினான். நம்மவர்களும் இதே வழக்கை இன்றும் பின்பற்றி வருகிறார்கள்; வெட்கம்! வெட்கம்! ஏன் தமிழைத் தமிழ் (Thamizh) என்று எழுதக்கூடாது? கேரளத்தில் இன்றும் ழகரச் சொற்கள் ஆங்கிலத்திலும் அப்படியே எழுதுவது நோக்கத்தக்கது. எடுத்துக்காட்டாக கோழிக்கோடு என்பதைப் பாருங்கள் (Kozhikode), இனியாவது தமிழ் ஆர்வம் கொண்டவர்கள் தமிழைத் தமிழ் என்றே வழங்குவார்களாக! மற்றவர்களும் இதைப் பின்பற்ற முயற்சி செய்வார்களாக.

இங்ஙனம்,

க. மனோகரன், பி. எசி. சென்னை.

முகவர்கள் கவனத்திற்கு

- ஒவ்வோர் ஆங்கில மாதமும், 5-ஆம் நாளுக்குள் முந்தைய மாதப் பட்டியல் தொகையைக் கட்டாயம் விடுத்துவிடவும்.
- படிகள் சரிபார்த்தே விடுக்கப் பெறுவதால், இடையில் ஏற்படும் குறைபாடுகளுக்கு அலுவலகம் பொறுப்பாகாது.
- தேவையான மிகுதிப் படிகட்கு முன்கூட்டியே எழுதவும்.

தென்மொழி பதிவு எண்: எம். 7211

பொருளடக்கம்

சுவடி ௨ ஓலை ௧௧

சிலை (மார்கழி) தி. பி. ௧௯௯௫

		பக்.
அரசியல் கோமாளிகள்!	(ஆசிரியவுரை)	௧
உயிரிகளிடையே கூட்டுவாழ்க்கை.		௬
கனவு!.........	(உளவியல்)	௧௩
சைமன் பொலிவர்	(வரலாறு)	௧௭
அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு		௨௨
பாட்டரங்கம்.		௨௮
இந்தியக் கூட்டரசின் இந்திக் கொள்கை.		௩௩
பல்கலைக் கழகமா? பல்பிழைக் கழகமா?		௩௭
தமிழ்ப் பெண்களுக்கு...!	(மனையியல்)	௪௬
அடிப்படை அளவை முறைகள்	(விளங்கியல்)	௫௪
ஈட்டியம்மையின் எழுச்சி	(பாடல்)	௬௧
வடிவமை கருவி மருத்துவம்.	மருத்துவம்)	௬௫

மற்றும், மக்களவை, நாடகம், சொல்லாய்வு முதலியன.

விலை ௫0- காசு

மித்திரா அச்சகம், கடலூர் 2.